புதிய சமுதாயம்

KDN 10509 ஆசிரியர்: முருக சுப்பிரமணியன் 25.4.1977



மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் திரு. வி. எல். காந்தன் தலைமையில் ஓர் அணியும் தேர்தலில் மோதுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. நெகிரியிலும் பேரா மாநிலத்திலும் கூட இத்தகைய பலப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யப்பட்டுவருகிறது.

அரசியல் கட்சிகளில் ஜனநாயக மரபின்படி இத்தகைய தேர்தல் பலப்பரீட்சைகள் இயல்பேயாகும். ஆனால் இந்தப் பலப்பரீட்சைகள் ம. இ. கா. வின் கட்டுக் கோப்பையும் ஐக்கியத்தையும் ஆட்டங்காணச் செய்து கட்சியில் பிளவு உண்டாவதற்கு வழிவகுத்துவிடக் கூடாது என்பதே நமது பிரார்த்தனையாகும்.

சிறுபான்மை இந்திய சமூகத்தைப் பிரதிநிதிக்கின்ற கட்சியாக ம. இ. கா. விளங்குவதால், அதன் பலமும், கட்டுக்கோப்பும் சிதறுண்டு போகாதபடி பாதுகாத்து வருவது எல்லாமட்டங்களிலுமுள்ள ம. இ. கா. தலைவர்களின் பொறுப்பாகும். அது மட்டுமன்றி ம. இ. கா.வில் பல்வேறுநிலைகளிலும் போதிய அளவுதரமிக்கதலைவர்களைஉருவாக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. இந்நிலையில் தேர்தல் பலப்பரீட்சை, இருக்கின்ற ஒரு சில தலைவர்களையும் மூலையில் தள்ளி முடக்கிவிட வழிவகுத்து விடாதபடி, தரமிக்க-உரமிக்க தலைவர்களின் எண்ணிக்கை சமூகத்தில் மேலும்பெருகுவதற்குத்துணை புரியுமென்று நம்புகிறோம்.

தமிழ்ப்பள்ளிநிதி

"தமிழ் நேசன்" திரட்டி வருகிற தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதிக்குப் "புதிய சமுதாயம்" இதழ் அதன் வெளியீட்டு விழாவில் அறிவித்தபடி $501 நன்கொடை வழங்கியிருக்கிறது. இதற்குரிய காசோலை "நேசன்" அலுவலகத்திற்கு இருவாரங்களுக்கு முன்பு அனுப்பப்பட்டுவிட்டது.

தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி லட்சியத்தில் "புதிய சமுதாயம்" தனக்குள்ள அழுத்தமான நம்பிக்கையைப் புலப்படுத்தவே தன் சக்திக்கியன்ற இந்த நன்கொடையை வழங்கி இருக்கிறது. அதுமட்டுமன்றித் தமிழ்ப்பள்ளி மாணவர் நிதி திட்டமிட்டபடி ஒரு கோடி லட்சியத்தை எட்டுவதற்கும் "புதிய சமுதாயம்" தன்னாலான முயற்சியைச் செய்யத் தவறாது. "நேசன்" இதழுக்கு இந்தப் பணியில் "புதிய சமுதாயம்" தன் எளிய ஆதரவுக் கரத்தைத் தொடர்ந்து நல்குமென்றும் அறிவித்துக் கொள்கிறோம்.

விளையாட்டு

ஆதம்குமார்



வீறினை புதிய சமுதா யத்தின்
வெற்றிக் கோருவழி விளையாட்டு!
வெறியினை போதை நச்சு வகைக்கே
வைத்திடும் வெடியாம் விளையாட்டு!
பாரினை ஒருமைப் படுத்தியே ஆக்கப்
பணிக்கட் கிணைத்திடும் விளையாட்டு!
பரிவினை இளையர் சமுதா யத்தின்
பலமே! தேவை! நிலைநாட்டு!

சீரினை இறையின் செப்ப மிகுந்த
செயலே இயற்கை விளையாட்டு!
செறிவினை மீன்கள் கதிர்மதி கோள்கள்
செய்வன ஆற்றல் விளையாட்டு!
ஏரினை மனித இனத்தின் தேவை
எழுச்சியே வாழ்க்கை விளையாட்டு!
இங்கிணை இனங்கள் நல்லினக் கோடு
இசைபட ஒற்றுமை நிலைநாட்டு!

சோர்வினை உடலில் சுறுசுறுப் பூட்டிச்
சுந்தரம் சேர்ப்பது விளையாட்டு!
சொத்தினை-நல்வள சுபிட்சம் தன்னைச்
சேர்ப்பது தொழிலெனும் விளையாட்டு!
தேர்வினில் வெல்லல், நல்வழி செல்லல்
தெளிவுள அறிவின் விளையாட்டு!
தேனினை தமிழின் ஏற்றமே வாழ்வாய்த்
திகழ்ந்திடல் உயர்வாம் நிலைநாட்டு!

நெஞ்சினை அன்பின் நெருக்கமே காதல்
நிகழ்வெனும் தத்துவ விளையாட்டு!
நிலையினை நோக்கிடில் காதலில் வஞ்சம்
நிகழ்வது வேண்டா விளையாட்டு!
பஞ்சினை தீயாய் மதுவகை நாடி
பாழ்படல் இழிமை விளையாட்டு!
பாங்கினை புதிய சமுதா யத்தின்
பங்கினை ஏற்றதை நிலைநாட்டு!

அகிலனின் அன்புமடல்

'புதிய சமுதாயம்' இதழ் [illegible] பெற்றேன். லட்சியமும் ஆர்வமும் அனுபவமும் உள்ள பத்திரிகையாளர் — எழுத்தாளர் — [illegible] இதழ் [illegible] உறுதிப் படுத்துகிறது.

தலையங்கம், வாழ்த்துக்கள், கட்டுரைகள், கதைகள் யாவும் படித்து இன்புற்றேன். 'புதிய சமுதாயம்' மலேசியாவில் உருவாகி வளர்ந்து [illegible] தங்கள் பணியைத் தொடங்கி வைத்திருக்கிறீர்கள். 'புதிய சமுதாயம்' வெற்றிபெற என் உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

'தமிழ்நேசன்' பற்றிய தங்கள் கட்டுரை, [illegible] கட்டுரை, [illegible] கட்டுரை யாவும் [illegible] சிறப்பாக அமைந்துள்ளன.

[illegible]

[illegible]

மீண்டும், என் வாழ்த்துக்களைத் [illegible] 'புதிய சமுதாயத்துக்கு' [illegible]

அன்புள்ள,
அகிலன்.

மலேசிய மொழித்தேர்வில் வெற்றிபெற....(1)

கட்டுரையும் கையெழுத்தும்

வெ. ஆறுமுகம்

மொழித் தேர்வுகளில் வெற்றியை நிர்ணயிப்பது கட்டுரையே என்பது பெரும்பாலும் உண்மையாகும். மொத்த மதிப்பெண்களில் கணிசமான அளவு கட்டுரைக்கு ஒதுக்கப்படுகிறது. எனவே கட்டுரையைச் சிறப்பாக எழுதுவதன் வழி தேர்ச்சியை நீங்கள் உறுதிசெய்து கொள்ளலாம்.

கட்டுரையை நன்கு எழுதுவதற்குக் குறுக்குவழி ஏதுமில்லை. முறையான பயிற்சிதான் அவசியம். மிகுதியாகப் படிக்கவேண்டும்; மிகுதியாக எழுத வேண்டும். நாள்தோறும் நாளிதழ்களைப் படிப்பதோடு சிறுகதைகள், நாவல்கள், திங்களிதழ்கள் போன்றவற்றையும் அடிக்கடி படிக்க வேண்டும். மாதிரிக் கட்டுரைகளையும் படிக்கலாம். ஆனால் அவற்றை மனனம் செய்ய முயலாதீர்கள். மிகுதியாகப் படிப்பதனால் மட்டுமே உங்களுக்கு மொழிப்பயிற்சி ஏற்பட்டுவிடாது. மிகுதியாக எழுதிப் பழகுவது அவசியத்திலும் அவசியமாகும். நீங்களே பல தலைப்புகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அடிக்கடி கட்டுரைகளை எழுதிப் பழகுங்கள். வாரத்திற்கு மூன்று, நான்கு கட்டுரைகளை எழுதுவது நல்லது.

எஸ். பி. எம். / எம். சி. இ. தேர்வுக்கு நீங்கள் எழுதவிருக்கும் கட்டுரையின் நீளம் 350 சொற்களுக்குக் குறையாமல் இருக்கவேண்டும். குறிப்பிட்ட அளவைவிடக் குறைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படுவது உறுதி. எனவே 350 சொற்களுக்குக் குறையாமல் எழுதுங்கள். சற்றுக் கூடுதலாக எழுதலாம்; ஆனால் ஒரேயடியாக மிக நீளமாக எழுத முயலுவது விரும்பத்தகாதது. சுருக்கமும் வேண்டாம்; நீளமும் வேண்டாம்; அளவோடு எழுதுங்கள்.

கையெழுத்து

உங்கள் கையெழுத்து தெளிவாக இருக்கவேண்டும்; படிப்பதற்குச் சிரமமில்லாமல் இருக்கவேண்டும்; நேரத்தை வீணாக்கி அச்சுக்கோத்தாற்போல் அழகாக எழுதவேண்டும் என்பது இதன் பொருளல்ல. உங்கள் எழுத்து உங்களுக்கு மட்டுமே விளங்குவதாகவும் படிப்பவருக்குத் தேவையில்லாத தலைவலியைக் கொடுப்பதாகவும் இல்லாமல் இருந்தால் சரி. கட்டுரையைத் திருத்துபவரின் அலுப்பையும் சலிப்பையும் வீணாகத் தேடிக்கொள்ளாதீர்கள்.

ஐந்தாம் படிவத்தில் படிக்கும் மாணவ, மாணவியரிடத்தில் எழுத்துப் பிழைகளை யாரும் எதிர்பார்க்கமாட்டார்கள்; விரும்பவும் மாட்டார்கள். எனவே, எவ்வளவு விரைவாக எழுதினாலும் எழுத்துப் பிழைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். கவனக் குறைவையும் மொழிப்பயிற்சிக் குறைவையும் எழுத்துப்பிழைகள் எடுத்துக் காட்டும்.

புதிய எழுத்துக்கூட்டல் முறை வழக்கத்துக்கு வந்து ஆண்டுகள் பல கடந்துவிட்டன. இன்னும் பழைய முறையையே பயன்படுத்தாதீர்கள். பழைய முறையையும் புதிய முறையையும் சேர்த்துப் போட்டுக் குழப்பாதீர்கள். புதிய முறையையே முற்றாகக் கையாளுங்கள், அதுவே பாதுகாப்பானது.

நீங்கள் செய்யும் எழுத்துப் பிழைகள் உங்களைப் பற்றி ஓரளவு சுட்டிக் காட்டுமென்றால், இலக்கணப் பிழைகள் உங்களின் மொழியறிவை நன்கு வெளிச்சம் போட்டுக் காட்டிவிடும். உங்களின் தேர்ச்சியை அவை பாதிக்கும். ஓரிரு பிழைகள் மன்னிக்கப்படலாம். ஆனால் அள்ளி இறைத்தாற்போல வரிக்கு வரி, வாக்கியத்திற்கு வாக்கியம் இலக்கணப் பிழைகள் இருந்தால் யாரால் பொறுத்துக்கொள்ள முடியும்?

போதுமான ஆயத்தத்தோடு தேர்வு எழுத அமருகிறீர்கள்; வினாத்தாள் தரப்படுகிறது; உடனே ஏதாவது ஒரு தலைப்பில் 'விருவிரு' என்று எழுதி முடித்துவிட்டு வந்துவிடாதீர்கள்; பின்னால் வருத்தப்படுவீர்கள்.

நன்கு விளங்கும் தலைப்பு

பொதுவாக வினாத்தாளில் ஏழு தலைப்புகள் தரப்படும். ஒருமுறைக்குப் பலமுறை அவற்றைப் படியுங்கள். அறவே விளங்காத தலைப்புகள், ஓரளவு விளங்கும் தலைப்புகள் இவற்றை அடித்துவிடுங்கள். அவற்றை எழுத முனைவது ஆபத்து. நன்கு விளங்கும் தலைப்புகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அவற்றை மீண்டும் ஆராயுங்கள். உங்களுக்கு மிகப் பொருத்தமான ஒரு தலைப்புக் கிடைக்கும். அதை மட்டும் நினைவில் இறுத்துங்கள். அதைப் பற்றிச் சிந்தியுங்கள். பிற தலைப்புகளை உடனடியாக மறந்துவிடுங்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புக் குறித்து நீங்கள் என்னவெல்லாம் எழுத நினைக்கிறீர்களோ, அவற்றை ஒரு தாளில் குறித்தல் வேண்டும். குறிப்புகள் தயாரானதும் அவற்றை மீண்டும் பார்த்து, பரிசீலித்து ஒவ்வொரு குறிப்பின் முக்கியத்துவத்திற்கும் ஏற்ப எண்கள் இட்டு வரிசைப்படுத்துங்கள். கட்டுரை எழுதும்போது இந்த வரிசையை அப்படியே பின்பற்றுங்கள்.

இனி, கட்டுரை எழுதத் துவங்கலாம். முதலில் ஒரு சிறிய முன்னுரை [துவக்கம்] தருவது அவசியம். முன்னுரையில் இன்னதுதான் எழுதவேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை. ஆனால் எடுத்துக்கொண்ட தலைப்பின் சாரத்தைப் "பளிச்சென்று" காட்டும்படி இரண்டு, மூன்று வாக்கியங்கள் எழுத வேண்டும். அது மட்டும் போதாது. படிப்பவருக்குக் கவர்ச்சியையும், மேலும் படிக்கவேண்டும் என்னும் ஆர்வத்தையும் முன்னுரை ஊட்டவேண்டும். மிக நீளமான, தொடர்பில்லாத, உப்புச் சப்பில்லாத துவக்கம் மிக மோசமான விளைவுகளை உண்டாக்கிவிடும். "முதற் கோணல் முற்றுங்கோணல்" என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே!

வரிசைப்படுத்தியுள்ள குறிப்புகளை அடிப்படையாகக்கொண்டு கட்டுரையை இனி நீங்கள் எழுதத் துவங்கலாம். ஒரு பத்தியில் ஒரு பொருளைப் பற்றி மட்டுமே எழுதவேண்டும், இரண்டுமூன்றுகுறிப்புகளை/பொருட்களை ஒரே பத்தியில் எழுதிக் குழப்பாதீர்கள். குறிப்புக்கள் எத்தனையோ அத்தனை பத்திகள் எழுதவேண்டும். கட்டுரையை முடிக்குந் தருணத்தில் நேரம் போதாது என்று தெரியுமானால் இறுதியாக உள்ள குறிப்புகளை விட்டுவிடுங்கள்; அல்லது அந்தக் குறிப்புகளை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி ஒரே பத்தியாக எழுதி விடுங்கள்.

தேவையற்ற விளக்கம்

ஒவ்வொரு பத்தியும் சுருக்கமாக ஆனால் தெளிவாக இருக்கவேண்டும். விளக்கவேண்டியவற்றை மட்டுமே விளக்கி எழுதுங்கள். அனாவசியமாகக் கண்டதையெல்லாம் விளக்கிக்கொண்டிருப்பது நன்மை தராது. உங்கள் கட்டுரையைத்திருத்துபவர் உங்களைவிட அறிவிலும் அனுபவத்திலும் மூத்தவர்; சிறியசிறிய சங்கதிகளையெல்லாம் விளக்கமாகச்சொன்னால்தான் அவருக்குப்புரியும் என்றுநினைத்துக்கொண்டுஎழுதாதீர்கள். அதற்காக, சுருக்கமாக எழுதுவதாக எண்ணிக் கொண்டு விளக்க வேண்டியவற்றையும் சுருக்கி எழுதி விடாதீர்கள். "சுருக்கமாக தெளிவாக" என்பதுதான் உங்களின் முறையாக இருக்க வேண்டும்.

எழுதவேண்டியவற்றை எழுதியவுடன் நறுக்குத் தெறித்தாற்போல் ஒரு முடிவுரை எழுதிக் கட்டுரையை முடித்து விடுங்கள். முடிவுரையைப் படித்தவுடன் 'அடடா, கட்டுரை முடிந்துவிட்டதா!" என்பது போன்ற ஓர் ஏக்க உணர்ச்சி உண்டாகவேண்டும். 'அப்பாடா! என் கழுத்தை "அறு அறு" என்று அறுத்து, இப்போதாவது ஒரு வழியாக முடித்துத் தொலைத்தானே!" என்று கட்டுரையைத் திருத்துபவர் நிம்மதிப் பெருமூச்சு விடுமாறு செய்துவிடாதீர்கள். பின்னால் நீங்கள் வேறுவகையான பெருமூச்சுவிட வேண்டிய நிலை ஏற்பட்டு விடலாம்.

கட்டுரை எழுதுவதற்கு உங்களுக்குத் தரப்படும் நேரம் ஒன்றரை மணிதான். படிக்க, தலைப்பைத் தேர்ந்தெடுக்க, குறிப்புகள் தயாரிக்க, கட்டுரை எழுத, மீண்டும் படித்துப்பார்க்க என்று உங்கள் வசதிக்கேற்ப நேரத்தைப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும். இது மிக முக்கியம். இப்படிப்பட்ட பயிற்சியை நீங்கள் வீட்டிலேயே பல முறை செய்து பயிலவேண்டும். இல்லையெனில் தேர்வுநாளன்று, சரியான நேரம் பார்த்து, நேரம் உங்கள் காலை வாரிவிடும்.

உங்களுடைய மொழியறிவு, கட்டுரையின் உள்ளடக்கம், கட்டுரையின் அமைப்பு இம்மூன்றும்தான் உங்களுக்கு மதிப்பெண்களைத் தரும். எனவே இம்மூன்றிலும் நன்கு பயிற்சி பெற்றுக் கொள்ளுங்கள்.

மலேசியமொழியில் கட்டுரை எழுதுவது குறித்துக் கூறப்பட்ட இந்த வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் நீங்கள் தமிழ், ஆங்கிலக் கட்டுரைகள் எழுதுவதற்கும் கையாளலாம். எஸ். பி. எம். / எம். சி. இ. தேர்வில் கட்டுரைகளின் நீளக் கட்டுப்பாடு மொழிக்கு மொழி மாறுபடும்; ஆனால் கட்டுரைகளின் வடிவும் பிறவும் பொதுவானவையே.

தேர்வுக்கு ஏறத்தாழ இன்னும் ஆறு மாதங்களே உள்ளன; இப்பொழுதே செயல்படுங்கள்; வெற்றிபெறுவீர்கள்.

நாடு விரைந்து முன்னேறுகிறது; காலம் விரைந்து ஓடுகிறது. நாமும் சேர்ந்து ஓடவில்லையெனில் பின்தங்கி விடுவோம். ஓட்டப்பந்தயத்தில் துவக்கத்தைத் தவறவிட்டவர்கள் வெற்றி பெற இயலுமா? ●

எங்கும் விளையாட்டு என்பதே பேச்சு

உலகின் மற்ற நாடுகளைப் போலவே மலேசியாவிலும் தற்போது பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மிகவும் சுறு சுறுப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக இந்தச் சமயத்தில் நாடு முழுதும் ஒரே விளையாட்டு மயமாகவே உள்ளது.


கெந்திங் மலையில் ஆசியான் விளையாட்டுப் போட்டிகள் ஒருபுறம். வார இறுதிகளில் எல்லாம் ஒவ்வொரு மாநிலத்தின் விளையாட்டரங்குகளிலும் மலேசியக் கிண்ணக் காற்பந்துப் போட்டிகள் மறுபுறம் 18, 20, 23 வயதுக்குக் குறைந்தவர்களுக் கான மலேசிய ஹாக்கிப் போட்டிகள் ஒருபக்கம். மற்றும் மலேசிய இளைஞருக்கான ரஹ்மான் கிண்ணக் காற்பந்துப் போட்டிகள் பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டிகள் தனியார் நிறுவனங்களின் விளையாட்டுப் போட்டிகள் இப்படிப் பல்வேறு இடங்களில் பல மாதிரியான போட்டிகள் முடிவின்றி நடந்து கொண்டே இருக்கின்றன. இவற்றில் எதையும் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. எல்லாமே முக்கியத்துவம் வாய்ந்தவை தான்.

மலேசியக் கிண்ணக் காற்பந்துப்போட்டியில் எதிர்பாராத விதமாக பல திருப்பங்கள் நிகழ்ந்து ஒருவித சூட்டை ஏற்படுத்தியுள்ளன.

கடந்தாண்டின் வெற்றிக் குழுவான சிலாங்கூர் இந்த முறை எதிர்பாராதவண்ணம் சிறிது பின்தங்கியிருப்பது திருப்பங்களில் முக்கியமானது. அத்துடன் வழக்கமாக மந்த நிலையைக் காட்டும் மற்ற மாநிலங்களும் இந்த முறை இப் போட்டியில் மிகுந்த விறுவிறுப்பைக் காட்டுவது மற்றொரு அதிசயமாகும். போட்டியின் அரையிறுதிக்குரிய கட்டம் இப்போது நெருங்கிவிட்டது.

இப்படி பல்வேறு விளையாட்டுக்கள் சுறுசுறுப்போடு இயங்கிக்கொண்டிருக்கும் இந்தசமயத்தில் 1976ஆம் ஆண்டுக்குரிய மலேசிய விளையாட்டுவீரர்வீராங்கனை தேர்வு ஒரு பக்கம் பரபரப்பாக நடந்து முடிந்து விட்டிருக்கிறது. காற்பந்து வீரர் மொக்தார் டஹாரியும் ஓட்டப்பந்தய வீராங்கனை மரினா சின்னும் இந்த முறை விருதுகள் பெற்றிருப்பது பொருத்தமான தேர்வு / எதிர்பார்க்கப்பட்ட ஒன்று என்று பலரும் பாராட்டுகின்றனர். இத்தேர்வு நடைபெறுவதற்கு சில மணி நேரத்திற்கு முன்பு மொக்தாரும் மரினா சின்னும் தற்செயலாக தலைநகர் ஓடியன் திரையரங்கிற்கருகில் சந்தித்துக் கொண்டு, இருவரும் ஒரே வாடகைக்காரில் லேக் கிளப்புக்கு வந்து சேர்ந்தார்களாம். என்ன ஒற்றுமை பார்த்தீர்களா?

– நாசிர்



ஏப்ரல் 9ந் தேதியன்று சமூகத் தலைவர்களும் ம. இ. கா. பிரமுகர்களும் ஒருசேரக் காட்சி அளித்தனர் கோலாலம்பூர் ஸ்ரீமகா மாரியம்மன் கோவிலில். காரணம் தெரியுமா?

தமிழ்நேசன் துணையாசிரியர் திரு. குருசாமிக்கும் குமாரி நீலாவதிக்கும் அங்கு திருமணம் நடந்ததே காரணம்.

ஒற்றுமைத்துறை வாரியத் தலைவர் துன் சம்பந்தன், மேலவைத் துணைத் தலைவர் டான்ஸ்ரீ எஸ். ஓ. கே. உபைதுல்லா, பிரதமர் துறைத் துணையமைச்சர் திரு. எஸ். சுப்பிரமணியம், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ச. சாமிவேலு, சிலாங்கூர் ஆட்சிக்குழு உறுப்பினர் திரு. வி. எல். காந்தன், மக்கள் தொண்டன் திரு. வி. டேவிட் மற்றும் ஏராளமான பிரமுகர்கள் இத் திருமண வைபவத்தில் கலந்து கொண்டனர்.

மணமகன் திரு. குருசாமி, தேசிய செய்தித்தாள் ஊழியர் சங்கத்தின் தமிழ்நேசன் கிளையின் செயலாளருமாவார்.

புதிய சமுதாயத்தின் புதிய முகவரி
131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், [2ஆவது மாடி] கோலாலம்பூர் 01–08. தொலைபேசி:80839

ப. காடோங்கிருஷ்ணன், தஞ்சோங் சிப்பாட்

கே: நாணயமான மனமும் நாணயத்தைக் கண்டவுடன் தள்ளாடுவதேன்?

ப: சொல் 'நாணயத்தைக் காட்டிலும், சுழலும் நாணயத்திற்கே மனிதனை ஆட்டிப் படைக்கும் காந்த சக்தி அதிகம்.

ஜே. எம். சண்முகம், சுங்கை ஆரா, பினாங்கு

கே: ம. இ. கா. வில் அதிக உறுப்பினர்கள் கொண்ட மாநிலம் எது?

ப: சிலாங்கூர்.

அருணா பரமேஸ், செர்டாங் பாரு, சுங்கை பீசி

கே: சமீப காலமாக என் மனதில் படிக்க வேண்டும் என்ற ஆவல்! சிறு வயதில் ஆரம்பத் தமிழ்ப் பாடசாலையில், ஆறும்வகுப்பு அரசாங்கத்தேர்வுப் பரீட்சையில் "சி" கிரேட் கிடைத்தது. ஆங்கில மொழியில் தேர்ச்சியில்லை. அதனால் நான் எல்.சி.ஈ. தேர்வு பெற முடியுமா?

ப: தனியார் பள்ளியில் சேர்ந்து விடா முயற்சியாகச் சில ஆண்டுகள் பயின்றால் எல்.சி.ஈ. தேர்வு எழுதலாம். தங்கள் படிப்பு ஆர்வத்திற்குப் பாராட்டு

கே: ஒருவர் எந்தப் பிராணியின் மாமிசத்தை அதிகம் உண்கிறாரோ, அவருக்கு அந்தப் பிராணியின் பழக்கவழக்கங்கள் அதிகம் இருக்கும் என்பது உண்மையா?

ப: அப்படிப்பார்த்தால் மனிதன்கோழியைப் போல் புழு பூச்சிகளைக் கொத்தித் தின்னவும் ஆடுமாடுபோல் செடிகொடிகளையும் புல்லையும் மேயவும் நேரிடும்.

வீ. நடராஜன், ஜெண்டராட்டா தோட்டம்

கே: நமது மலேசியாவில் கல்விக்காக நமது தலைவர்கள் எவ்வளவோ வசதிகள் செய்து கொடுத்தும் ஒரு குடும்பத்தில் வசதி இருந்தும் தம் பிள்ளைகளின் படிப்பைப் பாதியில்நிறுத்தித் தோட்டத்து வேலைக்கு அனுப்புகிறார்கள்; அவர்களுக்குத் தம் பிள்ளைகள் கல்வியில் முன்னேற வேண்டும் என்ற எண்ணமே கிடையாது. அப்படிப்பட்ட பெற்றோருக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

ப: கல்வியில் மேம்பட்ட சமுதாயமே கண்ணுக்கு அழகான சமுதாயம். நமது பெற்றோர்கள் பிள்ளைகளின் படிப்புக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். வயிற்றைக் கட்டி வாயைக் கட்டிப்பிள்ளைகளைப் படிகக வைக்கும் பெற்றோர்களேநம்வாழ்த்துக்குரியவர்கள்.

முருகனைக் கேளுங்கள்

ஆர். பாலசுப்பிரமணியம்,
லாபுவான் பாடாங் தோட்டம்

கே: புதிய சமுதாயத்தின் வாசகர்களுக்குத் தாங்கள் கூற விரும்புவது என்ன?

ப: "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கேற்பச் சமுதாயத்தினைப் படிக்கின்ற அன்பர்கள் எண்ணிக்கை பெருக உதவும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆர். குணசேகரன், பத்துபிக்காக்கா தோட்டம்

கே: தோல்விகளையே கண்டுவரும் ஒருவனுடைய வாழ்க்கை எவ்வாறு முன்னேற்றம் அடைய வேண்டும்?

ப: தோல்விகளைக் கண்டு மனம் தளராமல் சோர்வடையாமல் வெற்றியை நோக்கி அயராது நடைபோடவேண்டும்.

எ. முனுசாமி, போண்டோக் தஞ்சோங்,
தைப்பிங், பேரா

கே: நலன் அபிவிருத்தி லாட்டரி சீட்டில் பரிசு கிடைத்தால் பணத்தைப் பாதுகாப்போடு பெறும் வழி என்ன?

ப: ஒரு வங்கி மூலம் பரிசுத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

கே. எஸ். பிரசன்னா, பெட்டாலிங்

கே: "புதிய சமுதாயம்" எதைப் பிரதிபலிக்கிறது?

ப: மக்களிடையே தழைத்துவரும் சமுதாய உணர்வினையும் முன்னேற்ற சிந்தனையையும் புதுமை நாட்டத்தையும் பிரதிபலிக்கிறது.

கே: அடுத்த ஒலிம்பிக் போட்டி எந்த நாட்டில் நடைபெறவிருக்கிறது?

ப: ரஷ்யாவில்.

"ஆர்வி" ஜெயா, சுங்கை

கே: ஆயிரம் துப்பாக்கி முனையைவிட ஒரு பத்திரிகையின் விமர்சனம் வலிமைவாய்ந்ததா...?

ப: பத்திரிகைகளின் வலிமை ஒரு காலத்தில் நீங்கள் சொல்வதுபோல வாள்முனையைவிட, துப்பாக்கி முனையைவிட பராக்கிரமம் வாய்ந்ததாக இருந்தது உண்மைதான். ஆனால் இப்பொழுது துப்பாக்கி முனைக்கும் அதிகாரத்திற்கும் அஞ்சி நடக்கும்பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களுமே பெருகி விட்டார்கள்.

கே: ஒரு பெண்ணைக் கட்டியாள்வதற்கும், ஒரு நாட்டை ஆள்வதற்கும் உள்ள வேறுபாடு...?

ப: நாட்டை ஆள்வது பிரமாண்டமான ஒரு கப்பலைக் கடலில் செலுத்துவதுபோன்ற தாகும். பெண்ணை ஆள்வது ஒரு படகை ஆற்றில் ஓட்டுவது போன்றதாகும்! இரண்டுக்கும் பெரும் திறமை வேண்டும். சமாளிக்கும் ஆற்றலும் வேண்டும்.

இ. கதீஜாமஜீட், ஏ. .ஏ. ட்டின், சுங்கை, பேரா

கே: சிந்தனை வளர்ச்சிக்கு இன்றியமையாத துணை எது?

ப: நூற்பயிற்சியும் கற்றோர் சேர்க்கையும்.

கே: பசி என்றால் உணவு வேண்டும். துன்பம் என்றால்?

ப: தாங்குகின்ற மனம் வேண்டும்.

தி. முனியாண்டி, ஈப்போ

கே: கற்பு பெண்களுக்கே உரிய சொத்து என்றால் ஆண்களுக்கு உரிய சொத்து என்ன அண்ணா?

ப: கற்பு என்னும் சொத்துடைமையில் ஆண்-பெண் இருவரும் சம பங்காளிகள். இன்றைய பெண்கள் இந்தச் சொத்தினை ஏகபோகமாகத் தங்களுக்கு மட்டுமே வைத்துக்கொள்ள விரும்பவில்லை.

குமாரி ராதா, ஈப்போ

கே: கண்மூடித்தனமான அன்பு என்றால் என்ன?

ப: காரண காரியம் பார்க்காத - கைமாறு கருதாத அன்பு என்று பொருள்.

கே: மனித உயிர் விலைமதிப்பில்லாதது என்பது எந்த அளவுக்கு உண்மை?

ப: கள்ள சம்சுவைக் குடித்துவிட்டு ஈ, எறும்பு போலச் சாகிறவர்களைப் பார்க்கும் போது மனித உயிருக்கு மதிப்பு இருப்பதாகவே தோன்றவில்லை.

எஸ். பி. ராஜு, சிரம்பான்

கே: புதிய சமுதாயம் இதழில் ஒருவர் எத்தனை கேள்விகள் கேட்கலாம்?

ப: எத்தனை கேள்விகள் வேண்டுமானாலும் கேட்கலாம். ஆனால் தயவுசெய்து எல்லாவற்றிற்கும் பதிலை எதிர்பார்க்கக்கூடாது.

எஸ். எஸ். வேலன், கோபல் கிள்ளான்

கே: தாங்கள் இனிமேல் தமிழ்நேசனில் கேள்வி-பதில் அளிக்கமாட்டீர்களா?

ப: "வேதனைக் கதை"யைப் படித்துப் பாருங்கள்!

எஸ். தேவி, பூலோ காசாப்

கே: எனக்கு வயது 19. நான் 13 வயதில் அடையாளக்கார்டு எடுத்தேன். அதை எப்போது மாற்றவேண்டும்?

ப: இப்பொழுதே நீங்கள் மாற்றிக்கொண்டு விடவேண்டும்.

ஐயாசாமி ஜமுனா, சுங்கை

கே: சமுதாயத்தைப் பற்றிக் கவலைப்படாத வாலிபர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அவர்களைப் பற்றிச் சமுதாயம் கவலைப் பட்டால் காலப்போக்கு அவர்களையும் சிந்திக்கவைக்கும்.

கே: சமுதாயத்தில் சினிமாவையும் சேர்த்துக் கொண்டது ஏன்?

ப: தொலைக்காட்சியில் தமிழ்ப்படம் ஓடுகிற சமயத்தில் சமுதாயமே இயக்கமின்றித் தேங்கி நின்று விடுகிறது. அப்படியிருக்கும் போது சினிமாவைச் சமுதாயத்திலிருந்து எப்படி ஒதுக்குவது?

இராமகிருஷ்ணன், சுங்கைப்பட்டாணி

கே: அரசாங்கத்திற்கு நன்மை பயக்கும் யோசனைகளைப் பத்திரிகைக்கு ஒரு கட்டுரையாக எழுதுவது நல்லதா? அல்லது நேரடியாக அரசாங்கத்திற்கு எழுதுவது நல்லதா?

ப: மகஜர்களை அரசாங்கத்திற்கு நேரடியாகக் கொடுப்பதே சரி; கட்டுரைகளைப் பத்திரிகைகளுக்கு எழுதலாம்.

எம். எஸ். நேர்பாண்டியன், ஊத்தான் மெலிந்தான்

கே: சிங்கம், சிம்மம் இவை இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: ஒன்று தமிழ்; மற்றொன்று வடசொல். இரண்டுக்கும் பொருள் ஒன்றே!

கே: காரிகை - இதற்கு ஆண்பால் என்ன?

ப: ஆண்பால் இல்லை.

எஸ். வி. மாதவி சுங்கை பெர்னும் தோட்டம்

கே: கழுதை என்றால் இரண்டு பொருள்படுகின்றனவாம். ஒன்று பிராணியைக் குறிக்கிறது. மற்றொன்று?

ப: மூடனைக் குறிக்கிறது.

கே: எங்கள் தோட்டத்தில் ஒரு நூல்நிலையம், காற்பந்தாட்டத் திடல், பூப்பந்தாட்டத் திடல், ஒரு நீச்சல் குளம் இவை அனைத்தும் உண்டு. ஆனால் நூல்நிலையத்தில் கோழி முட்டை போடுகிறது; காற்பந்தாட்டத் திடலில் மாடு புல் மேய்கிறது; பூப்பந்தாட்டத் திடலில் எங்கள் சீனத் தவக்கை கருவாடு காயப்போடுகிறார்; நீச்சல் குளத்தில் டிங்கிக் கொசு மியூசிக் பார்ட்டி நடத்துகின்றது. ஆதலால் எங்கள் தோட்ட

வாலிபர்களின் முன்னேற்றத்தைப் பற்றிக் கொஞ்சம் கூறுங்கள்.

ப: உங்கள் வர்ணிப்பே போதும். இதனைப் படித்த பிறகாவது உங்கள் தோட்ட இளைஞர்களுக்குச் "சூடு" பிறக்குமென்று நம்புகிறேன்.

கே: மலேசியாவில் நோபல் பரிசு பெற்றவர் யாரும் இருக்கிறார்களா?

ப: இனிமேல்தான் மலேசியாவுக்கு நோபல் பரிசு கிடைக்கவேண்டும்!

ஏ. பாலகிருஷ்ணன், புக்கிட் சீடிம் தோட்டம், கூலிம்

கே: எழிலுடைய பொருள் எது?

ப: ஒன்றா, இரண்டா? எழில் கொஞ்சும் பொருள் ஏராளம்! பாரதிதாசனின் "அழகின் சிரிப்பை"ப் படியுங்கள்.

எஸ். ஏ. மல்லிகா மணியம், புந்தோங் ஈப்போ

கே: இப்புதிய இதழை வெளியிடுவதன் நோக்கம் என்ன?

ப: உங்களைப் போன்ற வாசகர்களின் நல்லுறவைப் புதுப்பித்துக்கொள்ளத்தான்!

கே: எப்போது பெண்கள் தியாகிகளாக மாறுகிறார்கள்?

ப: பெரும்பாலான பெண்கள் தியாகிகளாகவே பிறக்கிறார்கள்!

பிரகாஷ், ரமேஷ், சுரேஷ், ரிவர்சைட் தோட்டம்

கே. திருமணம் செய்த ஒரு பெண் தன் கணவனிடம் சண்டை போட்டுக்கொண்டு தாய் வீட்டிற்குப் போய்விடுவது நல்லதா?

ப: பின்வாங்குவது கூடாது; புகுந்த வீட்டிலேயே போரிட்டு வெற்றி காண வேண்டும்!

ஏ. முத்து, பெர்ணம் தோட்டம், ஊத்தான் மெலிந்தான்

கே: கோவில் திருவிழா மூலம் தேர்தல் பிரச்சாரம் செய்யலாமா?

ப: தேர்தல் பிரச்சாரம் செய்கிறவர்களுக்கு மயானம் கிடைத்தால்கூட விட்டுவைக்க மாட்டார்கள். கோயில் திருவிழா அவர்களுக்கு சர்க்கரைப்பொங்கல் போன்றஇனிய வாய்ப்பு.

தாரா எழிலழகன், சுங்கைவே

கே: இந்தப் புதிய சமுதாயம் இதழை வெளியிடத் தாங்கள் எவ்வளவு காலம் கற்பனையில் ஈடுபட்டீர்கள்?

ப: பல மாதங்கள்!

கே; நம்முடைய மனச்சாட்சி எப்பொழுது தூங்குகிறது?

ப- சொந்த சுகபோகங்களுக்காக நியாயங்களையும் நெறிமுறைகளையும் மறந்துவிடும்போது மனச்சாட்சி நிர்ப்பந்தமாக ஓய்வெடுத்துக்கொள்கிறது.

ஸ்ரீமுருகாலயாவின்

குமார விஜயம்

வி. கே. ராமசாமி தொழில் சம்பந்தமாக வெளியூரில் தங்கியிருந்தபோது ஒரு பெண்ணைக் காதலிக்கிறார்... காதலி கர்ப்பவதியாகிறார்... இவர் கைவிட்டுவிட்டு வந்துவிடுகிறார்.

இருபது வருடம் கழித்து ஜெயசித்ரா ராமசாமியைத் தேடி வருகிறார். அவருடைய காதலிக்குப் பிறந்த பெண், தான் என்கிறார்-"அப்பா" என்று கண்ணீர் விட்டு அவர் வீட்டிலேயேஇடம் பிடித்து விடுகிறார்.



சிலநாள் கழித்துக் கமலஹாசன் வருகிறார். ராமசாமியின் காதலிக்குப் பிறந்த குழந்தை,தான் என்கிறார்.

குடியும் குடித்தனமுமாக நல்ல நிலையில் இருக்கும் ராமசாமி இளமையில் நடந்த விவகாரங்களை வெளியில் சொல்ல முடியாமல் கமலஹாசனின் வற்புறுத்தலுக்கிணங்க அவரையும் வீட்டில் சேர்த்துக் கொள்கிறார்.

இந்த இருவரில் தன் காதலிக்குப் பிறந்தது யார் என்பதைக் கண்டு பிடிப்பதுதான் கதை.


வலுவில்லாத இந்தக் கதை-க்கு யார் யாரோ முட்டுக் கொடுத்து நிற்க வைக்கப் பார்க்கிறார்கள். ஆனால், பலன்தான் கிட்டவில்லை.

படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது கதையில் எப்போது திருப்பம் ஏற்படும். படம் எப்போது விறுவிறுப்பாக ஓடும் என்று எதிர்பார்க்கிறோம், ஆனால் அப்படி ஒன்று கடைசிவரை நடக்காததால் பலத்த சோர்வுடன் தியேட்டரைவிட்டு வெளியில் வருகிறோம்.

பாட்டாவது நினைவில் நிற்கும்படி ஏதாவது...

படத்தின் பெயர்கூடப் பொருத்தமாக அமையவில்லை!

நிறைவே ஒன்றுமில்லையா என்று கேட்டீர்களானால் நடிகர்களின் நடிப்பில் என்னால் குறை காண முடியவில்லை என்றுதான் சொல்வேன்.



–பமன்

பால்மரக் காட்டினிலே

2. நோட்டீஸ்

லயத்து விட்டில் பாலன் கண்ணாடிக்கு முன்பு நின்று தலைவாரி விட்டுக்கொண்டான். "பாண்ட்டை" எடுத்துப் போட்டுக்கொண்ட பின் சட்டையை அணிந்துகொண்டு கீழே வந்தான். மூன்றும் வகுப்புப் படிக்கும் கமலம் பள்ளிக்குப் புறப்பட்டுத் தன் அண்ணனுக்காகக் காத்து நின்றாள்.

சைக்கிளில் பின்புறம் கமலத்தை ஏற்றிக்கொண்டு அவள் பையையும் தங்கள் சாப்பாட்டுப் பாத்திரத்தையும் முன்னால் மாட்டிக்கொண்டு வெளியே தெருவுக்கு வந்தான்.

எதிரில் வந்துகொண்டிருந்த மளிகைக்கடை இஸ்மாயில், "உனக்குச் சேதி தெரியுமா?" என்று கேட்டான்.

"என்ன?"

"புலி வரப்போகுது, வரப்போகுதுன்னு சொன்னானே, அது கடைசியிலே நம்ப தோட்டத்துக்கு அடுத்த தோட்டத்துக்கு வந்திடுச்சு. அது இங்கேயும் வந்து பாயப்போகுதோ தெரியலே!"

"என்ன இஸ்மாயில்?"

"அடுத்த தோட்டத்திலே நேத்துச் சாயங்காலம் எல்லாருக்கும் நோட்டீஸ் குடுத்திட்டாங்களாம்!"

இதைக் கேட்டவுடன் சைக்கிளைப் பற்றியிருந்த பாலனின் கரம் நடுங்கியது. நடுக்காட்டில் நடந்து செல்லும்போது ஒரு புலி எதிர்ப்பட்டால் எப்படிக் கிலி பிடித்து ஆட்டுமோ அப்படி இந்தச் செய்தி அவனை ஆட்டி வைத்தது.

இஸ்மாயில் அங்கே நிற்கவில்லை, போய்விட்டான்.

சைக்கிளில் ஏறிச் செல்லக்கூடிய மனநிலையில் அப்போது பாலன் இல்லை. தள்ளிக்கொண்டே மெல்ல நடந்தான். மாமாவோட குடும்பம் என்ன ஆகும்? அக்காளோட குடும்பம் என்ன ஆகும்? இனிமேல் அவுங்க எப்படிப் பிழைக்கப் போறாங்க? ஆமா, நாளைக்கு இதே கதி இந்தத் தோட்டத்துக்கும் வந்துட்டா?

இந்த நோட்டீஸ் விவகாரம் பல தோட்டங்களை அப்போது அலைக்கழித்துக்கொண்டிருந்தது. மலைநாட்டுக்குச் சுதந்திரம்வந்ததைஅடுத்துபல வெள்ளைத் தோட்ட முதலாளிகள் தங்கள் தோட்டங்களை விற்றுவிட்டு வெளியேறத் தலைப்பட்டிருந்தனர். அவர்களுடைய பெரிய பெரிய தோட்டங்களை அப்படியே விலைக்கு வாங்கக்கூடியவர்கள் மலேசியாவில் குறைவு. தோட்டங்களைப் பகிர்ந்து துண்டுபோட்டு விற்றால் தான் மலாய்க்காரர்களிடமோ சீனர்களிடமோ தள்ளிவிட முடியும் போலிருந்தது. துண்டு போடுவதற்கு முன்னால் தொழிலாளர்களை வெளியேற்றியாக வேண்டும். துண்டு போடப்பட்ட தோட்டங்களுக்கு மிகக் குறைவான ஆட்கள் இருந்தால் போதும். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு ஒப்பந்தக் கூலிகளாகக் கொண்டுவரப்பட்டவர்கள் தாமே இவர்கள்? ஓடாய் உழைத்துத் தேய்ந்தவர்களின் உழைப்பும் பறிக்கப்பட்டு அவர்கள் நடுத்தெருவுக்கு விரட்டப்பட்டால் யாருக்கென்ன கவலை? அவர்கள் இருந்தால் என்ன, இறந்தால் தான் என்ன?

நடந்தே பள்ளிக்கூடத்துக்குப் போன பாலனுக்கு அங்கே வகுப்பில் பாடம் நடத்த ஓடவில்லை. தலைமை ஆசிரியர் சண்முகத்திடம் சென்று விவரம் சொல்லி, தான் உடனடியாக அடுத்த தோட்டத்துக்குப் போகவேண்டும் என்றான். விடுமுறைக்கு எழுதிக்கொடுத்தான். கமலத்திடம் சென்று பள்ளிக்கூடம் முடிந்தவுடன் அவளை நேரே வீடு திரும்பச் சொன்னான். சைக்கிளை எடுத்துக்கொண்டு அடுத்த தோட்டத்துக்குக் கிளம்பினான்.

மேட்டுப்பாங்கான நெடுஞ்சாலையில் ஐந்துமைல் சைக்கிளை மிதிக்கவேண்டும். வழி நெடுகிலும் இருபுறங்களிலும் ரப்பர் மரக்காடுகள். பால்வெட்டும் நேரத்தில்கூட எங்கேயும் கூட்டமாகத் தோட்டத்தில் ஆட்களைக் காணமுடியாது. நானூறு மரங்களுக்கு மேல் ஒருவர் மட்டும் கவனித்தால் போதும் என்ற நிலை உள்ளபோது கூட்டத்துக்கு அங்கே இடம் ஏது? ஜனசந்தடியே இல்லாமல் வெறிச்சோடிப் போய்த்தான் எப்போதும் ரப்பர்த் தோட்டம் காட்சியளிக்கும். யாராவது ஓரிருவர் அங்கே கண்களுக்குத்தென்படுவார்கள். தனிமை, தனிமை, பொல்லாத தனிமைதான் அங்கே!

அடுத்த தோட்டத்துக்குள் புகுந்து அவனுடைய மாமன் பழனியின் குடும்பம் வழக்கமாய்ப் பால் வெட்டும் திசையில் தன் சைக்கிளைத் திருப்பினான் பாலன். செம்மண்புழுதி படிந்த ஒற்றையடிப் பாதையில் அந்தப் பால்மரக் காட்டுக்குள் அவன் சைக்கிள் சென்றது. அவன் கண்களில் பட்டவள் கண்ணம்மாதான். அவனுடைய தாய் மாமன் பழனியின் இரண்டாவது மகள் அவள். தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் ஆறும் வகுப்பு வரை படித்து முடித்து விட்டுப் பிறகு வெளிக்காட்டு வேலை பார்த்து வந்தாள். இப்போது பால்மரம் வெட்டும் வேலை கிடைத்திருக்கிறது போலும். வயது பதினாறு அல்லது பதினேழு இருக்கும். வயதுக்கு மீறிய வளர்ச்சி அவளுக்கு!

பாலன் அங்கு வந்துகொண்டிருப்பதை அவள் கவனிக்கவில்லை. மேலே வண்ணச் சட்டையும் இடுப்பில் கைலி போன்ற சாரோங் ஆடையும் அவள் உடுத்திக்கொண்டிருந்தாள். நாட்டுப்புறத்துக் கேரளத்துப் பெண்ணையொத்த தோற்றம். பாலன் சந்தடி செய்யாமல் தன் சைக்கிளை விட்டு இறங்கி அவள் பால் வெட்டும் வேலையைச் சற்றே பார்த்துக்கொண்டு நின்றான்.

பட்டை உரித்ததுபோல் காணப்பட்ட மரப்பகுதியில் கீழ்ப்புறம் தென்பட்ட ரப்பர் மரத்துப் பட்டையின் மீது நளினமாகத் தன் கத்தியை வைத்து கவனமாக ஓர் இழுப்பு இழுத்தாள் கண்ணம்மா. குபீரென்று பட்டை மீது பால் பொங்கிச் சொரிந்தது. மெல்லத் திரண்டு அவள் இழுத்துவிட்ட கோட்டின் மீது விழுந்தது. அடியில் பொருத்தப்பட்ட சிறிய குழாயின் வழியாக அங்கே கட்டப்பட்டிருந்த பீங்கான் கிண்ணத்தில் பாய்ந்தது.

மலர்விட்டு மலர் தாவும் வண்ணத்துப் பூச்சிபோல் அவள் அடுத்த மரத்துக்கு ஓட்டமும் நடையுமாய்த் தாவினாள்.

"கண்ணம்மா"

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தவள் கூப்பிட்டவன் பாலன் என்று தெரிந்துகொண்டவுடன் புன்முறுவல் பூத்தாள். வாய்திறந்து ஏதும் பேசவில்லை; கண்களையும் இமைக்கவில்லை.

வேலை நேரத்தில் காட்டின் தனிமையில் இப்போதுதான் அவளை அவன் முதல்முறையாகச் சந்திக்கிறான்.

"ஏதோ கேள்விப்பட்டேன்; விசாரிச்சுட்டுப் போலாம்னு..."

"ஆமா, நோட்டீஸ் குடுத்திட்டாங்க" என்றாள் தழுதழுத்த குரலில். அவனையே விழித்துப் பார்த்துக்கொண்டிருந்த அவள் விழிகளில் அறுத்துவிட்ட பால்மரத்திலிருந்து வடியும் பால்போல் கண்ணீர் வழிந்தது.

"எதுக்காகக் கலங்கிறே! நாங்கள்ளாம் இருக்கிறப்போ உங்களுக்கு என்ன வந்திடும்?" என்று ஏதோ முரட்டுத் துணிவோடு ஆறுதல் சொல்லி வைத்தான் பாலன். அந்தச் சூழ்நிலையில் யார்தான் இருந்து என்னதான் உதவி செய்ய முடியுமென்று அவனுக்கே விளங்கவில்லை.

வயது வந்த பெண்ணோடு இளைஞனாகிய தான் அங்கே நின்று அதிகநேரம் பேசுவதை அவன் விரும்பவில்லை. கங்காணியோ கிராணியோ பார்த்தால் ஏதேனும் சொல்லக்கூடும். கண்ணம்மாளைப் பற்றி அவர்கள் தவறாக நினைக்க அது இடம் கொடுப்பதாக ஆகும்.

"சரி, உன்னோட வேலையை நான் கெடுக்கலே! மாமனைப் போய்ப் பார்க்கிறேன். வேலையை முடிச்சிட்டு நீ அங்கே சாப்பிட வரும்போது பேசுவோம்".

"இதோ, பத்து மரந்தான் பாக்கி இருக்கு, நில்லுங்க முடிச்சிட்டு வந்துடறேன்..."

"யாராவது ஏதாவது நினைச்சுக்கப் போறாங்க" என்று தயக்கத்தோடு அவளைப் பார்த்தான் பாலன்.

"நீங்க ஒண்ணும் பிறத்தியார் இல்லையே?"

"இருந்தாலும்..."

"அவுங்கள்ளாம் வந்து நோட்டீஸைத் திருப்ப வாங்கிக்கப்போறாங்களா என்ன? தலைக்குமேலே வெள்ளம் வந்திடுச்சு. இனிமேல் யாருக்குப் பயந்து என்ன நடக்கப்போவுது?"

வயதுக்கு மீறிய உடல் வளர்ச்சி மட்டும் அல்லாமல் மன வளர்ச்சியும் அவள் பெற்றிருந்தது அவனை வியக்கச் செய்தது. பொறுப்பை உணராதவளாக இருந்திருந்தால் நோட்டீஸ் அவளை அவ்வளவு தூரம் கலக்கியிருக்காது. கண்ணம்மாள் வெகுளிப் பெண்ணல்ல.

அகிலன்

"சரி, நான் காத்துக்கிட்டிருக்கேன். அவசரப்பட்டு மரத்தைக் காயப்படுத்திடாதே; நிதானமா வெட்டு."

நிதானத்தோடுதான் கண்ணம்மா மரம் வெட்ட முயன்றாள். ஆனாலும் அவளால் அது முடியவில்லை. ஆறுதலுக்காக அவன் சொன்ன சொல் "நாங்கள்ளாம் இருக்கிறப்போ உங்களுக்கென்ன வந்திடும்?" என்ற சொல் அவள் நெஞ்சிலே ஆழப் பதிந்தது. கற்பனைகள் திடீரென்று படரத் தொடங்கின. எதை எதையோ நினைத்துக்கொண்டு பரபரப்படைந்தாள் அவள்.

இந்தப் பரபரப்பால் அவள் தன்னையும் மீறி ஒரு மரத்தைக் காயப்படுத்திவிட்டாள். பட்டையைச் சீவவேண்டிய பகுதியில் கத்தியைத் தவறுதலாக ஆழமாய்ப்பாய்ச்சிவிட்டாள். அந்தக் காயம் பட்ட பகுதியில் பால் திரண்டு நின்று அது மேடு தட்டிவிடும். கங்காணியிடம் அது அவளைக் காட்டிக்கொடுத்துவிடும். பிறகு அதற்குத் தண்டனையாக ஒரு வாரமோ, பத்து நாளோ அவளுக்கு வேலை தரமாட்டார்கள்.

"இனிமே வாங்கப்போறது ஒரு மாசத்துக் கூலி. அதுலே பத்து நாள் போனால் போகட்டுமே!" என்று தனக்குள் நினைத்துக்கொண்டாள். ஆனாலும் அவள் மனம் அமைதியுறவில்லை. மரத்துக்குப் பட்ட காயம் ஓர் அபசகுனமாகவே அவளுக்குத் தோன்றியது. நல்லதை நினைக்கிறப்போ பொல்லாதது நடந்திடும் போலே இருக்கே! அவள் அந்தப் பால்மரத்தில் பட்ட காயத்தைத் தன்னுடைய நெஞ்சில் பட்ட காயமாக நினைத்துக்கொண்டாள்.

எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு மற்ற மரங்களையும் வெட்டி முடித்தாள் அவள். பிறகு தன் தலைமயிரை ஒழுங்காக ஒதுக்கிவிட்டுக்கொண்டாள்! இடுப்பில் செருகியிருந்த கைக்குட்டையால் முகத்தை அழுத்தித் துடைத்துக்கொண்டாள். பாலனின் அருகில் வந்து நின்று "வாங்க போகலாம்" என்றாள்.

"பின்னாலே உக்காந்துக்க, சைக்கிளில் போயிடலாம்".

"ஊஹூம், இப்போ என்ன அவசரம் வந்திருக்கு? மெதுவா நடந்தே போகலாம், வாங்க".

பால் வெட்டும் தொழிலாளருக்கு அது இடைவேளை நேரம். தன்னுடைய அம்மாவும் அப்பாவும் அருகில் உள்ள சிற்றருவிக் கரையில் தனக்காகவும் தன் அக்காள் காமாட்சிக்காகவும் காத்திருப்பார்கள் என்றாள் கண்ணம்மா. சாப்பிட்டுவிட்டுச் சற்றே இளைப்பாற நேரம் இருக்கும். பிறகு மீண்டும் பால் சேகரிக்கும் வேலைக்குத் திரும்பவேண்டும்.

"உங்ககிட்ட ஒரு சேதி சொல்ல வேண்டியிருக்கு" என்று தொடங்கினாள் கண்ணம்மா.

"சொல்லேன்!"

"அதை இப்பவே சொல்லிவிட முடியுமா?" என்று அவனை ஏறிட்டுப் பார்த்தாள். "வர்ற ஞாயித்துக்கிழமை இந்தப் பக்கம் வாங்க; மெதுவாப் பேசுவோம்!"

"ஞாயித்துக்கிழமை நான் வர்ரேன். ஆனால் அதே சேதியை இப்பக்கூட சொல்லலாமே?"

"இந்த நோட்டீஸுன்னு ஒன்னு வரலேன்னா அதைப் பெரியவங்க விஷயம்னு விட்டிருப்பேன். நோட்டீஸைக் கண்டபிறகு ராத்திரியெல்லாம் எனக்குத் தூக்கமே வரலே. என்னென்னமோ கெட்டசொப்பனமெல்லாம் கண்டேன்".

"அனாவசியமா நீ ஏன் பயப்படறே?"

"பயப்படாமே எப்படி இருக்க முடியும்?" அவன் முகத்தை நேருக்கு நேர் பார்த்துக் கேட்டாள் கண்ணம்மா.

அவனுக்குப் பதில் சொல்லத் தெம்பில்லை. மௌனமாக இருவரும் நடந்தார்கள்.

தோட்டத்து மேட்டருவிக் கரையில் கண்ணம்மாவின் அப்பா பழனி, அம்மா தங்கம், அக்காள் காமாட்சி மூவரும் அவளுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் சாப்பாடு தயாராக இருந்தது.

"வாத்தியார் மாப்பிள்ளே! வாய்யா, வீட்டிலே எல்லாரும் சுகமா?" என்று உற்சாகத்தை வரவழைத்துக்கொண்டு பாலனுக்கு வரவேற்புக் கூறினான் பழனி. அவனை அன்றைக்கு அங்கே கண்டது மற்றவர்கள் அனைவருக்குமே ஆறுதலாக இருந்தது. "உட்கார் முதல்லே, சேர்ந்து சாப்பிடுவோம்! ரொம்ப நாளாச்சு" என்றான் பழனி.

பாலனுக்குப் பழனியின் பேச்சு வெறும் வெளிப்பூச்சு என்று பட்டது. உட்கார்ந்து கொண்டே "நோட்டீஸ் வந்திருக்காமில்ல?" என்றான் பாலன்.

இதைக் கேட்டவுடன் பழனியின் செயற்கை உற்சாகம் பஞ்சாய்ப் பறந்துவிட்டது. அங்கிருந்த அனைவர் முகங்களிலும் ஈயாடவில்லை. தன் சட்டைப் பையிலிருந்து பழனி ஒரு காகிதத்தை எடுத்துப் பாலனிடம் நீட்டினான்.

படித்துப் பார்த்தான் பாலன்.

அதில் அந்தத் தோட்டத்தை விற்பனை செய்ய முடிவுசெய்துவிட்டதாகவும், அதில் வேலை பார்த்துவரும் எல்லாத் தொழிலாளர்களும் இன்னும் ஒரு மாதந்தான் அங்கே வேலை பார்க்கலாம் என்றும் கண்டிருந்தது. ஒரு மாதத்துக்குப் பின் அங்கே யாருக்கும் வேலை கிடையாது. தோட்டத்து லயனை அவர்கள் காலிசெய்துவிட்டு வெளியேறிவிட வேண்டும். அப்படி அவர்களாகவே காலி செய்யத் தவறினால் அவர்கள் கட்டாயமாக வெளியேற்றப்படுவார்கள். போகும்போது அவர்களுக்குரிய கணக்கைத் தீர்த்துப் பாக்கியுள்ள கூலி கொடுக்கப்படும்.

பாலன் சிலையாக உட்கார்ந்துவிட்டான். மலைநாட்டுத் தோட்டங்களில் உழைத்துவரும் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் எதிர்காலம் எவ்வளவு பலவீனமான அடிப்படையில் சுழல்கிறது என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது. அவனுடைய மாமன் குடும்பம், அக்காள் குடும்பம் தவிர மற்றுமுள்ள சுமார் இருநூறு குடும்பங்களின் கதியை எண்ணிப் பார்த்தான்.

அவனுக்குச் சாப்பாடு உள்ளே போகவில்லை. மற்றவர்களைத் திருப்திப்படுத்த வேண்டுமென்பதற்காகச் சாப்பிடுவதுபோல் பாவனை செய்தான்.

3. வேரற்ற கன்றுகள்

ரப்பர் மரத் தோட்டத்தின் நிழலில் சலசலத்தோடும் மேட்டருவிக்கு அருகில் இதமான மென்காற்று வீசும் வேளையில் அமைதியும் ஆனந்தமும் நிறைந்த சூழ்நிலையில்தான் அவர்கள் சாப்பிட அமர்ந்திருந்தார்கள். ஆனால் அங்கிருந்த ஐவர் மனத்திலும் அமைதியோ ஆனந்தமோ இல்லை. பாலன் மற்றவர்களை ஏமாற்றுவதற்காக அவர்களுடைய சாப்பாட்டில் பங்குகொண்டான். மற்றவர்களோ பாலனிடம் தங்கள் கவலையை மறைப்பதற்காகச் சாப்பாட்டு நாடகம் நடத்தினார்கள்.

இருந்தாலும் பாலனின் அத்தை தங்கத்தால் பொறுக்கமுடியவில்லை. "இனிமே நாங்க எங்கே போறது? எப்படிப் பொழைக்கிறது? ஒருத்தரா, ரெண்டுபேரா? ஏழு பேர் கஞ்சி குடிக்கணுமே?" வாயில் சோற்றை வைத்துக்கொண்டே குமுறினாள்.

"வேலையையும் விட்டு வீட்டையும் விட்டு தோட்டத்தையும் விட்டு வெளியே போகணுமாம். நோட்டீஸ் குடுத்திட்டான்!"

"இன்னம் ஒரு மாசம் இருக்கில்லே? கவலைப்படாதிங்க" என்று அவர்களைத் தேற்றிவிட்டு தனக்குள் கவலைப்படலானான் பாலன். அந்தத் தோட்டத்துக் காட்டுக்குள் வேலை செய்யும் அத்தனை குடும்பங்களையும் அப்போது வாட்டிக்கொண்டிருந்த கவலை அது. 'எங்கே போறது? எப்படிப் பிழைக்கிறது?"

அவர்களுக்கு மத்தியில் உட்கார்ந்து கலங்கிக்கொண்டிருக்காமல் ஏதாவது அதற்கு வழிதேட வேண்டுமெனத் தோன்றியது பாலனுக்கு. எழுந்துவந்து தன் சைக்கிளை எடுத்துக்கொண்டான். "சரி, நீங்க பாலெடுத்துக் குடுத்திட்டு வீட்டுக்கு வாங்க, இதைப்பத்தி நானும் விசாரிச்சுக்கிட்டு வர்றேன். வீட்டுக்கு நான் வர்றதா அக்காகிட்டேயும் சொல்லுங்க."



அவன் அக்கா லட்சுமியின் குடும்பம் பழனியின் வீட்டுக்கு முன்னால் தான் அதே லயனில் இருந்தது.

"லட்சுமியை நினைச்சாத்தான் இன்னம் பாவமாயிருக்கு" என்றாள் தங்கம்.

பாலன் சைக்கிளில் ஏறி மிதித்தான். அவன் மனம் இந்தப் பிரச்னையுடன் மோதுவதற்கு ஒரு வழி தேட முயன்றது. தோட்டத் துண்டாடலால் பாதிக்கப்படும் தொழிலாளர்களைக் காப்பாற்ற அரசாங்கம் கூட்டுறவு இயக்கம் ஒன்றுக்கு ஆதரவு தரத் தொடங்கியிருந்தது. தலைவர்கள் சிலர் தோட்டத்துக்குத் தோட்டம் சென்று கூட்டுறவு சங்கத்தில் சேரும்படி தொழிலாளர்களைத் தூண்டிக்கொண்டிருந்தார்கள். அந்த இயக்கம் வெற்றி பெறுமானால் ஓரளவு அவர்களுடைய பாதுகாப்புக்கு வழி இருப்பது போல் பாலனுக்கு ஒரு நம்பிக்கை தலைநீட்டியது.

மாரியம்மன் கோவில் பக்கம் பாலன் வந்தபோது கோவில் மண்டபத்தில் சில முதியவர்கள் கூட்டமாய்க்கூடிப் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டான். அவர்களில் அவனுக்குத் தெரிந்தவர் யாரும் இல்லை. அங்கிருந்து தொழிலாளர் குடியிருப்பை நோக்கித் திரும்பினான். லயனை ஒட்டினாற்போல் அதன் தொடக்கத்தில் மலையாளத்து முஸ்லிம் ஒருவரின் கடை இருந்தது. பலசரக்கு வியாபாரம் ஒரு புறமும் தேநீர் வியாபாரம் மறுபுறமும் நடக்கும் கதம்பக் கடை அது. மாடியில் குடும்பம். கீழே கடை. தேநீர்க்கடை மேசையைச்சுற்றி உட்கார்ந்து ஏழெட்டு இளைஞர்கள் பரபரப்போடு பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவனான கணேசன் பாலனைப் பார்த்துவிட்டுக் கூட்டத்தை விட்டு எழுந்து வந்தான்.

"என்ன கணேசா,வேலைக்குப் போகலியா?"

"வா பாலா" என்று அவனை உள்ளே அழைத்துச் சென்றபடியே 'வேலைதான் போயிடும் போலே இருக்கே; அதனாலே தான் இன்னிக்கு வேலைக்குத் திட்டி போட்டுட்டு இங்கே கூட்டம் போட்டிருக்கோம்"என்றான் கணேசன்.

பாலனுக்குத் தெரிந்த இளைஞர்கள் நாலைந்து பேர் அங்கே இருந்தார்கள். சுற்றிலும் ஒரு கண்ணோட்டம் விட்டான் பாலன். பெரும்பாலோர் தோட்டத்துத் தமிழ்ப்பள்ளிக்கூடத்தில் ஆறும் வகுப்பு வரையில் படித்து நிறுத்திவிட்டு தங்கள் பெற்றோரைப் போலவே தோட்ட வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். சிலர் ஆறும் வகுப்பைக்கூட எட்டவில்லை. அந்தத் தோட்டத்து மண்ணிலேயே கருவாகி, உருவாகி, வித்தாகி, பயிராகி இன்று சிறு செடியாய் வேரூன்றி வளரத் துடிப்பவர்கள். தோட்டமாகிய அந்த மரக்காட்டை விட்டால் வேறு வெளி உலகத் தொடர்பே சிறிதும் இல்லாதவர்கள். மேற்படிப்புக்கும் வழி இல்லை. வேறு வேலைக்கும் பயிற்சியில்லை. சரியாக அவர்களுக்கு வழிகாட்டுவோரும் இல்லை. ஆணிவேர் நறுக்கப்பட்ட இளங் கன்றுகளாக அவர்கள் அங்கே தத்தளித்துத் தடுமாறிக்கொண்டிருந்தார்கள்.

பாலனுக்குத் தேநீர் வரவழைத்துக் கொடுத்துவிட்டு கணேசன் பேசினான்.

"வெள்ளைக்காரத் தோட்ட முதலாளிக்கு ஆள் தேவைப்பட்ட காலத்திலே நம்மவங்களை நாட்டை விட்டு நாட்டுக்கு ஒப்பந்தக் கூலியாக் கொண்டாந்தான். அரை வயித்துக் கஞ்சிக்கு அல்லும் பகலுமா உழைக்கச் சொன்னான். உறிஞ்ச வேண்டியதையெல்லாம் உறிஞ்சியாச்சு; சக்கையைத் துப்பி எறிஞ்சிட்டு தோட்டத்தை வித்த பணத்தை மூட்டைக் கட்டிக்கிட்டு அவன் கப்பலேறப் போறான். நாம இப்ப எங்கே போறது? எப்படிப் பிழைக்கிறது?"

இல்லத்தரசிகளே



உங்கள் கணவரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் விமர்சனத்தை ஐம்பது சொற்களில் கட்டுச் செட்டாக, பட்டவர்த்தனமாக, படிக்கச் சுவையாக எழுதி, உங்கள் இருவரின் நிழற்படத்தோடு 10-5-77-க்குள் எங்களுக்கு அனுப்புங்கள். உங்கள் விமர்சனத்தை 25-5-77 இதழில் வாசகர்களுக்கு நாங்கள் தருகிறோம்.

"இந்த நிலையிலே இனிமே நாம எப்படிப் பிழைக்கிறதுங்கிறதுதான் தான் நம்மோட ஒரே பிரச்னை" என்றான் பாலன். "இதைப்பத்தித்தான் நாம யோசனை பண்ணி ஒரு முடிவுக்கு வரணும்?"

"இனிமேநாம இந்தியாவுக்குத் திரும்பிப்போக முடியாது. பொறந்த மண்ண நினைச்சு மண்டை விங்கிப் போயிருந்த பழைய தலைமுறை இங்கேயே மண்டையைப் போட்டிடுச்சு. இந்த மண்ணிலே நாம பிறந்து வளர்ந்தாச்சு. சாதி சனம் யாரும் நமக்கு அங்கே இல்லே. இருந்தாக்கூட அவுங்க பாடே அங்கே திண்டாட்டம்னு தெரியுது" என்றான் கணேசன்.

"எங்கேயோ காடுகளை வெட்டிப் புதுசா குடியிருப்பு ஏற்படுத்துறாங்களாம். குடும்பத்துக்கு இவ்வளவுன்னு நிலமும் தர்றாங்களாம்" என்றான் வேறொருவன்.

"சாபா மாநிலத்திலே புதுசா ரப்பர் தோட்டம் போடப் போறாங்களாம். காடுகளை வெட்டி அழிக்கணுமாம், தோட்டம் போடணுமாம். அங்கேகூட வேலை கெடைக்கும்" என்றான் மற்றொருவன்.

"ஆளுக்குக் கொஞ்சம் பணம் குடுத்துக் கூட்டுறவு சங்கத்திலே சேர்ந்தா, அரசாங்கம் வேறெ கடன் குடுக்குதாம். இதே தோட்டத்தைக் கூடக் கூட்டுறவிலே நம்மாலே விலைக்கு வாங்க முடியுமாம்" இது ஒருவனின் யோசனை.

இப்படி ஆளுக்கொரு யோசனையாகக் கூறினார்கள் இளைஞர்கள். வாழ்க்கையே போராட்டமாகிவிட்டதால் அவர்களிடையே சிந்திக்கும் திறமையும் கூடவே சிறிது சிறிதாக வளரத் தொடங்கியிருந்தது. படிப்பு மிகுதியாக இல்லாவிட்டால்கூட ஓரளவு உலக அநுபவம் அவர்களிடம் இல்லாமல் இல்லை.

"எனக்கு இருக்கிற கடைசி நம்பிக்கை கூட்டுறவு முயற்சி ஒண்ணுதான்" என்றான் பாலன்.

"ஊர்கூடித் தேர் இழுக்க நம்மாலே ஆகுமா?"

"வேறே நல்ல வழி எனக்கு இப்போதைக்குத் தோணலே. வேலையுமில்லாமே, வீடுமில்லாம தெருவுக்குப் போய் பிச்சை எடுக்கிறதா? இல்லே கூடி வாழ்றதா? ரெண்டிலே ஒண்ணு முடிவு பண்ணிக்க வேண்டியதுதான்."

மலைப்பாகத் தோன்றியது இளைஞர்களுக்கு. அந்தத் தோட்டத்தில் உள்ள எல்லாத் தொழிலாளர்களும் பணம் கொடுத்துச் சங்கத்தில் சேரவேண்டும். அக்கம்பக்கத்துத் தோட்டத்தில் உள்ளவர்களும் சேரவேண்டும். பெரிய அளவில் சேர்ந்தால்தான் அரசாங்கக் கடனைப் பெற்று முதலில் அந்த ஒரு தோட்டத்தையாவது விலைக்கு வாங்கமுடியும். இன்னும் ஒரே மாதந்தான் இடையில் இருந்தது.

"தமிழனோட சரித்திரத்திலே என்னைக்காவது அவன் ஒண்ணு சேர்ந்து உழைச்சதாக் கதை இருக்கா? பழைய காலத்துலே சோழன் பாண்டியனை அடிச்சான்; பாண்டியன் சேரனை அடிச்சான். இந்தக் காலத்திலே நமக்குள்ளே கட்சி கட்டி ஒருத்தனை ஒருத்தன் அடிச்சுக்கிறானுங்க. ஒன்பது கட்சி, தொண்ணூறு சாதி" என்றான் கணேசன்.

பாலனுடைய மனம் இந்தப் பயங்கரமான உண்மையை நேருக்கு நேர் கேள்விப்பட்டவுடன் நாணத்தால் குன்றியது. கடல் கடந்துவந்த நாட்டில் மலாய் மக்களுக்கும் சீன மக்களுக்கும் இடையில் சிறுபான்மையினராக வாழும் நிலைக்குத் தள்ளப்பட்ட பிறகும் கூட இவர்கள் ஒற்றுமையாய் வாழ முடியாவிட்டால்...?

"கூட்டுறவுன்னா கூட்டும் வேணும், உறவும் வேணும். ஒன்றுபட்டால் வாழலாம். இல்லேன்னா அதை நான் என் வாயாலே சொல்லமாட்டேன்"

"இதெல்லாம் நடக்காதுங்க, விட்டுத் தள்ளுங்க!" என்றான் குப்புசாமி என்ற ஓர் இளைஞன். கணேசனுக்கு ஓங்கி அவன் கன்னத்தில் ஓர் அறை விடவேண்டும் போலிருந்தது. அந்தத் தோட்டத்துக் கிராணிக்கு அவன் வேண்டியவன். அவனை யாரும் அங்கே கூப்பிடவில்லை. ஒருவேளை அவனாக அங்கே உளவுபார்க்க வந்திருக்கிறானோ?

"ஏன் நடக்காது?"

"நம்மவங்க ஒண்ணு சேருவாங்களா? ஆண்டிங்க கூடி மடங் கட்டினாப்பிலே தான்..."

கூட்டுறவு முறையில் தொழிலாளர்களைச் சேர்த்து ஏற்கனவே ஓரிடத்தில் தோட்டம் வாங்கியிருந்தார்கள். ஆண்டிகள் மடம் கட்டித்தான் இருந்தார்கள். ஆகவே இளைஞர்கள் பலர் கடுமையாக முயற்சி செய்து தொழிலாளர்களை ஒன்று திரட்டினால் இதே தோட்டத்தை விலைக்கு வாங்கிவிடலாம் என்ற நம்பிக்கை பாலனுக்கு ஏற்பட்டது.

"முதல்லே நமக்கு இதே தோட்டத்தைக் கூட்டுறவிலே வாங்க முடியுங்கற நம்பிக்கை வேணும். இங்கே இருக்கிற நமக்குள்ளே முதல்லே இந்த நம்பிக்கை பரவணும். பிறகு பம்பரமா உழைச்சு நாம ஒவ்வொருவரும் இந்த நம்பிக்கையைப் பெரியவுங்ககிட்டே பரப்பணும்" என்று பேசிக்கொண்டு போனான் பாலன்.

"எனக்குத் துளிக்கூட இதிலே நம்பிக்கையில்லே" என்று கத்தினான் குப்புசாமி; "இதெல்லாம் வெட்டிப் பேச்சு!"

(தொடரும்)

எதற்கும் உதவும் எலுமிச்சம்பழம்

நமது அன்றாட வாழ்க்கையில் எலுமிச்சை இடம் பெறுவதால் ஆரோக்கியமான வாழ்விற்கு ஏதுவாகின்றது. மலிவான விலையில் கிடைக்கும் எலுமிச்சையின் தரமோ மிக உயர்ந்தது.

எலுமிச்சை ஊறுகாய் இல்லாமல் சிலருக்குச் சாப்பாடே செல்லாது. இந்தியர்களின் உணவு வகைகளில் எலுமிச்சை ஊறுகாய் தனிச் சிறப்புப் பெறுகின்றது.

தலையில் பொடுகு உள்ளவர்கள் எலுமிச்சம் பழத்தைக் குறுக்காக அறுத்துத் தூள் உப்பைத் தொட்டுத் தலையில் தேய்த்துக் குளித்தால் பொடுகு இருக்குமிடம் தெரியாமல்போய் விடும்.

சொறி, சிரங்கு போன்ற நோய்களுக்கு எலுமிச்சம் பழச் சாற்றோடு பச்சை மஞ்சள், தூள் உப்பு இவற்றைக் கலந்து அறைத்துத் தேய்த்தால் சொறி சிரங்குமீண்டும் தலை எடுக்காது.

தலைவலிக்கு ஒரு துண்டு எலுமிச்சம் பழத்தால் இரு பொட்டுகளிலும் அழுத்தித் தேய்த்துக்கொண்டால் வலி மறைந்துவிடும்.

அஜீரணத்திற்கு ஓமத்தைப் பொடி செய்து வென்னீர் கலந்து பாதி எலுமிச்சம் பழச்சாற்றுடன் பருகினால் உடனே குணமடையலாம்.

சூட்டினால் ஏற்படும் வயிற்றுப் போக்கிற்கு ஒரு தேக்கரண்டி கசகசாவை மைபோல் அறைத்து ஒரு எலுமிச்சம் பழச் சாற்றுடன் உட்கொண்டால் உடன் நலன் பெறலாம்.

பித்த சம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் எலுமிச்சை கைகண்ட மருந்து.

மீன் வெட்டியபிறகு கைகளை எலுமிச்சஞ் சாற்றால் கழுவினால் துர்நாற்றம் நீங்கும்.

செப்பு, பித்தளைப் பாத்திரங்களை எலுமிச்சஞ் சாறு கொண்டு தேய்த்தால் நீண்ட நாட்களுக்கு ஒளிவீசும்.

—கௌரி

செல்வியர் தேசசேவை

நாட்டினை நிர்மாணிக்கும் பணியிலும், கல்வி மற்றும் வளர்ச்சிப் பணிகளிலும், கல்வி மற்றும் பிற பணிகளிலும் பெண்கள் அதிக அளவில் பங்கேற்பதை நாம் பார்க்கிறோம். அதை விரும்பவும் செய்கிறோம். சில பெண்கள் மாத்திரம் பெரிய பதவிகளை அடைவதில் மட்டும் நமக்கு அக்கறையில்லை. சராசரிப்பெண், கிராமப்புறப் பெண், நகரத்துப் பெண் அனைவரும் சமுதாயத்தில் மதிக்கப்படவேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

காலங்காலமாக பல உலகத் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒரு நாட்டின் நாகரிகம், வளர்ச்சி ஆகியவற்றை அந்த நாடு அதன் பெண்களுக்குக் கொடுக்கும் சமுதாய அந்தஸ்து, பதவி ஆகியவை மூலமாகத்தான் தீர்மானிக்க முடியுமென்று. பெண்கள் மதிக்கப்பட்டால் தான் அவர்களின் குரல் கேட்கப்படும். ஆனால் அந்த மதிப்பினை உழைத்துப் பெறவேண்டும். எனவே, வேகமாக மாறிவரும் இன்றைய உலகில் இதற்கு முன் எப்போதையும் விடப் பெண்களுக்குத் தற்போது மிகப்பெரிய பொறுப்புக்கள் உள்ளன.

பொதுவாழ்வுக்கு வரும் பெண்களுக்கு இரு பங்கு கஷ்டமான பணியுள்ளது. ஏனெனில், அவர்கள் பொதுப் பணியையும் செய்யவேண்டும். அதே நேரத்தில் வீட்டுப் பொறுப்பையும் புறக்கணித்தல் கூடாது. வேறு வேலைகளை மேற்கொள்வதால் அவர்கள் தங்களது வீடுகளைப் புறக்கணித்தல் கூடாது. இரு பணிகளையும் சிறப்புடன் செய்ய அவர்கள் தயாராக இருக்கவேண்டும். சில பெரிய பணிகளும் உண்டு. ஆனால் சிறிய வேலைகளை நன்றாக செய்து முடிப்பவர்கள்தான் பெரும் பணிகளை ஏற்க முடியும்.

எந்தவிதச் செலவும் இல்லாமல் எந்தவிதப் போக்குவரத்தும் இல்லாமல் ஒவ்வொரு பெண்ணும் தனது சுற்றுப் புறத்தை முன்னேற்ற முடியும். தனக்குப் பக்கத்தில் வசிப்பவர்களுக்குக் கற்றுக்கொடுப்பது, அதாவது படிக்கக் கற்றுத் தருவது, வீட்டையும் தெருக்களையும் சுத்தமாக வைத்திருக்கக் கற்றுத்தருவது, குழந்தைகளை நல்ல முறையில் பராமரிப்பது அல்லது அவர்களுக்குச் சத்துணவு வழங்குவது குறித்துச்சொல்லித் தருவது ஆகிய பணிகளைச் செய்யலாம். நமது அன்றாட வாழ்க்கையில் நாம் பல காரியங்களைச் செய்கிறோம். அதையே, நமது வேலை செய்யும் பகுதிகளாக விரிவாக்கிக்கொண்டால், அதுவே மிகப் பெரிய தேச சேவையாக அமையும்.

[இந்தியாவின் பிரதமராக இருந்த போது திருமதி இந்திரா காந்தி மதுரையில் நடைபெற்ற மகளிர் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து.]

பிரண்டை இலை மகிமை

பிரண்டை இலையைத் துவையல், சாம்பார் போன்ற கறி வகைகளாகச் சமைத்து உண்பவர்களுக்கு நோயே வராதாம். இதனை நாம் இப்போது பெரும்பாலும் மறந்து விட்டோம். ஆனால் மலாய் அன்பர்கள் இந்த மூலிகை இலையை விரும்பி உணவில் சேர்த்து வருகின்றார்கள்.

மலர்களிலும் பல பயன் உண்டு

மலர் சூடிக் கொள்வதென்றால் இந்தியப் பெண்களுக்குக் கொள்ளை ஆசை. அதனால் அவர்களிடம் தனிக்கவர்ச்சி ஏற்படுகின்றது. கவர்ச்சியும் அழகும் ஏற்படுவது ஒருபுறம் இருக்கட்டும். சில மலர்களைச் சூடுவதால் சிலநோய்கள் தீருகிறதே. அது பெரிய நன்மையல்லவா! அந்த நன்மைகளை மலர் சூடும் மங்கையர்களே, தெரிந்துகொள்ளுங்கள்!

ரோஜா மலர்: அழகிலும் மணத்திலும் சிறந்தது. எல்லாவிதமான தலையலங்காரங்களுக்கும் உகந்தது. ரோஜாமலரின் நறுமணம் இருதயத்திற்குப் பலத்தைக் கொடுக்கிறது. நெஞ்சு சளியைப் போக்குகிறது. சாற்றைக் குழந்தைகளுக்குக்கொடுப்பதால் பலமடைகின்றார்கள். இவ்விதழ்களைத் தேனில் ஊறப் போட்டு "குல்கந்து" தயாரித்து உண்டால் உடல் சோர்வு நீங்கும்.

ஜாதிப்பூ: ஜாதிப்பூ எனப்படும் பிச்சிப் பூவின் மணம் கண்வலி, கண்கட்டி, கண் எரிச்சல் முதலானவற்றைத் தடுக்கும். இதை நந்தியாவட்டை பூ என்றும் கூறுவார்கள். முற்காலத்தில் காலையில் சிறிது நேரம் கண்களின் மேல் இப் பூவை ஒற்றி எடுப்பார்களாம். இதனால் கண் வியாதி, நீங்கி விடும். இன்றும் இதனைச் செய்பவர்கள் உண்டு.

குண்டு மல்லிகை: இதைச் சூடுவதால் கண்பார்வை கூர்மையாகின்றது. கண்களுக்கு நன்மை தரும் இதன் சுகந்த குணத்திற்காகத் தினமும் இந்த மலரை உபயோகப் படுத்தலாம். இதனாலேயே நம் முன்னோர்கள் விழாக்காலங்களிலும் சிறப்பு நாட்களிலும் மல்லிகையைப் பெரிதும் பயன்படுத்திருர்கள்.

தாழம்பூ: வாதநோய் கண்டவர்களுக்கு இப் பூவைப் பிடிப்பு உள்ள இடங்களில் வைத்துச் சுற்றிவிட்டால் வாதம் நீங்கும்; அடிக்கடி தாழம்பூ உபயோகிப்பவர்களை வாத நோய் அணுகாது. இருதயத்திற்கும் பலனளிக்கும்.

-தேவி

தமிழ் நேசன் நாளேட்டில் ஏறத்தாழ பதினாலரை ஆண்டுகள் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய பிறகு அப்பொறுப்பிலிருந்து கடந்த ஆகஸ்டு மாதம் 20ம் தேதி நான் விடுபட்டது பற்றி மக்களிடையே பலவிதமான வதந்திகளும் ஊகங்களும் அடிபடுவதால் இதுகுறித்து உண்மையான நடப்பைத் தெரிவிப்பது நன்மை என்று கருதுகிறேன்.

"தமிழ் நேசனி"லிருந்து இப்படித் திடீரென்று எனக்கு "விடுதலை" கிடைக்குமென்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. நேசன் வாசகர்களும் இதனை நிச்சயம் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். எல்லாம் பயங்கரக் கனவுபோல், ஒரு நொடியில்—எண்ணிப் பார்ப்பதற்கு முன்பே—நடந்து முடிந்து பத்திரிகையிலும் நான் விலகிய செய்தி முதல் பக்க அறிவிப்பாக ரத்தினச் சுருக்கமான முறையில் ஒட்டுக்கடை மாற்ற அறிவிப்புபோல் வெளிவந்துவிட்டது.

இது ஒரு வேதனைக் கதை

நேசன் நிர்வாகத்திற்கும் எனக்கும் 1976 மார்ச் மாதத்திற்குப் பிறகு ஒருசில கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தன. எனக்கு எஸ். எம். எஸ். பட்டம் கிடைத்த பிறகு மலாக்காவில் பொன்னாடை போர்த்திப் பாராட்டு விருந்து நடத்தி தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதிக்கு $3,000க்கு மேல் வழங்கிச் சிறப்பித்தார்கள். இந்தச் செய்தி நேசனில் விரிவாகப் படங்களுடன் வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து நேசன் முதலாளியும் நிர்வாகிகளும் என்னை அழைத்துத் தங்களுடைய அதிருப்தியை வெளியிட்டனர். "தமிழவேள் சாரங்கபாணியைப் போல நீங்களும் பத்திரிகையில் அதிகமாகச் சொந்த விளம்பரம் செய்துகொள்கிறீர்கள். காசு கொடுத்துப் பத்திரிகை வாங்குபவர்கள்"இந்தமாதிரிஆசிரியரைப் பற்றிய சுய விளம்பரங்களைப் படிப்பதற்காகவா பத்திரிகை வாங்குகிறோம்"- என்றும் கேட்கிறார்கள்" என்று கருத்து வெளியிட்டார்கள். பத்திரிகை விற்பனை இதனால் குறைந்து வருகிறது என்றும் சொன்னார்கள்.

இந்த விமர்சனத்தைக் கேட்டவுடன் எனக்கு மனம் பொறுக்கவில்லை. "ஆசிரியரின் செய்தி வருவதால் பத்திரிகை விற்பனை குறைவதாக இருந்தால் அந்தச் செய்தி வராமல் இருப்பதே நல்லது. இனிமேல் அப்படி எந்தச் செய்தியும் வெளிவராது" என்று கடுப்பாகச் சொல்லிவிட்டு மேற்கொண்டும் விமர்சனங்களைக் கேட்க விரும்பாமல் பேச்சை முடித்துக்கொண்டு வந்துவிட்டேன்.

இந்த நிகழ்ச்சிக்கு முன்புவரை நேசன் உரிமையாளரும் நிர்வாகிகளும் ஆசிரியர் பகுதியைப் பொறுத்தவரையில் எந்தவிதமான தலையீடும் செய்ததில்லை. பத்திரிகை தர்மமும் அதுதான். எந்தச் செய்தியைப் போடவேண்டும் எதனைப் போடக்கூடாது என்பது பற்றியும் என்னிடம் பேசியதில்லை. முழுமையான சுதந்தரத்தோடு நிர்வாகத்தின் தலையீடு எதுவுமின்றி இயங்கக்கூடிய சூழ்நிலையே ஆரம்பமுதல் அந்த நிமிஷம்வரை இருந்து வந்தது. ஆகவே நிர்வாகத் தரப்பில் இருந்து இப்படித் திடீரென்று விமர்சனமும் அதிருப்தியும் வெளியிடப்பட்டது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

குமரன் வார இதழ்

சுய விளம்பரம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் எந்த நாளிலும் எனக்கு இருந்ததில்லை. பத்திரிகை ஆசிரியராக மட்டும் அலுவலக அறைக்குள் ஊர் பேர் தெரியாமல் அடங்கிக் கிடந்திருந்தால் நான் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் பற்றிய செய்திக்கே இடமிருந்திருக்காது. ஆனால் தமிழகத்தில் "குமரன்" வாரப் பத்திரிகையில் என் பத்திரிகை வாழ்க்கையைத் தொடங்கிய காலத்திலிருந்தே பொது நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கின்ற "பைத்தியம்" என்னைப் பிடித்துக்கொண்ட காரணத்தினால் பொன்னி நடத்திய காலத்திலும், அதன் பின்னர் சிங்கப்பூர் "தமிழ் முரசு" நாளேட்டில் பணியாற்றிய காலத்திலும் அதற்குப் பிறகு தமிழ் நேசனுக்கு வந்த பின்னரும் நெடுகிலும் பொது நிகழ்ச்சிகளுக்கும் கூட்டங்களுக்கும் திருமணங்களுக்கும் செல்லுகின்ற தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் நான் சிக்கிக்கொள்ளும்படி ஆகிவிட்டது.

தமிழ் முரசு ஆசிரியர் தமிழவேள் அவர்களும் என்னை இந்தப் பொதுப் பணியில் உற்சாகப்படுத்தினார்களே ஒழியத் தடை செய்ததில்லை. அதுபோலவே நேசன் உரிமையாளர் அமரர் மலையாண்டி செட்டியார் அவர்களும், அவருடைய மறைவுக்குப் பிறகு அவருடைய புதல்வர் திரு. நாகப்பன் அவர்களும், மற்றும் நேசன் நிர்வாகிகள் புலவர் சேதுராமன், திரு. சு. நடராஜன் ஆகியோரும் பொது நிகழ்ச்சிகளுக்கு நான் செல்வது குறித்து எந்த விதமான மறுப்பையும் கூறியதில்லை.

இந்தச் சூழ்நிலையில் ஏராளமான பொது நிகழ்ச்சிகளுக்கு என் உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் தடையின்றி நான் சென்றுவந்தேன். அவ்வாறு பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதன் மூலம் நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்கின்ற அரிய வாய்ப்பு கிடைத்ததோடு சமுதாயத்தில் பல்வேறு நிலையிலுள்ள மக்களையும் அடிக்கடி சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை நேருக்குநேர் அறிகின்ற வாய்ப்பும் கிட்டியது. இதன் பயனாக நேசன் பத்திரிகையைச் சமுதாயத்தின் பிரச்னைகளுக்கு நிலைக்களனாகவும் சமுதாயத்தின் உண்மைக் குரலாகவும் படிப்படியாக மாற்றி அமைக்கின்ற பணியைச் செம்மையாகச் செய்ய முடிந்தது. சமுதாயத்தில் எந்த மட்டத்தில் எங்கே பிரச்னை தோன்றினாலும் அதனை உடனுக்குடன் எதிரொலிக்கின்ற சங்கநாதமாக நேசன் முழக்கமிடுகிற நிலை இதனால் பிறந்தது. நேசன்மீது மக்களின் நம்பிக்கை ஒவ்வொரு நாளும் பெருகுகிற வாய்ப்பும் இதனால் ஏற்பட்டது. இந்தக் காரியத்தை எல்லாம் வர்த்தக நோக்கத்தோடு நான் மேற்கொள்ளவில்லை என்றாலும் நேசன் மீது மக்களின் நம்பிக்கை பெருகப் பெருக நேசனின் விற்பனையும் வர்த்தக வளர்ச்சியும் இயல்பாக அதிகரித்ததில் வியப்பில்லை.

நேசனில் நான் பொறுப்பேற்றபிறகு நேசன் கண்டிருக்கிற மகத்தான வளர்ச்சியைப்பற்றி நானே சொல்வது "சுய விளம்பரமாக" இருக்கும். இதனை உறுதிப்படுத்தும் பொறுப்பை நேசன் வாசகர்களிடமே விட்டுவிடுகிறேன்.

தமிழ்ப்பள்ளி நிதி

மலாக்கா பாராட்டு விழாச் செய்தியை நிர்வாகிகள் விமர்சனம் செய்த பிறகு பொது நிகழ்ச்சிகளுக்குச் செல்வதை இரண்டு மூன்று மாதங்களுக்குப் பல்லைக் கடித்துக்கொண்டு கட்டுப்படுத்திக்கொண்டேன். இதற்கிடையில், நிர்வாகத் தரப்பில் மறுபடியும் என்னைச் சந்தித்து மற்றும் சில அதிருப்திகளையும் வெளியிட்டார்கள். அவற்றில் முக்கியமான பிரச்னை தமிழ்ப்பள்ளி மாணவர் உதவிநிதி பற்றியதாகும்.

நேசன் நிர்வாகிகளின் சம்மதத்தோடுதான் தமிழ்ப் பள்ளி மாணவர் உதவிநிதி $1 கோடி திரட்டும் ஐந்தாண்டுகால லட்சியத்துடன் தொடங்கப்பட்டது. ஆனால் இந்த நிதியைச் சேர்ப்பதும் நிர்வகிப்பதும் நேசனுக்குப் பெரிய பளுவாகி வருவதாகவும் நேசன் ஊழியர்கள் பலர் இதற்காக வேலைசெய்ய வேண்டியிருப்பதாகவும் நிர்வாகத் தரப்பில் கூறப்பட்டது. நிதிக்காக நேசன் நடத்தப்படவில்லை என்றும், வருகிற நன்கொடைகளை வெளியிட்டால் போதும் என்றும் ஊர் ஊராகப் போய் நன்கொடைகளை நேரில் பெற்றுவரத் தேவையில்லை என்றும் நிதி கொடுப்பவர்களின் புகைப்படங்களை வெளியிட வேண்டியதில்லை என்றும் சொன்னார்கள். நிதி ஆரம்பத்திலிருந்து நன்கொடையாளர்களின் படங்களை வெளியிட்டதில் புளோக்குகள் செய்வதற்காகப் பெருஞ்செலவு வந்திருப்பதாகவும், இவ்வாறு புளோக்கிற்குச் செலவு செய்யாமல் அதனைத் தமிழ் நேசன் நிதிக்கு நன்கொடையாகத் தந்திருந்தால்கூடப் பயனுள்ளதாக இருக்கும் என்றும் நேசன் நிர்வாகம் கூறியது.

முருகு சுப்பிரமணியன்

ஆனால், எனக்கு அவர்கள் வெளியிட்ட கருத்தில் உடன்பாடில்லை. தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதியைத் திட்டமிட்டபடி சேர்க்கவேண்டுமானால் அதற்காக தமிழ் நேசன் நிச்சயமாக முனைப்போடு பல பெரும் முயற்சிகளை மேற்கொண்டால்தான் முடியும் என்று நான் நினைத்தேன். நேசனுக்கு இதில் பொறுப்பிருக்கிறது; சமுதாயத்திற்கு ஆற்றவேண்டிய கடமையாக இதனை "நேசன்" செய்யவேண்டும் என்றும் நான் வற்புறுத்தினேன். இந்த நிதியைத் திரட்டுவதற்கு நேசன் செலவிடுகிற நேரமும் உழைப்பும் பணமும் ஒரு போதும் வீணாகாது; மறைமுகமாக நேசனுக்கு அதனால் நன்மையே விளையும் என்பதையும் எடுத்துச் சொன்னேன். நேசனுக்கு இந்த நிதியினால் வர்த்தக இழப்பு ஏதும் ஏற்பட்டிருந்தால் இதுபற்றி நாம் யோசிக்கவேண்டும். அப்படியில்லாத நிலையில் நாளும் வியாபாரம் மேலோங்கி வருகிற சூழ்நிலையில் நிதி சேர்க்கும் முயற்சிகளைக் கட்டுப்படுத்தக்கூடாது என்றும் சொன்னேன்.

நிதி விஷயத்தில் நான் காட்டிய பிடிவாதமான போக்கு அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்டேன். இதற்குப் பிறகு ஈப்போவிலும் தெலுக்கான்சனிலும் எனக்குப் பொன்னாடை போர்த்துகின்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தார்கள். நேசன் அலுவலகத்தில் உள்ள சிக்கலான சூழ்நிலையை மனத்தில் வைத்துக்கொண்டு எவ்வளவோ மறுத்துச் சொல்லியும் ஈப்போவிலும், தெலுக்கான்சனிலும் விடாப்பிடியாக பாராட்டு நிகழ்ச்சிகளை நடத்தி முடித்துவிட்டார்கள். ஈப்போ நிகழ்ச்சி முடிந்த பிறகு அதுபற்றிய செய்தி விரிவாகப் படங்களுடன் வெளிவந்தது. அந்தச் செய்தி வந்தவுடன் மறுபடியும் நிர்வாகத் தரப்பில் முணுமுணுப்பும் தலையீடும் தலைதூக்கின.

ஆசிரியர் பகுதியில் என் மேற்பார்வையில் வேலை செய்கிற உதவி ஆசிரியர்களைக் கூப்பிட்டு ஆசிரியரைப்பற்றி எந்தச் செய்தி வந்தாலும் தங்களிடம் காட்டிவிட்டுத்தான் போடவேண்டும் என்று "உத்தரவு" பிறப்பித்துவிட்டார்கள். தமிழ்ப்பள்ளி மாணவர் உதவிநிதி சம்பந்தமான செய்திகளையும் படங்களையும் தங்களிடம் காட்டிவிட்டே பிரசுரிக்கவேண்டுமென்றும் புளாக்குகள் போடவேண்டாம் என்றும் உதவி ஆசிரியர்களிடம் சொல்லிவிட்டார்கள்.

அதன் பிறகு உதவி ஆசிரியர்கள் இந்தச் செய்திகளையெல்லாம் நிர்வாகிகளிடம் காட்டிவிட்டு அவர்கள் அனுமதித்தால் பிரசுரிப்பது என்ற நிலை ஏற்பட்டது. இந்தக் கட்டுப்பாட்டின் பலனாக தெலுக்கான்சனில் நடைபெற்ற பாராட்டு விழாச் செய்தி வெளியிடப்படாமலேயே நிறுத்தப்பட்டுவிட்டது. ஈப்போ பாராட்டு விழாவில் எனக்கு வாசித்தளித்த வாழ்த்துப் பாவும் மற்றும் அங்கு திருவாளர்கள் மதியழகன், பத்துக்காஜா ம.இ.கா. தலைவர் கரு. வேலுசாமி ஆகிய இருவருக்கும் வாசித்தளிக்கப்பட்ட வாழ்த்து மடல்களும் நிர்வாகத்தின் தலையீட்டினால் பிரசுரிக்கப்படாமல் நிறுத்தப்பட்டன.

பொன்விழா

கோலாலம்பூரில் ஏற்பாடு செய்திருந்த பொன்விழாக் குழுவினர் அதுபற்றிய அறிவிப்புச் செய்தியை வெளியிடுவதற்குக் கொடுத்திருந்தார்கள். அதனையும் நிர்வாகம் பத்திரமாக வாங்கி வைத்துக்கொண்டது. பல நாட்கள் கழித்து விழாக் குழுவினர் திரும்பத் திரும்ப நினைவுபடுத்திய பிறகு அந்த விழாச் செய்தியை வெளியிட அனுமதித்தார்கள். தென்னானில் நடைபெற்ற சிலாங்கூர் இந்தியப் பள்ளி ஆசிரியர்கள் சிக்கனக் கடனுதவிச் சங்கத்தின் ஆண்டுக் கூட்டம் பற்றிய செய்தி எழுதிக்கொடுத்து அச்சுக்கோத்து வைக்கப்பட்டிருந்தது. அதனை நிர்வாகம் கேட்டு வாங்கி சில பகுதிகளை வெட்டியதோடு அச்சங்கத்தின் தலைவர் மாணவர் உதவி நிதிக்கு என்னிடம் $2,500 வழங்கும் படத்தையும் போடக்கூடாது என்று தடை செய்துவிட்டது.


இவ்வாறு ஒன்றுக்குப்பின் ஒன்றாக செய்திகளை வெளியிடுவதில் தலையிட ஆரம்பித்தது எனக்கு மிகுந்த வேதனையை உண்டாக்கியதில் வியப்பில்லை. என்றாலும் அவசரப்படாமல் ஆத்திரப்படாமல் மிகவும் பொறுமையாக நிர்வாகத் தரப்பில் திருந்தி நடப்பார்கள் என்னும் நம்பிக்கையோடு இருந்துவந்தேன். தென்னான் செய்தியை வெட்டியதும் அதில் செய்து வைக்கப்பட்டிருந்த புளாக்கை வெளியிடாமல் நிறுத்தியதும் எனக்குத் தாங்க முடியாத வேதனையை உண்டாக்கி "நேசனில் இனி வேலை செய்ய முடியாது" என்னும் முடிவுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலையை உருவாக்கிவிட்டன. வெட்டப்பட்டு, புளாக் அகற்றப்பட்ட செய்தி வந்தவுடன் நேசன் முதலாளி வீட்டுக்குச் சென்று "இதற்குமேலும் இத்தகைய அவமானங்களைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது; ஆளை விட்டு விடுங்கள்" என்று கையெடுத்துக் கும்பிட்டேன். ஆனால் நேசன் முதலாளியும் நிர்வாகியும் என்னை மிகவும் சமாதானப்படுத்தி "உங்கள் மீது எங்களுக்கு எந்த மனக்குறையும் இல்லை வருத்தப்படாதீர்கள்" என்று கூறி எனக்கு நொண்டிச் சமாதானங்களைச் சொல்லி வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

என்றாலும் அதன்பிறகும் அவர்களின் தலையீடு நிற்கவில்லை. கோலாலம்பூர் பொன்விழா பற்றிய முன்னறிவிப்புச் செய்திகள் அக்குழுவினரின் மிகுந்த வற்புறுத்தலின் பேரில் வெட்டிக்கொத்தி வேண்டா வெறுப்பாக வெளியிடப்பட்டன. பொன்விழா, நகர மண்டபத்தில் திட்டமிட்டபடி சிறப்பாக நடைபெற்றது. அந்த விழாவுக்கு நேசன் உரிமையாளர்—நிர்வாகி முதலியோர் அழைக்கப்பட்டிருந்தும் அவர்களில் யாரும் விழாவிற்கு வரவில்லை. வாழ்த்துச் செய்தி எழுதி அலுவலகத்தில் என்மேசையிலேயே வைத்திருந்தனர். விழாவுக்கு வந்திருந்த மற்றவர்களுக்கு நேசன் நிர்வாகத் தரப்பிலிருந்து எவரும் விழாவில் பங்கு கொள்ளாதது விந்தையாக இருந்தது. பொன் விழாச் செய்தியை எடுப்பதற்கு நிர்வாகத் தரப்பே நிருபரை நியமித்து அவர் எப்படிச் செய்தி எழுத வேண்டுமென்றும் உத்தரவு இட்டிருந்தது.

பொன்விழா நடந்த மறுநாள் செய்தி நிருபரால் எழுதப்பட்டு நிர்வாகத் தரப்பினரால் மேற்பார்வை இடப்பட்டு போடவேண்டிய படங்களும் அவற்றைப் போடவேண்டிய அளவும் நிர்வாகிகளாலேயே வரையறுக்கப்பட்டு எந்தப் பக்கத்தில் எத்தனை பத்தித் தலைப்போடு அந்தச் செய்தி வெளியிடப்படவேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது. வழக்கமாகச் சங்கச் செய்தி வெளியிடப்படும் 6-ம் பக்கத்தில் கீழே இறக்கிப் போடவேண்டும் என்றும் சொல்லி இருந்தார்கள். அந்த உத்தரவுப்படி திங்கட்கிழமை [15-8-76] பத்திரிகையில் செய்தி வெளிவந்தது.

காத்திருந்தோம்

திங்கட்கிழமை காலையில் இவ்வாறு கண்ணுக்குத் தெரியாத இடத்தில் கண்ணுக்குத் தெரியாத படத்தோடு பொன் விழாச் செய்தி வந்தது பற்றி நான் சிறிதும் கவலை அடையவில்லை. ஏனென்றால் இப்படி வரும் என்பதையே நான்



சக்கரவர்த்தி ஔரங்கசீப்பினிடம் "முகம்மது கில்லி" என்னும் பெயருடைய வேலைக்காரன் ஒருவன் இருந்தான். மற்றவர்களெல்லாம் அவனைக் "கில்லி" என்றே அழைப்பது வழக்கம். ஆனால் ஔரங்கசீப் மட்டும் "முகம்மது கில்லி" என்றே அழைப்பார்.

ஒரு சமயம் ஔரங்கசீப் "கில்லி" என்று அழைத்தார். உடனே அவன் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். ஔரங்கசீப் "நான் தண்ணீர் கேட்கத்தான உன்னை அழைத்தேன். அது எப்படி உனக்குத் தெரியும்" என்று வினவினார்.

முகம்மது கில்லி கூறினான்: "தாங்கள் ஒவ்வொரு முறையும் வாயைச் சுத்தம் செய்து கொண்டுதான் "முகம்மது கில்லி" என்று கூப்பிடுவீர்கள். ஆனால் இப்போது "கில்லி" என்று மட்டுமே கூப்பிட்டதால் தங்கள் வாய் இன்னும் சுத்தமாக இல்லை என்று அறிந்துகொண்டேன் அதனால்தான் சுத்தம் செய்து கொள்ள தண்ணீர் கொண்டு வந்தேன்" என்றான்.



டாக்டர்: என்னிடம்வரும் நோயாளிகளிடம் கூட இவ்வளவு பணம் நான் வசூலிப்பதில்லையே! நீங்கள் என் காரை ரிப்பேர் செய்ய இவ்வளவு தொகை கேட்கிறீர்களே?

கார் ரிப்பேர் செய்பவர்: நீங்கள் ஒரே விதமான மனித மெஷினைத்தான் சரி செய்துகொண்டிருக்கிறீர்கள். நானோ புதிதாக வரும் ஒவ்வொரு காருக்கும் தனித்தனியாக படிக்க வேண்டியுள்ளது.



நிர்மலாவின் ரசனை

ஓய்வு நேரத்தில் வெண்ணிற ஆடை நிர்மலா அதிகமாக விரும்பிப் படிப்பது கவிதைகள்தான்! தமிழ்ப்பட நட்சத்திரங்களில் நிர்மலா ஒருவர்தான், படப்பிடிப்பு இல்லாத நேரங்களில் கவிதைகளைப் படிக்கும் பழக்கமுடையவர். இப்பொழுதெல்லாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவரும் பிற மொழிக் கவிதைகளை விரும்பிப் படிக்கிறார்.

அண்மையில் உருது மொழிக் கவிதையொன்று ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளி வந்துள்ளதைப் படித்திருக்கின்றார். தான் படித்து அனுபவித்த அந்தக் கவிதைகளைப் பற்றி நிர்மலா கூறுகிறார். "உலகத்திலுள்ள ஏழு அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலைப் பற்றி ஏழைக் காதலன் ஒருவன் தன் காதலியிடம் சொல்வதாக அக் கவிதை அமைந்திருக்கிறது. அதிலுள்ள ஒவ்வொரு வரியும் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவதாய் அமைந்திருக்கிறது. காதலன் கூறுகிறான் "சக்கரவர்த்தி தன்னிடமுள்ள பணத்தையெல்லாம் செலவழித்துத் தன்னுடைய காதலுக்கு ஒரு சின்னத்தை அமைப்பதின் மூலம் நம் போன்றவர்களின் காதலைக் கேலிக்கூத்தாக்கி விட்டார். நாம் இங்கிருப்பதைவிட வேறு எங்காவது போய்விடுவோம்" என்று கூறுகிறான். "நான் படித்த பிறமொழிக் கவிதைகளில் இந்தக் கவிதை என் மனதை மிகவும் கவர்ந்து விட்டது" என்று மேலும் கூறுகிறார் நிர்மலா.

எதிர்பார்த்திருந்தேன். ஆனால் பொன் விழாவை அரும்பாடுபட்டு நடத்திய அன்பர்களும் இந்த விழாவில் கலந்து கொண்ட ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பெருமக்களும் நேசன் வெளியிட்ட செய்தி பொன்விழா நடந்த சிறப்பை அணுவளவு கூடப் பிரதிபலிக்கவில்லையே என்று வருந்தியிருப்பர்.

திங்கட்கிழமை வழக்கம் போல் அலுவலகத்திற்குச் சென்று என் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன். பகல் 12 மணி சுமாருக்கு அலுவலகத்திற்கு வந்த நேசன் முதலாளி என்னை உள்ளே வரும்படி ஆள் மூலம் கூப்பிட்டனுப்பினார். உள்ளே சென்றேன். அந்த அறையிலிருந்த நேசன் இயக்குநரையும் தமது அருகே வந்து அமரச் சொல்லி விட்டு என்னிடம் நேசன் முதலாளி பேசினார்.

"நமக்கும் உங்களுக்கும் கருத்து வேறுபாடு கடுமையாக இருந்து வருகிறது. இந்த நிலை நீடிப்பது நிறுவனத்திற்கு உகந்ததல்ல. நாங்கள் விலக்கினால் உங்களுக்கு அத்துணை கௌரவமாக இராது. நீங்களே விலகிக் கொள்வதாக எழுதிக் கொடுத்து விடுங்கள். தரவேண்டியதை முறைப்படித் தந்து விடுகிறோம்" என்று சொன்னார்.

அவருடைய வார்த்தைகள் என்னைத் திடுக்கிட வைத்தன. "பத்து நாட்களுக்கு முன்பு நான் வந்து உங்களிடம் விலகிக் கொள்வதாகச் சொன்னபோதே நீங்கள் விலக்கிவிட்டிருக்கலாமே" என்று சொன்னேன். அவர் அதற்குச் சொன்ன பதில் "அன்றே சரி என்று சொல்லி இருப்பேன். இருந்தாலும் பொன் விழா நடந்து முடியட்டும் என்று காத்துக் கொண்டிருந்தேன்."

இந்த உரையாடலுக்குப் பிறகு நான் அலுவலகம் செல்லவில்லை. இரண்டு நாள் கழித்து முதலாளியின் வீட்டுக்கு நேரே சென்று அவர்கள் தயாரித்து வைத்திருந்த ரசீதுகளில் கையெழுத்திட்டு விட்டுக் கணக்கை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். அன்று பிற்பகலே அலுவலகத்திற்குச் சென்று சக ஊழியர்கள் அனைவரிடமும் விடை பெற்றுக்கொண்டு தாங்க முடியாத வருத்தத்தோடு கண்ணீருடன் வீடு திரும்பினேன்.

15 ஆண்டுகால நேசன் உறவு இத்துணை நீசத்தனமாக சீரற்ற முறையில் முறிக்கப்படும் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. என் நெஞ்சில் அறைந்தது போல நேசன் நிர்வாகம் மனிதத்தன்மை இல்லாமல் என்னுடைய 52வது வயதில் எனது உடல்நிலை அத்துணை நன்றாக இல்லை என்பதை அறிந்திருந்தும் என்னுடைய உண்மையான உழைப்பை இத்தனை ஆண்டு காலம் உறிஞ்சிக் கொண்டு இப்படித் திடுதிப்பென்று என்னை வெளியே தள்ளும் என்று நான் ஒருகணம் கூட எதிர்பார்க்கவில்லை. பல்லாயிரக்கணக்கான நேசன் வாசகர்களும் மலைநாட்டு இந்திய சமூகமும் நேசனை விட்டு நான் வெளியே தள்ளப்படுவேன் என்று ஒரு போதும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அதனால் தான் நேசனில் வெளி வந்த விலகல் அறிவிப்பை நம்பாமல் ஏராளமானவர்கள் தொலைபேசி மூலமும் கடித வாயிலாகவும் என்னிடம் விசாரித்தார்கள். வீடு தெரிந்த பலர் நேரிலும் வந்துகேட்டார்கள். அவர்களிடமெல்லாம் இந்தச் செய்தி உண்மைதான். எதிர்பாராதது நடந்து விட்டது. நம்ப முடியாதது நடந்து விட்டது. என் உழைப்பை எல்லாம் பிழிந்து கொண்ட பிறகு கரும்புச் சக்கைபோல, தள்ளாத நிலையில் என்னை வெளியே தள்ளி விட்டார்கள்" என்று கூறினேன்.

நேசன் நிர்வாகம் ஆறு மாதங்களுக்கு முன்பே என்னை வெளியேற்றத் திட்டம் தீட்டி விட்டது என்பதை நான் பிற்பாடுதான் அறிந்தேன். மாற்று ஆசிரியர் ஒருவரைத் தயாராகக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு என்னை வெளியேற்றுவதற்கு வேண்டிய ஆயத்தங்களை எல்லாம் அவர்கள் செய்து வந்திருந்தார்கள். துணையாசிரியர்களை அழைத்து எனக்கு எதிராக அவர்களைத் திருப்பி விட்டு அவர்களுக்குப் பதவி ஆசை கொழுந்து விட்டெரியச் செய்தார்கள். நான் அலுவலகத்தில் இல்லாத நேரத்தில் துணையாசிரியர்களை அழைத்து உத்தரவு போடுவது போன்ற கைங்கரியங்கள் நடந்து வந்தன. நானே எரிச்சல் அடைந்து பதவியை விட்டு விலகிச் சென்று விடுகிற மாதிரி நிர்வாகத்தின் இடைவிடாத தலையீடு ஆசிரியர் பகுதியில் நடந்து வந்தது.

ஆட்களை ஏற்பாடு செய்து ஆசிரியருக்கு மூட்டை கட்டியாகிவிட்டது என்று பலமான பிரசாரமும் வெளியே நடத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் இந்தச் சூதுகளையெல்லாம் புரியாத ஏமாளியாகவும் கோமாளியாகவும், திரைமறைவில் ஆசிரியர் பகுதியில் கருங்காலிகளை வைத்து நடந்து வந்த திருவிளையாடல்களை எல்லாம் அறியாதவனாக நான் இருந்து வந்திருப்பதை இப்போது நினைத்தால் எனக்கே வேடிக்கையாக இருக்கிறது.

என்னை நேசன் நிர்வாகம் இப்படித் திடுதிப்பென்று திட்டம் போட்டு விலக்கியதற்கு என்ன காரணம் என்று நான் திரும்பத் திரும்ப யோசித்துப் பார்க்கிறேன். சுயவிளம்பரக் குற்றச்சாட்டு காரணமாக இருக்குமா? தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதியில் அளவுக்கு மிஞ்சிய தீவிரம் காட்டியது காரணமாக இருக்குமா? அல்லது எனக்குப் பட்டத்திற்கு மேல் பட்டம் கிடைத்து, சமுதாயத்தின் பாராட்டும் சீராட்டும் மிதமிஞ்சிப் பெருகியது நிர்வாகத்தின் கண்ணை உறுத்தி இருக்குமா? அல்லது ஏற்கனவே நேசன் உரிமையாளர்கள் அடிக்கடி வாக்களித்து வந்தபடி நேசன் நிறுவனத்தில் எனக்கு நிலையான பிணைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு அதில் பங்கும் பாத்தியதையும் வழங்க வேண்டும் என்று நான் கோரியது காரணமாக இருக்குமா? எனக்குத் தருகின்ற சம்பளம் முதலான வசதிகளை எனது அந்தஸ்துக்கேற்ப கூட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டு வந்தது காரணமாக இருக்குமோ? நேசன் நிறுவனத்தை காலத்திற்கு ஏற்ப மற்ற பத்திரிகை நிறுவனங்களைப்போல் வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்பதிலும் அதனைப் பொது நிறுவனமாக மாற்றி அமைத்துப் பங்குகளை மக்களுக்கு விநியோகிக்க வேண்டுமென்பதிலும் அதன் மூலம் நேசனில் பணி புரிகின்ற ஊழியர்களின் வேலை வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்பதிலும் நான் காட்டி வந்த அக்கறை காரணமாக இருக்குமோ?

இந்தக் காரணங்களை எல்லாம் விட மறைமுகமான வெளிச்சக்திகள் ஏதும் நேசன் நிர்வாகத்தை வலுக்கட்டாயமாக நிர்ப்பந்தித்துஎன்னைவெளியேற்றுகின்ற இந்தப் புண்ணியத்தைச் செய்திருக்குமோ? இவ்வாறு பற்பல காரணங்களையும் நான் நினைத்துப் பார்க்கிறேன். இன்று வரை எனக்கு இந்த மர்மம் விடுபடவில்லை.

என்னை விலக்குவதற்கு நிர்வாகம் கூறிய காரணங்கள் வெறும் சாக்குப் போக்கு என்றே நான் திண்ணமாகக் கருதுகிறேன். ஏனென்றால் நேசன் உச்ச நிர்வாகத்துடன் நெருக்கமாக உள்ள ஒருவர் "இரண்டு வருடங்களுக்கு முன்பே ஆசிரியருக்குப் புள்ளி வைத்து விட்டார்கள். இந்தக் காரணங்கள் இல்லாவிட்டாலும் வேறு காரணங்களைக் கண்டு பிடித்து ஆசிரியரைப் போகச் செய்து விடுவார்கள்" என்று கூறி இருக்கிறார்.

பி.பி.க்கு பொன்னாடை

மலாக்காவில் ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் பி. பி. நாராயணன் அவர்களுக்கு நடைபெற்ற

பொன்னாடை போர்த்தும் விழாவில் நான் கலந்து கொண்டபிறகு அந்தச் செய்தி நேசனில் இரண்டு பக்கம் விரிவாக வெளியிடப்பட்டிருந்தது. அப்பொழுதுதான் நேசன் உரிமையாளருக்கு என் மீதுள்ள எரிச்சல் முதன் முதலாகப்புலப்பட்டது. "நீங்கள் கலந்து கொண்ட செய்தி என்பதற்காக இவ்வளவு விரிவாக வெளியிடப்பட்டிருக்கிறதா? இத்தனை படங்கள் வேண்டுமா?" என்று அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் என்னிடம் சொன்னது இப்போது நினைவுக்கு வருகிறது. அத்துடன் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. "தமிழ்வாணன் போல நீங்களும் கேள்வி பதிலில் உங்கள் படத்தை விதவிதமாகப் போடுகிறீர்களே?" என்னும் ஒரு விமரிசனத்தையும் நேசன் உரிமையாளர் சொல்லி வைத்தார். பிறகு நான் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்த சந்தர்ப்பத்தில் கேள்வி பதில் பகுதியை மேஜை வேலை பார்க்கும் துணையாசிரியர்களை அழைத்து எழுதும்படிச் சொல்லி அந்தப் பகுதியை என்னிடமிருந்து பறிப்பதற்கும் ஏற்பாடு செய்தார்கள். பிறகு நேசன் நிறுவனத்தை 74ம் வருட ஆரம்பத்தில் செந்திரியான் பெர்ஹாட்டாக மாற்றியமைத்த சந்தர்ப்பத்தில் நேசன் கடைசிப் பக்கத்தின் அடியில் வழக்கமாக ஆசிரியர் என்னும் தகுதியில் என் பெயர் வெளியிடப்பட்டு வந்ததை எடுத்து விடுவதற்கும் நேசன் உரிமையாளர் முயற்சி செய்தார். 1974 ஜனவரி முதல்தேதி பத்திரிகையில் என் பெயர் இல்லாததைக் கண்டு நான் அதிர்ச்சி அடைந்து ஆட்சேபம் தெரிவித்த பிறகு மறுபடியும் என் பெயரை மறுநாள் சேர்த்தார்கள்.

இவற்றை எல்லாம் பார்க்கும்போது நேசன் வளர்ச்சியோடு என்னுடைய பெயரும் தொடர்ந்து பிணைந்துவருவதை நேசன் முதலாளி அப்பொழுது முதலே விரும்பவில்லை என்பதை என்னால் ஊகிக்க முடிகிறது. நேசன் வாசகர்களின் மனதிலிருந்து என் பெயரை அகற்றிவிடுவதற்கு மலாக்காவில் பி.பி. நாராயணன் பொன்னாடை போர்த்தும் விழா சந்தர்ப்பத்திலிருந்தே நேசன் உரிமையாளர் திட்டமிட்டுச் செயல்பட்டிருப்பதை இப்பொழுது நன்கு உணர முடிகிறது.

நேசனின் தந்தையாக விளங்கிய அமரர் மலையாண்டிச் செட்டியார் அவர்கள் பலமுறை என்னிடம் "நீங்களும் எனது பிள்ளையைப் போலத்தான். உங்களுக்கும் நிர்வாகி திரு. சேதுராமன் அவர்களுக்கும் நேசனில் பங்கு வைக்க ஏற்பாடு செய்வோம்" என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் காலத்தில் அவர்களின் இந்த விருப்பம் நிறைவேறவில்லை. பின்னர் அவர்களின் புதல்வர் திரு. நாகப்பன் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டார்கள். அவர்களும் "கம்பெனியாக மாற்றும்போது உங்களுக்கும் பங்கு வழங்கி இயக்குநராக நியமிப்போம்" என்று இனிப்பாகச் சொல்லிவந்தார்கள். இதனை நானும் அவர்களிடம் இடையிடையே நினைவுபடுத்தத் தவறவில்லை. என்றாலும் திரு. நாகப்பன் அவர்கள் எனக்கு எந்தவித ஒட்டுறவும் உரிமையும் நேசன் நிறுவனத்தில் ஏற்படாதபடி விழிப்பாகக் கவனித்துக் கொண்டு என்னை வெளியேற்றியும்விட்டார் என்றே கருதவேண்டியிருக்கிறது.

1974 ஆரம்பத்தில் நேசன் நிறுவனம் செந்திரியான் பெர்ஹாட்டாக மாற்றியமைக்கப்பட்ட தகவலை என்னிடம் அறிவித்தபோது "இப்பொழுது எந்த மாற்றமும் செய்யவில்லை. இருக்கிறபடியே கம்பெனியாக மாறறியிருக்கிறோம். அடுத்து மாற்றம் செய்யும்போது உங்களையும் இணைத்துக்கொள்கிறோம்" என்று கூறினார்கள். நானும் அவர்களின் வார்த்தைகளைத் தெய்வவாக்காக நம்பி அமைதியாக இருந்தேன். ஆனால் அந்த மாற்றத்தின்போது கம்பெனி இயக்குநரில் ஒருவராக நிர்வாகி திரு. சேதுராமன் அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதைப் பிற்பாடுதான் அறிந்தேன். அதன்பிறகு வெளி நண்பர் ஒருவரும் இயக்குநர் குழுவில் நியமிக்கப்பட்டார். கம்பெனி நடந்துகொண்டிருந்தது. ஆதாயமும் ஆண்டுக்கு ஆண்டு பெருகிக் கொண்டிருந்தது. ஆனால், எனக்குக் கம்பெனியில் இடம் கொடுக்காமலேயே நேசன் உரிமையாளர் காலத்தைக் கடத்திவிட்டார். கடைசியாக "பப்ளிக் கம்பெனியாக மாற்றும்போது உங்கள் விஷயமும் கவனிக்கப்படும்" என்று கூறி வந்தார்கள். அதனையும் இளிச்சவாய்த்தனமாக நான் கேட்டு நம்பிக்கொண்டிருந்தேன்.

என்னை வெளியேற்ற நீண்ட நாளைக்கு முன்பே நேசன் முதலாளி திட்டம் போட்டுக் காரியமாற்றி வந்திருக்கிறார் என்பதையும் அதனால்தான் எனக்கு எந்தவித உரிமையும் நல்குவதைத் தட்டிக்கழித்து வந்திருக்கிறார் என்பதையும் இப்பொழுது திரைப்படக் காட்சிபோல நன்கு கணிக்கமுடிகிறது.

ஆகவே, என்னை நேசன் வெளியேற்றியதற்கு நான் யார் மீதும் பழி போடத் தயாராக இல்லை. இந்த அநீதியான மனிதத்தன்மையற்ற நடவடிக்கைக்கு நேசன் உரிமையாளரே முழுப் பொறுப்பாளி என்றுநான் கருதுகிறேன். என்னை நயவஞ்சகமாக வெளியேற்றுவதில் அவர் பூரண வெற்றி கண்டுவிட்டார் என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

என்றாலும் நேசனைவிட்டு நான் வெளியேற்றப்பட்டதால் நேர்ந்திருக்கிற இழப்பு எனக்குத் தனிப்பட்டமுறையில் பெரிய பாதிப்பு என்று நான் கருதவில்லை. எல்லோரையும் நல்லவர்களாகக் கருதும் எனது ஏமாளித்தனத்திற்குத் தக்க படிப்பினை என்றே இதனை நான் கருதுகிறேன்.

நேசனில் நான் தலைமை ஆசிரியராகப் பதவி வகித்த காலம் என் வாழ்க்கையின் பொற்காலம் - நேசனுக்கும் அது பொற்காலம்-என்று சொல்வது மிகையாகாது. அந்த 15 ஆண்டுகளில் நேசனை வளர்ப்பதற்கும் நேசன் மூலம் சமுதாயத்திற்கு முழுமூச்சாகப் பணிபுரிவதற்கும் என்னால் இயன்றவரை முயன்றிருக்கிறேன். அரசாங்கத்தின் எல்லா நன் முயற்சிகளுக்கும் பக்கபலமாக நேசனை நிறுத்துவதற்கும் நான் தயங்கியதில்லை. அரசாங்கம் அவ்வப்போது சேகரித்த பொது நிதிகளுக்கெல்லாம் நேசன் தனது வலுவான ஆதரவுக் கரத்தை நீட்டுவதற்கும் வழிவகைசெய்து வந்திருக்கிறேன். அந்தரங்க சுத்தியோடு லட்சியப் பிடிப்போடு நான் என் பணிகளில் ஈடுபட்ட காரணத்தினால் அரசாங்கமும் என்னைச் சிறப்பித்தது,மக்களும் என்னைச் சிறப்பித்தார்கள்

சீனாவுக்கு அமரர் துன் ரசாக்குடன் வருகை புரிகின்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற பொன்னான வாய்ப்புக்களை எல்லாம் நான் பெற்றேன். பல நாடுகளுக்கும் சென்று என் அறிவையும் மனத்தையும் விரிவு படுத்திக்கொண்டதோடு நேசனின் செல்வாக்கையும் என் பயணக் கட்டுரைகள் மூலம் பெருக்கினேன்.

எனக்கு ஏ-எம்.என். பட்டமும் எஸ்.எம்.எஸ். பட்டமும் கிடைத்ததை இந்திய சமுதாயத்தின் எல்லாத் தரப்பினரும் தாம் பெற்ற பேறாகக் கருதி வாழ்த்தினார்கள். விருந்து வைத்துச் சிறப்பித்தார்கள். பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தார்கள்.

ஆகவே நேசனில் இருந்த காலத்தில் வாசகர்களும் சமூகமும் அரசாங்கமும் எனக்குக் காட்டிய வற்றாத ஆதரவுக்கு நான் நன்றிக்கடன் பட்டவன். நேசன் நிர்வாகம் எப்படி நடந்து கொண்டிருந்தபோதிலும் நேசன் நிறுவனத்திற்கும் நான் முழுமையாகக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக நேசன் குடும்பமாகத் திகழ்ந்து அங்கு பணி புரிகின்ற எல்லா ஊழியர்களுக்கும் அவர்கள் என் பால் செலுத்தி வந்த இணையற்ற அன்புக்கும் நல்கி வந்த உண்மையான ஒத்துழைப்புக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேசனில் நான் ஆசிரியர்பதவிவகித்த சகாப்தம் முடிவுக்கு வந்த கதையை ஒளிவு மறைவின்றிக் கூறி இருக்கிறேன். யார் மீதும் கறை பூச வேண்டும் என்பது எனது நோக்கமன்று. எனது மனத்தை ஆற்றிக் கொள்ளவும் என் சுக துக்கங்களில் பங்கு கொள்ளக் காத்திருக்கும் ஆயிரமாயிரம் நல்ல உள்ளங்களை ஆறுதல் படுத்தவுமே இந்தக் கதையை எழுதி இருக்கிறேன். ●



விஜயகுமார் வைத்த ஐசில் சுஜாதாவின் உள்ளம்
குளிர்ந்து போய்விட்டதே!
திரை: என்ன தவம் செய்தேன்?

ஆலைகள் உருவாக்கும் மகளிர் படை

சரசா

அட்டைப்படக் கட்டுரை

"நம்முடைய சகோதரர்களான சீனச் சமூகத்தவர்களின் இன்றைய அபரிமிதமான முன்னேற்றத்திற்கு அடிப்படையான காரணம், அவர்களில் ஆணும் பெண்ணும் போட்டிபோட்டுக்கொண்டு உழைப்பதுதான் என்பதை அனைவரும் ஒப்புவர். அவர்களைப்போல நாமும் வாழ்க்கையில் முன்னேறவேண்டுமானால் நமது பெண்களும் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்காமல் ஏதாவது தொழிலில் ஈடுபடவேண்டும். வீட்டுக்குள் இருக்க நேர்ந்தாலும் குடிசைத் தொழில் மாதிரி வீட்டிலேயே இருந்துகொண்டு வருமானத்திற்கு வழி காணவேண்டும்.

"நமது ஆண்களுக்கென்ன, ராவணனுக்கு இருந்ததாகக் கூறப்படுவதுபோல பத்துத் தலைகளா? இருபது கைகளா? பல வேலைகளையும் செய்து அதிகமான வருமானத்தை ஈட்டிக் குடும்பத்தைக் காப்பாற்ற. ஆண்களின் "சுமை"யைக் குறைக்கவும் திருமணம் ஆனபிறகு குடும்ப முன்னேற்றத்தில் பெண்கள் பங்கு பெறவும் அவர்கள் இளமையிலிருந்தே தத்தம் திறமைக்கும் கல்விக்கும் ஏற்றதொரு வேலையில் அமர வேண்டும். இந்த எண்ணத்தில்தான் நான் இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்கிறேன்".

உருவாகிக்கொண்டுவரும் ஒரு புதிய சமுதாயத்தின் சின்னமாக விளங்கும் திருமதி சாந்தா லட்சுமி விஜயசிங்கம் தான் மேற்கண்டவாறு கூறினார்.

சுங்கைவே தொழிற்பேட்டைப் பகுதியிலுள்ள மொன்சாந்தோ மின்னியல் தொழிற்சாலையில் அவர் ஒரு கண்காணிப்பாளராக (சூப்பர்வைசர்) பணிபுரிந்து வருகிறார்.

ஆணும் பெண்ணும் பணிபுரியும் சமூகம் தான் முன்னுக்கு வரமுடியும் என்று அழுத்தமாகக் கருதுவது மட்டும் இவரது சிறப்பல்ல! வேறொரு சிறப்பும் இவருக்கு உண்டு.

வாழ்க்கையில் முன்னேறப் பெண்கள் உழைப்பது முக்கியம் எனக் கருதும் இவர் பொதுப் பணியிலும் பெண்கள் அவசியம் ஈடுபடவேண்டும் என்கிறார். இப்படிச் சொல்வதோடுமட்டும் நின்றுவிடாமல் ம. இ. கா. பெட்டாலிங் கிளையின் மகளிர் பகுதிக்குச் செயலாளராகப் பொறுப்பேற்று, பெண்களின் குறிப்பாக கிராமப்புறப் பெண்களின் வளர்ச்சிக்கும் தொண்டாற்றி வருகிறார்.

"வேலை இல்லாப் பிரச்னை மிக முக்கியமான ஒன்றாக இப்போது பேசப்படுகிறது. என்னைப் பொறுத்தவரையில் எனது அனுபவத்தில் பெண்களுக்கு வேலை கிடைப்பது எளிதாக இருப்பதாகவே எனக்குப் படுகிறது. இன்று உருவாகும் பல தொழிற்சாலைகள் பெண்களையே பெரும்பாலும் வேலைக்கு அமர்த்திக்கொள்ள விரும்புவது அதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம். மாறிவரும் புதிய சூழ்நிலைக்கு ஏற்ப பெண்கள் கொஞ்சம் அதிகமான துணிச்சலுடனும், தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் வேலைசெய்ய முன்வர வேண்டும். இந்த மாற்றம் நமது சகோதரிகளிடையே ஏற்பட்டால் இன்னும் எண்ணிப் பத்து ஆண்டுகளில் நாம் எந்த அளவுக்கு முன்னேறி இருப்போம். அடேயப்பா...! கற்பனை செய்யவே இனிக்கிறது" என்கிறார் சாந்தாலட்சுமி.

"மொன்சாந்தோ தொழிற்சாலை, தனது [பெண்] ஊழியர்களுக்கு வேலை தருவதோடு மட்டும் இருக்கவில்லை. அவ்வப்போது பெருநடைப்போட்டி, கூடைப்பந்து, பூப்பந்து முதலிய விளையாட்டுக்களையும் நடத்தி அவர்களை ஆரோக்கியமும் சுறுசுறுப்பும் உள்ளவர்களாக இருக்கச் செய்கிறது. இது மட்டுமா? ஆண்டுதோறும் "மொன்சாந்தோ இரவு" என்று ஒரு நிகழ்ச்சியை நடத்துவதன் மூலம், எல்லோரும் ஒன்றாகக்கூடி உணவருந்தி மகிழச் செய்கிறது. இங்கு வேலை செய்யும் வெளியூர்ப் பெண்களுக்குத் தங்கும் இடவசதி, ஹாஸ்டல் கட்டுவதன் மூலம் செய்யப்படுமானால் அவர்களின் சங்கடம் தீரும். ஹாஸ்டல் கட்டுவதில் மொன்சாந்தோ ஈடுபட்டால் பெரும் புண்ணியமாக இருக்கும்" இவையெல்லாம் தனது தொழிற்சாலையைப் பற்றிப் பெருமையுடன் சாந்தா லட்சுமி கூறியவை.

"ம.இ.கா. பெட்டாலிங் கிளை மூலம் நீங்கள் எந்த வகையில் பெண்களுக்குத் தொண்டு புரிகிறீர்கள்?"

"எங்கள் கிளை தையல், பின்னல், பூவேலை [எம்ப்ராய்டரி] முதலியவற்றைப் பெண்களுக்கு நடத்துகிறது. அந்தப் பயிற்சி வகுப்புக்களின் மூலம் நான் அவர்களுக்கு உதவுகிறேன், மொன்சாந்தோ வேலை எனது வருமானத்திற்கு! இந்தத் தொண்டு பிற சகோதரிகளின் வருமானத்திற்கு! பணத்தையே குறியாகக்கொண்டு சமூகச்சேவையை முற்றாகப் புறக்கணிப்பதும், தொண்டு தொண்டு என்று குடும்பத்தைக் கவனியாது ஊர் சுற்றுவதும்-ஆணாகட்டும் பெண்ணாகட்டும் -யாருக்குமே நல்லதல்ல!"

திருமதி சாந்தாலட்சுமியின் இந்தக் கருத்து பணத்திற்காகப் பேயாய் அலைபவருக்கும், தொண்டு என்ற பேரில் குடும்பத்தைக் கவனிக்காது இருப்போருக்கும் கொஞ்சம் "சுருக்"கென்றிருக்கும். அதற்காக அவர் கருத்து தவறு என்று கூற முடியுமா?

சாந்தா லட்சுமியைப் போன்று தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள், மலேசியாவில் உருவாகிவரும் புதிய சமுதாயத்தின் முக்கியக் கூறாகத் திகழ்கின்றனர்!

முனுசாமி தண்டல்

அதோ அந்த லயத்துத் திண்ணைமேல் இடக்கையைத் தலைக்கு முட்டுக் கொடுத்தவாறு ஒருக்களித்துப் படுத்துக் கிடக்கிறாரே அவர்தான் முனுசாமி தண்டல்.

வாழ்ந்து விட்டது பற்றிய சிந்தனையோ இனி வாழப் போவது பற்றிய சிந்தனையோ தெரியவில்லை.

கடந்த ஒரு வாரமாகவே அவர் அப்படித்தானிருக்கிறார்.

முனுசாமி தண்டல் அங்கே ஒரு சகாப்தமாக வியாபித்துப் போனார்.

ஐம்பத்தைந்து வயதுவரைக்கும் கித்தா தோட்டத்தில் வேலை செய்து, தண்டல் என்ற உயர்ந்தபட்ச பதவியோடு உத்தியோகத்தைத்துறந்த அவர், இன்னமும் அந்தத் தோட்டத்திலேயே காலத்தை ஓட்டிக் கொண்டு வருகிறார்.

தண்டலாயிருந்த காலத்தில் அவர் சிபாரிசு மூலம் மரம் வெட்டும் வேலையில் சேர்ந்த முனியாண்டி அந்த நன்றிக் கடனுக்காக ஒண்டிக்கட்டையான அவருக்கு தன்வீட்டு கிழ்க்கடையில் தங்க இடம் கொடுத்ததோடு மாதம் முப்பது வெள்ளி வாங்கிக்கொண்டு வாய்க்கு ருசியாக சாப்பாடும் போட்டு வந்தான்.

தண்டலும் கிடைத்த வெட்டுப் பணத்தை 'தாம்தூம்' என்று செலவு செய்து முடித்து விடாமல் அதை அப்படியே வங்கியில் போட்டுவிட்டு, தோட்டத்தில் அவ்வப்போது கிடைக்கும் அல்லூறு வெட்டுதல், பத்தாசு போடுதல் மறுநடவு போன்ற சிறு குத்தகைகளை தோட்டத்து ஆட்களை வைத்து செய்வதன் வழி கிடைக்கும் வருவாயைக் கொண்டு தன் எஞ்சிய காலத்தை நிம்மதியாக ஓட்டிக் கொண்டுவந்தார்.

அவர் வாழ்க்கையில் அவர் மனைவி காத்தாயி இருபதாண்டுகளுக்கு முன் அவரை விட்டு நிரந்தரமாகப் போய் விட்டதொன்றே அவருக்குள் ஊமைக் காயமாகி விட்டிருந்தது.

அதையும்கூட கால ஓட்டத்தில் தன் ஒரே மகன் தனிகாசலம் கோலாலம்பூரில் பெரிய ''பிசினஸில்'' ஈடுபட்டிருக்கிறான் என்ற தெம்பில் ஆற்றிக்கொண்டு விட்டார்.

கடந்த ஒருவாரமாக அவர் ஏன் அந்த லயத்துத் திண்ணைமேல் அப்படி விழி குத்திட்டுப் போய்க் கிடக்கிறார்?

முனியாண்டியின் மனைவி அவருக்கு மங்கு நிறைய போட்டு வைக்கும் சோறு கடந்த ஒரு வாரமாக நாய்க்கே நல் விருந்தாகி விடுகிறது.

"என்ன தண்டலய்யா, இப்படி வெறும் பச்சத் தண்ணியைக் குடிச்சிகினு சோறு வேண்டாம்னுறியே! இப்படி இருந்தா உடம்பு என்னத்துக் காகும்? ஒரு கவளமாவது சாப்பிடு தண்டலே! சோறு வேண்டாம்னு குழைய கஞ்சியாவது வச்சித்தரச் சொல்றேன்..." முனியாண்டியும் அவரிடம் எப்படியெல்லாமோ கெஞ்சிப் பார்த்து விட்டான்.

அந்த வைரம் பாய்ந்த கட்டை அவனை நிலை குத்திவிட்ட பார்வையால் ஏறிட்டதே தவிர அவன் சொல்லுக்குக் கட்டுப்பட மறுத்துவிட்டது.

அன்றிரவு முனியாண்டி மனைவி கற்பகம் கணவனின் காலைப் பிடித்தபடி மெதுவாகக் கேட்டாள்.

"எனக்கென்னமோ பயமாயிருக்கு மச்சான்! தண்டலு என்னைக்குமே இப்படி இருந்தது, கிடையாது. தோட்டத்துலே கூட எல்லாம் அப்படித்தான் பேசிக்கறாங்க!"

"தோட்டத்துலே என்ன கற்பு சொல்றது. நமக்கே தெரியிதே! மனுசன் ''மவனைப் பார்க்கப் போறேன்'னு போயிட்டுவந்தப் பிறவுதானே இப்படிக்கிறாரு... ஏன் மவனுக்கே ஒரு கடுதாசி எழுதிப்போட்டு வரத்தினா என்ன?"

"ஆமாம் மச்சான், அதுதான் நல்லது. தோட்டத்திலேகூட எல்லாரும் அப்படித்தான் சொல்லிக்கினு கிறாங்க..."

அவள் மேலே ஏதோ சொல்ல வந்தாள். ஆனால் அவளையும் முந்திக் கொண்டு கீழேயிருந்து ஒரு முரட்டுக் குரல் கேட்டது.

"அவன் ஒரு வாரத்துக்கு முன்னேயே செத்துப் போயிட்டான் கற்பு..."

அந்தக் குரல் முனுசாமி தண்டலுடையதுதான்.

திடுக்கிட்டுப்போன முனியாண்டியும் கற்பும் அலறியடித்துக் கொண்டு மேலேயிருந்து தட தடவென்று கீழே இறங்கி ஓடி வந்தார்கள். "என்ன தண்டலய்யா சொல்றே! தனிகாசலம் செத்து ஒரு வாரமாகுதா?"

இன்னமும் திண்ணைமேல் ஒருக்களித்துக்கிடக்கும் அவர் அருகில் அமர்ந்தபடி முனியாண்டி திணறியபடி கேட்டான்.



ஆர். சண்முகம்

அவன் மனைவி கற்பு "தணிகாசலம் செத்தா போயிட்டான்..." என்று தேம்பியபடி அவர் தலைமாட்டில் நின்று கொண்டிருந்தாள்.

அவனை அவளுக்கு மிகவும் பிடிக்கும்.

''ஆமாண்டா முனியாண்டி! அன்னைக்குப் போனேனே, அதுக்குத்தாண்டா போனேன்.'

"என்ன தண்டலே நீ பேசுறது! தணிகாசலம் செத்துப் போயிட்டானா? ஒரு வார்த்தை சொல்லக்கூடவா உனக்குப் பஞ்சமா போச்சு" அவன் விழிகளில் நீர் முட்டி நின்றது.

அவன் தந்தையே அடிக்கொரு தடவை சொன்னதுபோல், அவனேகூட இங்கே வரும்போதெல்லாம் சொன்னது போல் ஒரு பெரிய உத்தியோகஸ்தனை அவன் தன் விட்டுக்கு வந்துதங்கிப்போவதில் முனியாண்டி அடைந்த பெருமை இன்னமும் அவன் நெஞ்சில் பசுமையாக இருக்கிறதே, அவனா அப்படித் திடீரென்று இறந்துபோனான்?

"கோலாலம்பூர் என்ன பக்கத்திலேயா இரண்டாங்கட்டை, மூணாங் கட்டையிலே கி து?... எம்மாந்தூரம்! அதுதான் எல்லாத்தையும் ஒரேடியா முடிச்சிக்கிட்டு வந்துப்புட்டேன்..."

"என்ன தண்டலே, இது உனக்கே நல்லாயிருக்கா?" முனியாண்டி குமுறினான்.

"என் உடன் பிறந்தான் மாதிரி, நேத்துக்குப் பார்த்த மாதிரி இருநே! அவனா போயிட்டாங்கிறே?... ஒரே ஒரு மவன் வெள்ளரிப் பிஞ்சாட்டமா, அவனைப் பறிகொடுத்திட்டு எப்படிய்யா தண்டலே உன்னாலே இம்மாம் தோறும் சும்மா இருக்க முடியுது?' கற்பு தேம்பினாள்.

அதே சமயம் கீழே திண்ணையில் மகனை நினைத்துக் குமுறியழுதுகொண்டிருந்தான் கிழவன்.

ஃ ஃ ஃ

'நான் ஒரு பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறேன். உடனே ஆயிரம் வெள்ளியுடன் புறப்பட்டுவரவும்."

தணிகாசலத்திடமிருந்து வந்த தந்தி அப்படித்தானிருந்தது.

தந்தி கிடைத்தபோது காலைமணி பத்திருக்கும்.

அப்போது தண்டல் தோட்டக் காரியாலயத்தில்தான் நின்றுகொண்டிதார், புதிதாக ஏதாவது குத்தகை கிடைக்குமா என்று ஆபீஸ் கிராணியிடம் விசாரித்துக்கொண்டு!

கையும் ஓடாது காலும் ஓடாது பாரிச வாயு கண்டவன்போல் செயலற்று மரமாக நின்றுவிட்ட அந்தக் கிழவர், சுய உணர்வு பெற்று லயத்தை அடைந்த போது எல்லோருமே வேலைக்காட்டுக்குப் போய்விட்டதால் அந்தக்குச்சுக்காடு சபிக்கப்பட்ட குடியிருப்புபோல் மனித சஞ்சார மற்றுக் கிடந்தது.

கிழவர் வங்கிப் புத்தகத்தை எடுத்து இடுப்பில் சொருகிக்கொண்டு அக்கணமே புறப்பட்டு விட்டார்.

பக்கத்து டவுனுக்குப் போய் ஒரு டாக்சியைப் பிடித்துக் கோலாலம்பூரில் மகனிருந்த இடத்தை அடைந்த போது மாலை மணி மூன்றாகிவிட்டது.

'சிலாங்கூர் மான்சனில்' தங்கியிருந்த அவனைப் பேர்ய்க்கண்டபோது அவனுடன் அந்த அறையில் மேலும் பலர் அறையை அடைத்துக்கொண்டிருந்தார்கள்.

அவரைக்கண்டுவிட்டு 'அப்பா" என்றலறியபடி அறையிலிருந்து வெளியே வர முயன்ற தணிகாசலத்தை ''டேய் உட்காருடா" என்று யாரோ அதட்டிப் பலாத்காரமாக அறைக்குள்ளேயே இருத்துவது நன்றாகத் தெரிந்தது.

தண்டல் அது கண்டு திடுக்கிட்டார்.

அவரை நோக்கி அறைக்குள்ளிருந்து வேகமாய் வெளியே வந்த ஒரு முரடன் ''இந்தாய்யா, நீ உன் மவனை உசிரோட பார்க்கணும்னா, வெள்ளி ஆயிரம் இன்னும் ஒரு மணி நேரத்திலே இங்கே வந்தாகணும். இல்லே, உம் மவன் அவ்வளவுதான்" என்றபடி அவர் முன் ஒரு கத்தியைக் காட்டி உறுமினான்.

கிழவர் அது கேட்டு நிற்கவும் முடியாது தடுமாறினார்.

"பணம் தானேப்பா, தர்றேன். இதோ இப்பவே போஸ்டு ஆபீசுக்குப் போயிட்டு பணத்தோட வர்றேன்...எம் மவனை ஒண்ணும் செய்துப் புடாதே; எம் மவனை ஒண்ணும் செய்துப் புடாதே...! இதோ வந்துப்புடுறேன்..." கிழவர் தட்டுத்தடுமாறி கீழ்த் தளத்துக்கு வந்து சேர்ந்தார்.

அவருக்கு அதிர்வில் எது விளங்காவிட்டாலும் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது.

"எம்மவனை அந்தப் பயலுக எதுக்காகவோ பிடிச்சிக்கின்னுனுங்க...! பணம் கொடுக்கலேன்னா..." அவருக்கு மேலே நினைக்கவே நடுங்கியது.

அவர் தலைநகரில் நாள் தவறினாலும் நேரம் தவறாமல் நடக்கும் கொலை கொள்ளைகளைப் பற்றி அறிந்தே இருந்தார். குண்டர் கும்பலைப்பற்றி எப்போதுமே அவருக்குள் ஒரு நடுக்கமிருந்தது.

அதனால்தான் அவர் தணிகாசலம் வரும்போதெல்லாம் அவனை எச்சரித்துக் கொண்டு வந்தார்.

ஆனால் அவனோ 'அதெல்லாம் இவருக்கிட்டே நடக்காதப்பா' என்று சொல்லிவிட்டுஅலட்சியமாகச்சிரிப்பான்.

ஆனால் இன்று...

அவர் சேமிப்புப்பகுதியில் ஆயிரத்

15 நாள் பலன்

(ஏப். 25 முதல் மே 10 வரை)

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

என்ன, குடும்பத்தில் தகராறு? அப்படித்தான் இருக்கும். கவலைப் படாதீர்கள். சூரியனைக் கண்ட பனிபோல அது நீங்கும். மேலதிகாரி "வள்" ளென விழலாம். அவரைக் கொஞ்சம் "தாஜா" பண்ணி விடுங்கள். கடிதத்தின் மூலம் நல்ல சேதி வரும். அதிகமாக உழைக்க வேண்டி இருக்கிறதா? நன்றாக உழையுங்கள். அதற்கேற்ற பலனை நிச்சயம் அடைவீர்கள். புதிய தொடர்புகளினால் உங்களுக்கு அதிர்ஷ்டம் வரலாம். பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

நல்ல நாட்கள்: 6, 8
எச்சரிக்கை நாட்கள்: 30, 1, 2

மீனம் (பிப். 19- மார்ச்சு 20)

உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு நீங்கள் ஒரு "வேண்டாத பெண்டாட்டியைப்" போல! நீங்கள் எதைச் செய்தாலும் தப்பும் தவறுமாக இருப்பதாகவே அவர்களுக்குப்படும். சகிப்புத் தன்மை இந்த நேரத்தில் உங்களுக்கு மிகவும் தேவை. கடந்த காலத்தில் உங்களுக்கு உதவி செய்தவர்களின் தொடர்பை அறுத்துக் கொள்ளாதீர்கள். ஆபத்தில் உதவுபவர்கள் அவர்களே!

நல்ல நாட்கள்: 6, 8
எச்சரிக்கை நாட்கள்: 30, 2

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

நீங்கள் கடன் கேட்கப் போகும் இடத்திற்கு உங்கள் அதிர்ஷ்டம் போகு முன்பே "சனியன்" போய் நிற்பான். ஆகவே நீங்கள் யாரிடமும் கடன் கேட்க முயலுவதைவிட "கம்"மென்று உள்ளதை வைத்துச் சமாளிப்பதே நல்லது. என்றாலும் தேதி 6க்கு மேற்பட்டு அதிர்ஷ்டம் உங்கள் பக்கம்தான். எதிர்பாராத உதவி கிட்டும்.

நல்ல நாட்கள்: 6, 8
எச்சரிக்கை நாட்கள்: 1, 3, 5

ரிஷபம் (ஏப் 21 - மே 20)

உங்களுக்கு உதவும் நண்பர்களோடு உறவை வலுப்படுத்திக் கொள்ளுங்கள். அவசியமில்லாமல் ஐந்து காசைக்கூடக் கையிலோ, பாக்கெட்டிலோ வைத்திராதீர்கள். போனவழி தெரியாமல் போய் விடும். ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட பிரச்னை ஏதும் இருக்குமானால் அதைத் தீர்க்க இது நல்ல நேரம். சக ஊழியர்களிடம் கொஞ்சம் கவனம் தேவை. அவர்களுக்குத் உங்களிடம் திடீர் கோபம் ஏற்படலாம்.

நல்ல நாட்கள்: 6, 8
எச்சரிக்கை நாட்கள்: 30

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

இழுபறியாகக் கிடந்து வந்த விவகாரங்கள் தீர்வுக்கு வரும். பகைவர்கள் நண்பர்களாவார்கள். நிலையான செயல்களைச் செய்ய ஏற்ற வேளை. நண்பர்களின் ஆலோசனைகளால் நன்மை உண்டு. கூடுமானவரை பயணங்களைத் தவிருங்கள். செலவையும் குறையுங்கள்.

நல்ல நாட்கள். 6, 8
எச்சரிக்கை நாட்கள்: 1, 2

கடகம் (ஜூன் 21 - ஜூலை 20)

வியாபார விருத்தி உண்டாகும். அதற்காகத் தேவைக்கு மீறிய கொள்முதல் செய்வதைத் தவிர்த்தால் நல்லது. பொருளாதாரத்தில் பிறருடைய ஆலோசனையின்படி செயல்படாமல் சொந்த யோசனையைக் கைக்கொள்ளுங்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உல்லாசமாகப் பொழுதைக் கழிக்க வாய்ப்புண்டு.

நல்ல நாட்கள்: 6, 8
எச்சரிக்கை நாட்கள்: 30, 1

சிம்மம் (ஜூலை 21 - ஆக. 21)

பணம் சம்பந்தப்பட்ட நண்பர்களினாலும், விவகாரங்களினாலும் உங்களுக்கு நன்மை கிடைக்கலாம். உங்களுக்கே தெரியாமல் உங்களிடம் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிப்படுத்த முயன்றால் வெற்றி உங்களுக்கே. உங்களுடைய வாழ்க்கையில் திடீர் திருப்பங்கள் ஏற்படக்கூடும். மனதில் பட்டதைச் சொல்ல வெட்கம் எதற்கு?

நல்ல நாட்கள்: 6, 8, 7
எச்சரிக்கை நாட்கள்: 30, 9

கன்னி (ஆக 22-செப். 22)

காலை பத்து மணிக்கு வரவு வருகிறது என்றால், காலை ஏழு மணிக்கே செலவு கதவைத் தட்டும். பெரியவர்களின் வெறுப்புக்கு ஆளாவீர்கள். வாகனப் போக்குவரத்தைக் கூடுமான வரை ஒதுக்குங்கள். இலக்கியவாதிகளுக்கு கற்பனை சுரக்கும். நோய் உங்களைக்கண்டு ஒதுங்கியே நிற்பதால் சுறுசுறுப்பாக இருப்பீர்கள்.

நல்ல நாட்கள்: 6, 8
எச்சரிக்கை நாள்: 30

துலாம் (செப் 23-அக். 22)

ஊருக்கு உழைப்பதில் முன்னுக்கு நிற்பீர்கள். அதனால் தங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் தங்களிடம் அன்பாக இருப்பார்கள். "தொட்டது துலங்கும் வைத்தது விளங்கும்" என்பது போல எதைச் செய்தாலும் நலம் விளையும். இதை எண்ணிக்கொண்டு நெருப்பில் கை வைத்து விடாதீர்கள். வாகனப் போக்குவரத்தில் மனதுக்கு மகிழ்ச்சி ஏற்படும்.

நல்ல நாட்கள்: 6, 9
எச்சரிக்கை நாள்: 2

விருச்சிகம் (அக் -23 நவ. 22)

உங்களது கோரிக்கைகளை மேலதிகாரி செவிமடுப்பார். வாய்ப்பை நழுவ விடாதீர்கள். எளிதில் உணர்ச்சிவசப்பட்டு உடல் ஆரோக்கியத்தைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம். திடீர் அதிர்ஷ்டம் வரலாம். உங்களைப் பிறர் ஏமாற்றி விட்டாலும் நீங்கள் எதிலும் கவனமுடன் இருப்பது அவசியம். ஏனெனில் உங்களை அறியாமலேயே நீங்கள் காரியத்தில் கோட்டை விட்டுவிடுவீர்கள்.

நல்ல நாட்கள்: 6, 7
எச்சரிக்கை நாள்: 30

தனுசு (நவ. 23 - டிச. 20)

எல்லாவித வாகனப் போக்குவரத்திலும் கவனம் தேவை. வேலை செய்யும் போது குறிப்பாக மின்சார, இயந்திரக் கருவிகளைக் கையாளும்போது எச்சரிக்கை அவசியத்திலும் அவசியம். பணக் கவலை இராது. சூதாட்டம், குதிரைப் பந்தயம் போன்றவற்றில் ஈடுபட்டால் முதலை வாயில் புகுந்த கதைதான்.

நல்ல நாட்கள். 6, 8
எச்சரிக்கை நாள்: 30

மகரம் (டிச. 21- ஜன. 19)

உங்கள் சொந்த விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ள நண்பர்களின் ஆலோசனைகளை நாடாதீர்கள், குடும்பத்தில் உள்ளவர்களோடு வாக்குவாதம் செய்யும் சந்தர்ப்பம் நேரலாம். அந்த வாக்குவாதத்தால் நேரமும் சக்தியும்தான் வீணாகும். எதற்கு வீண் வம்பு. விட்டுத் தள்ளுங்கள்.

நல்ல நாட்கள்: 6, 8
எச்சரிக்கை நாள்: 2

—தஞ்சை நகுலன்

துக்கு இரண்டாயிரமாக எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்...

அவர் தபால்நிலைய வெளிவாசலுக்கு பணத்துடன் வந்தபோது யாரோ ஒருவன், "என்னய்யா பணத்தை எடுத்துட்டியா?" என்று கேட்டான் அவரை அணுகித் தணிந்த குரலில்!

அவனைப் பார்த்த மாத்திரத்தில் அவன் யாரென்று அவர் கண்டு கொண்டார். அந்த அறைக்கு வெளியே அவரை நிறுத்தி பணம் கேட்டானே, அவனே தான்.

அவர் இடுப்பில் சொருகியிருந்த பணக்கத்தையைக் கையில் எடுத்தபடி "இருக்குப்பா! ரெண்டாயிரமா எடுத்துக்கினு வந்திக்கிறேன். எம்மவனை..." என்றவர் மேலே ஏதோ சொல்ல வாயெடுத்தார். அதற்குள் அந்த முரடன் தண்டலை நெற்றிப் பொட்டில் தாக்கிக் கீழேஉருட்டிவிட்டு, பணத்துடன் தபால் நிலையத்தின் பின் சந்து வழியே பாய்ந்து ஓடலானான்.

கீழே விழுந்த கிழவர் எழுந்திருக்க மாட்டாதவராய் சிமிண்டுத் தரையில் தலையை மோதிக்கொண்டு அலறினார்.

"எம் மவனை கொன்னுப் புட்டானுங்களே..."

அங்கே ஒரு போலீஸ் குழு வரும் வரை கிழவர் அரற்றிக் கொண்டு கிடந்தார்.

ஃ ஃ ஃ

போலீஸ் நிலையத்தில் குற்றுயிராக இருந்த தண்டலிடம் கையில் விலங்குடன் நின்ற ஒருவனைச் சுட்டிய போலீஸ்அதிகாரி, "இவனிடம்தான் உன் பணம் இருந்தது ஆனால் இவன் உன் மகன் என்கிறானே, உண்மையா?" என்று கேட்டார்.

"இல்லிங்கய்யா, எம் மவன் எப்பவோ செத்துப்போயிட்டான். இந்த முனுசாமி தண்டலு உதிரத்திலே பிறந்தவன் இப்படிப்பட்ட அயோக்கியத் தனத்துக்கெல்லாம் ஒரு நாளும் போக மாட்டானுங்க...! போலிசு ஐயா, உங்களையே கேக்கிறேன், ஒரு மவன் சொந்த அப்பனை இப்படி ஏமாத்திப் பணம் பறிப்பானுங்களா? சொல்லுங்கய்யா, பறிப்பானு...? எம் மவன் செத்துட்டான்; எப்பவோ செத்துட்டான்..." கிழவர் வாய்விட்டு குமுறி யழுதவராய் போலீஸ் நிலயத்திலிருந்து தள்ளாடியபடி வெளியேறினார்.

கையில் விலங்குடன் போலீஸ் நிலயத்தில் உள்ளே இருந்தவன் கண்களில் அவனையறியாமலேயே நீர் திரண்டது ●



காதலும் சுஜாதாவும்

படத்திற்குப் படம் உணர்ச்சி மயமான உன்னத நடிப்பைக் கொட்டி நடிக்கும் சுஜாதா இந்த ஆண்டு ஆரம்பத்தில் திருமணம் செய்து கொள்ளப்போவதாகக் கூறியிருந்தார்! ஆனால் அவருக்கு இன்னும் திருமணம் நடைபெற வில்லை. விரைவில் அவர் திருமணம் செய்து கொள்வார் என்று தெரிகிறது. அவர் செய்து கொள்ளப் போவது காதல் திருமணமா அல்லது பெற்றோர்கள் பார்த்துச் செய்யும் திருமணமா என்பதை அவர் கீழே கூறியிருக்கும் பதில்களிலிருந்து நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

கே: நீங்கள் யாரையோ காதலிப்பதாகப் பேசப்படுகிறதே!

ப: உண்மைதான்; நான் எனது தொழிலைச் [சினிமாவில் நடிப்பதை] காதலிக்கிறேன்!

கே: நடிகைக்குத் திருமணம் தேவையா?

ப: அவளும் பெண்தானே!

கே: நீங்கள் மணந்தால் ஒரு நடிகரை மணப்பீர்களா அல்லது ஒரு தொழில் அதிபரையா?

ப: இருவரும் இல்லை!

கே: உங்களை மணந்து கொள்கிறவர் எப்படி இருக்கவேண்டும்?

ப: அன்பு - பற்று - பாசம் கொண்ட மனிதராக இருக்க வேண்டும்.

கே: அழகு, அனுபவம், பணம் இந்த மூன்றில் காதலிக்க எது தேவை?

ப: காதலுக்கும், மேலே கூறியவற்றிற்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

கே: ஒரு பெண் காதலித்துத் திருமணம் செய்து கொள்வதா அல்லது பெற்றோர் பார்த்துச் செய்து வைக்கும் திருமணம் நல்லதா?

ப: நம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோர், தன் பிள்ளை அல்லது பெண்ணின் வாழ்க்கை கெடும்படியாகவா ஒரு திருமணத்தை நடத்துவார்கள்? நிச்சயமாக இல்லை. எனவே ஆரம்பத்தில் சற்றுக் கசப்பாக இருந்தாலும் வாழ்நாள் முழுவதும் இனிப்பைத்தரும் பெற்றோர் பார்த்து நடத்தும் திருமணமே எல்லாவற்றிலும் சிறந்தது.

கே: தாங்கள் காதல் திருமணம் செய்து கொள்வீர்களா?

ப: நிச்சயமாக இல்லை.

கே: உங்கள் வீட்டில் எப்போது மேளச்சத்தம்?

ப: திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர்! அவசரப்பட முடியுமா?

கே: வயதான நடிகைகள் காதல் காட்சியில் நடிப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: வயதானாலும் நடிப்புத் திறமை போய்விடவில்லை.

கே: பெண்களுக்குப் பெருமை தரக்கூடியது எது?

ப: அடக்கம்!

கே: நீங்கள் சினிமாவில் நடிக்க வராமலிருந்திருந்தால் என்ன செய்து கொண்டிருப்பீர்கள்?

ப: கணவர் வந்திருப்பார். கையில் இரண்டு குழந்தைகள் இருந்திருக்கும்!

கே: எந்த வேடத்தைக் கொடுத்தால் உங்களால் நடிக்க முடியாது?

ப: எந்த வேடத்தையும் செய்துவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது.

கே: புகழ் ஏணியின் உச்சி எப்படிப் பட்டது?

ப: முள்ளின்மேல் நிற்பதைப் போன்றது! ✱

"திக்கற்ற பார்வதி" என்ற படத்தில் லட்சுமியும் ஸ்ரீகாந்தும் ஜோடி சேர்ந்து மிக இயற்கையாக நடித்திருந்தார்கள்! அந்தப் படம் இந்திய அதிபரின் பரிசைப் பெற்றது. அதைப்போலவே "சில நேரங்களில் சில மனிதர்கள்" என்ற படத்திலும் லட்சுமியும் ஸ்ரீகாந்தும் நடித்திருக்கிறார்கள். நிருபர் அவருடைய வீட்டிற்குச் சென்றிருந்தபோது, அப்பொழுதுதான் அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு விடு திரும்பியிருந்தார் சாரதா! "படத்தில் லட்சுமியின் நடிப்பு ரொம்ப ரொம்பப் பிரமாதம் சார்! அவரை எப்படிப்புகழ்வதென்றே தெரியவில்லை. இந்தப்படத்திற்கு நிச்சயம் இந்தியக்குடியரசுத்தலைவரின்பரிசு கிடைக்கும்! ஆனால் கமர்ஷியலாக இந்தப் படத்திற்கு மக்களுடைய ஆதரவு குறைவாகத்தான் இருக்கும்! உயர்ந்த படங்களுக்குத்தான் சாதாரண ரசிகர்களின் ஆதரவு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறதே!" என்றுஅபிப்பிராயம் தெரிவித்தார் சாரதா.

சாரதா புகழ்ந்த லட்சுமி



வனிதையர் நடத்தும் வங்கி

சி.ராஜப்பா



"பெண்களால் குடும்ப வரவு செலவுக் கணக்கைக்கூடச் சரிவரப் பார்க்க முடியாதே?" என்ற எண்ணம்இருந்து வந்த காலம் மாறி, இக்காலத்தில் வனிதையர்களால்வங்கிகளையும் நடத்த முடியும் என்று நிரூபித்துக் காட்டுகிறார்கள், சிண்டிகேட் வங்கி நிறுவனத்தார். சிண்டிகேட் வங்கிக்கு இந்தியாவின் பெண்களே நிர்வகிக்கும் 13 கிளைகள் உள்ளன.

சென்னைத் தியாகராய நகரிலுள்ள "முழுதும் பெண்களால் நிர்வகிக்கப்படும் சிண்டிகேட் வங்கியின் கிளைக்குச் சென்றேன். அதன் நிர்வாகியாகப் பணியாற்றுபவர்இந்தத் துறையில் நல்ல அநுபவம் வாய்ந்த பெண்மணிதான். இது சென்னையிலுள்ள சிண்டிகேட் வங்கியின் மூன்றாவது கிளை. 'பெண்கள் நடத்தும் கிளைகளில் இரண்டாவதாகச் சிறப்புப் பெற்றிருக்கிறது. முதல் தரமானது என்ற சிறப்பை வகிப்பது பெங்களூர், சேஷாத்ரிபுரம் கிளை.

"பெண்கள் நிர்வகிக்கும் வங்கியின் சிறப்பு என்ன?" என்று நிர்வாகியிடம் கேட்டேன். "பெண்கள் பொறுமைசாலிகள். எங்கள் ஸ்தாபகர் திரு. டி. ஏ. பை. இதை நன்கு உணர்ந்தவர். பெண்கள் வங்கி நடத்துவதால் , ஆண்களைக் கவருகிறார்கள். எளிதில் டெபாஸிட் பெருகிவிடும் என்ற எண்ணம் சரியல்ல. எங்கள் சிறந்த சேவை மூலமே நாங்கள், வாடிக்கையாளர்களை அதிகம் பெற்றிருக்கிறோம்" என்கிறார் இந்தப் பெண் நிர்வாகி.

"ஆண்கள் மட்டும் வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்வதில்லையா?" என்றேன். "அதை நான் மறுக்கவில்லை. பெண்கள் நிர்வகிக்கும் வங்கியின் தனிச் சிறப்பு. வாடிக்கையாளருக்கு உடனுக்குடன் வரவு செலவு விஷயத்தில் உதவி வருவதுதான். நாங்கள் எங்கள் இருக்கையில் அமர்ந்து விட்டால் புகை பிடிக்கவும், காப்பி குடிக்கவும் வேலை நேரத்தில் போவதில்லை. அநாவசியமான "டெலிபோன்" பேச்சுகளுக்கு இடம் அளிப்பதில்லை. தாமதமாக வருவதில்லை. அவ்வாறு வர நேர்ந்து, உயர் அதிகாரிகள் கண்டித்தால் அந்தத் தவற்றை மீண்டும் செய்யத் துணிய மாட்டோம். எல்லாவற்றிற்கும் மேலாக "ஓவர்டைம்" மோகம் எங்களிடம் இல்லை. மிகமிக அவசியம் நேர்ந்தால் ஒழிய, எங்களுக்குள் பிரச்னைகளைத் தீர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால இன்றி எவ்வித வேலை நிறுத்தத்திலும் ஈடுபடுவதில்லை. நாங்களும் யூனியன் மெம்பர்கள்தாம் என்பதை மறுக்கவில்லை" என்று கூறியவர், தம் துணை நிர்வாகியிடம் மற்ற தகவல்களைக் கேட்டுக் கொள்ளச் சொல்லி, அவரை அறிமுகப்படுத்திய பின், தம் வேலையில் மூழ்கிவிட்டார்.

"உங்கள் வங்கியில் ஆண் வாடிக்கையாளர்களும் இருக்கிறார்களே. "பெண்கள் வங்கி" தானே என்று அலட்சியப்படுத்தி நடப்பதில்லையா?" என்று துணை நிர்வாகியிடம் கேட்டேன்.

"இல்லை. தேசிய மயமான வங்கிகளிடம் பெறும் உதவிகளையெல்லாம் வாடிக்கையாளர்கள் • எங்கள் நிர்வாகிடம் பேசி, ஆலோசித்துப் பெற்றுக் கொள்ளமுடியும். கடன் வழங்குகிறோம்., பொதுப் பணம் என்பதை மறந்து விடாமல் பொறுப்போடு, முன் ஜாக்கிரதையோடு கடன் கொடுப்போம். வசூலிப்பதிலும் கண்டிப்புத்தான்" என்றார் அவர்.

"உங்கள் கிளைகள் எங்கெங்குச் செயல்படுகின்றன?" என்றேன்.

"இந்தியாவிலுள்ள பதின்மூன்று கிளைகள் பெண்களால் நிர்வகிக்கப்படுகின்றன புதுடில்லி, பம்பாய், கல்கத்தா, ஹைதராபாத், திருவனந்தபுரம்,கோயம்புத்தூர், பெங்களூர் ஆகிய இடங்களில் சிண்டிகேட் வங்கியின் பெண்கள் நிர்வாகக் கிளைகள் உள்ளன. பெங்களூரிலேதான் பெண்கள் நிர்வாக வங்கிக் கிளையை முதலாவதாகத் துவக்கினார்கள். மணிபாலிலுள்ள எங்கள் தலைமையகத்தில் நிர்வாகப் பிரிவிலுள்ள ஊழியர்கள் அனைவருமே பெண்கள் தாம். இதோ இந்தச் சென்னைத் தியாகராய நகர்க் கிளை 1963ல் தோன்றியது. எங்கள் ஸ்தாபகரே இப்போதைய பாதுகாப்பாளர்" என்றார்.

"இங்கு யாவரும் பெண்கள் என்பதால் பெண் வாடிக்கையாளர்கள் அதிகமா?" என்ற கேள்விக்கு 'அப்படிச் சொல்வதற்கில்லை. ஆண்களும் இருக்கிறார்கள். வங்கி நிர்வாகத்தில் ஊழியர்கள் பெண்கள். பணியாட்கள் மூன்று பேர் மட்டும் ஆண்கள். அவர்கள் பள்ளி இறுதிப் படிப்புப் படித்தவர்கள். அவர்களும் பெண்களாகிய எங்களிடம் மரியாதையுடனே நடப்பார்கள் ஏனென்றால் வங்கி வேலைகளைக் கவனிப்பதுடன் வங்கி நடத்தும் பரீட்சைகளில் தேறினால் ஏவலர்களாக இருப்பவர்களும் . குமாஸ்தாக்களாக வரும் வாய்ப்பு இங்கே இருக்கிறது. அவர்களுக்கு அந்த வகையில் நாங்கள் உதவி வருகிறோம்" என்ற பதில் கிடைத்தது.

"ஓவர்டைம் செய்வதில்லை என்று பெருமைப்படுகிறீர்களே, அது இயலுமா?" என்றேன் வியப்புடன்.

"பெண்களாகிய நாங்கள் அன்றன்று முடிக்க வேண்டிய வேலைகளை இங்கே முடித்த பிறகே வீடு செல்லுகிறோம். சிறிது நேரமானாலும் "ஓவர்டைம்" சம்பளம் கேட்பதில்லை. வேலை நிறுவனங்களில் மிக அவசியமாகக் கலந்து கொள்ள நேர்ந்து, வங்கி வேலை பாதித்தாலும் "ஓவர்டைம்" செய்யாமல் குறித்த காலத்தில் அதை முடிப்போம், "வங்கிகளில் ஓவர்டைம் தான் முக்கிய வரும்படி" என்ற எண்ணம் நிலவுவதை மற்றவர்கள் மாற்றிக் கொள்ளவே நாங்கள் எடுத்துக்காட்டாக பாடுபடுகிறோம்" என்று பெருமைப்படுகிறார் அந்த அதிகாரி.

"திருமணம் செய்துகொண்ட பெண்கள் வங்கி வேலையைக் கவலையின்றிச் செய்ய முடியுமா?" என்று கேட்டேன்.

> பெண்கள் அரளிப்பூவை தலையில் சூடி வந்தால் பேன், பொடுகு அரிப்பு போன்றவை ஏற்படா. அரளிப் பூவும், இலையும் விஷத்தன்மை வாய்ந்தவை என்பதையும் மறந்துவிடக் கூடாது.

"திருமணத்துக்குப் பின்னும் பெண்கள் திடமனத்துடன் வேலையில் ஈடுபட முடியும், வீட்டில் அன்றாடப் பிரச்னை எதுவானாலும் வேலை நேரத்தில் எங்கள் மனத்தில் அதற்கு இடம் இல்லை. வாடிக்கையாளர்களிடம் பொறுமை இழந்து சீறமாட்டோம். இது வங்கி நிர்வாகம் எங்களுக்கு அளித்துள்ள முக்கியப் பயிற்சி" என்று தெளிவாகக் கூறினார் அந்தத் துணை நிர்வாகி.

"திருமணமானதும் பெண்கள் சிலர் வேலையை ராஜினாமா செய்து விடுகிறார்களே, நிர்வாகம் அவர்கள் பயிற்சிக்காகச்செலவிடும் பணம் வீண் அல்லவா?"

"பெண்கள் கிளைகளைப் பொறுத்த வரை அந்தப் புகாருக்கு இடம் இல்லை." என்பதே அவர் பதில்.

"உங்கள் வங்கியில் பணியாற்றுபவர்கள் எத்தனைபேர்?" என்றேன்.

"மொத்தம் 35பேர் இங்கே பணியாற்றுகிறோம். பெண்களாலும் வங்கிப் பொறுப்பை நிர்வகிக்க முடியும். குறித்த காலத்தில் குறை கூற இடமின்றிச் சேவை செய்ய முடியும்; பணவிஷயத்தில் கவனமாக இருக்க முடியும்; ஆண்களுக்கு இணையாகத் துணிவாகவும் செயல்பட முடியும்; வங்கியின் முன்னேற்றத்தை வெளிப்படுத்த இயலும் என்ற அறைகூவலை மேற்கொண்டே நாங்கள் செயல்படுகிறோம்."

"வங்கிப் பொறுப்பில் உங்களுக்கு ஏற்பட்ட சிறப்பான அனுபவம் பற்றிக் கூறமுடியுமா?"

"சமீபத்தில் என்னை எங்கள் தலைமையகம் ஒரு விசேஷப் பயிற்சி பெற நாஸிக் அருகிலுள்ள தேவ்லாலி என்ற இடத்துக்கு அனுப்பியது. லெஸ்வி ஷானி ப்ரோகி ராம் ஆஃப் டெமாக்ரஸி" என்ற அந்தப் பயிற்சி வகுப்பில் வாடிக்கையாளரிடம் கடுஞ்சொல் கூறாமல், அன்றாடக் கணக்கு வழக்குகளை அன்றே முடித்து, வசூலில் கறாராக இருப்பதே வெற்றிகரமான வங்கி நிர்வாகத்துக்கு அடிப்படை என்ற அறிவுரையே அங்கு கிடைத்தது. ஆனால், ஏற்கனவே இந்தப் பயிற்சி பெறுமலே அதை நான் கடைப்பிடித்து வருகிறேன். "பெண்கள்செலவாளிகள், சேமிக்கத் தெரியாதவர்கள்" என்ற தவறான எண்ணத்தை மாற்றி •ஒரு வங்கியையே திறம்பட நடத்தி, நாட்டுக்குச் சேவை செய்ய முடியும் என்ற நூதனத் திட்டத்தை ஸ்தாபகர் திரு. பை ஏற்படுத்திவிட்டார். பொறுப்பு உணர்ந்து, வாடிக்கையாளர் திருப்தியடையும்படி சேவை செய்து திறமையை வெளிப்படுத்துவதையே எங்கள் லட்சியமாக நாங்கள் கொண்டிருக்கிறோம்"

ஆஸ்கார் ஒயில்டு, பெண்களின் திறமையைப் பற்றி எவவளவு பொருத்தமாகச் சொன்னார் பாருங்கள்! **Women are wonderfully Practical, much more Practical than we are** - ஆண்களைவிடத் திட்டமிட்டுச் செயல்படுவதில் பெண்கள் வல்லவர்களாம், கவனித்தீர்களா? அதை நிரூபிக்கிறார்கள் வங்கி நடத்தும் இந்த வனிதையர்கள்.

சரக்குகள் வாங்கவும், கிடங்குகள் வைத்துக்கொள்ளவும் இயந்திரங்கள் வாங்கவும், வீட்டுக்கு உபயோகமான பொருள்கள் வாங்கவும் தகுந்த ஏற்பாட்டின் மேல் கடன்வசதி அளித்துவரும் இவர்கள் சேவை எல்லாருக்கும் தேவை தானே? ✱

பாட்டில் நகைச்சுவை



மு. சேதுராமன்

காளமேகப் புலவர் இல்லம் அது. கவிஞர் அலுவலாய் வெளியே சென்றிருந்தார். அவரது மனைவியார் மட்டும் இல்லத்தில் இருந்தார். அப்போது இரண்டு ஆய்ச்சியர்கள் அங்கு மோர் விற்பதற்காக வந்தார்கள். மோர் வெறும் தண்ணீராக இருந்தது. அதன் காரணமாகக் கவிராயர் மனைவிக்கும் மோர் கொண்டு வந்த ஆய்ச்சியர்களுக்கும் வாக்குவாதம் வளர்ந்துவிட்டது. அப்போது காளமேகப் புலவர் அங்கு வந்தார்; மோரைப் பார்த்தார்; சிரித்தார். மோரிலே தண்ணீர் சேரவில்லை என்று ஆய்ச்சியர் கூறுவது முற்றிலும் உண்மைதான்! ஆனால் தண்ணீரிலே மோர் சில துளிகளாவது சேரவில்லை என்று எவ்வாறு துணிந்து சொல்லமுடியும்?" என்ற கூற்றுடன் புலவரது சிரிப்பும் பெரிதாயிற்று. பெரிய சிரிப்பு சிறிய பாட்டாக வெளிவந்தது:—

"காரென்று பேர் படைத்தாய்
 ககனத் துறும்போது!
நீரென்று பேர்படைத்தாய்
 நீணிலத்தில் வீழ்ந்ததற்பின்!
வாரொன்று மென்மயில்நேர்
 ஆய்ச்சியர்கை வந்ததற்பின்
மோரென்றும் பேர்படைத்தாய்
 முப்பேரும் பெற்றாயே!"

வானத்திலிருந்தபோது உன்னை "மேகம்" என்று உரைத்தார்கள். நிலத்தில் விழுந்த பின் "நீர்" என்று பெயர் சொன்னார்கள். மயில் போன்ற இந்த ஆய்ச்சியர் கைவந்த பின் "மோர்" என்றும் மொழிகிறார்கள். உனக்கு ஒரு பெயரா? ஒன்று, இரண்டு, மூன்றல்லவா? "கார்" "நீர்" "மோர்" என்னும் முப்பேரும் பெற்று முழுப்பெருமையோடு திகழும் உன்னை எவ்வாறு வியந்து புகழ்ந்து பாடுவது?" என்று கூறும்போது காளமேகப் புலவரின் நகைச்சுவை இனிது விளங்குகிறது.

ஃ ஃ ஃ

ஒரு கொல்லன். வண்டூரைச் சார்ந்தவன். வண்டூர்ச் சிங்கன் என்றால் கொல்லர் குழுவினரிடையே எல்லையற்ற மதிப்பு. அந்தச் சிங்கன் கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு ஏதேனும் பாக்கு வெட்டி செய்தளித்தானோ என்னவோ தெரியவில்லை. கம்பன் அவனைப் பாராட்டியதாகப் பாடல் ஒன்று வழங்கி வருகிறது. "வண்டூர்ச் சிங்கன் சிறந்த வேலைத்திறன் உடையவன்" என்று மட்டும் கூறிவிட்டால் போதுமா? அவ்வாறு கூறிவிட்டால் மட்டும் அதில் பெரிதும் ஈடுபாடு அடைய முடியுமா? கவிச்சக்கரவர்த்தி அல்லவா? எப்படித் தன் புலமையால் நகைச்சுவையோடு கூறுகிறான் என்பதைக் காண்போம்:—

"ஆழியான் ஆழி அரன்மழுத் தான்என்பான்
கோழியான் குன்றெறிய வேலென்பான்—பூழியான்
அங்கைஎழுத் தாணி அருள்என்பான், மாவண்டூர்ச்
சிங்கன் உலைக்களத்தே சென்று!"

ஆழியான், சிங்கன் உலைக்களத்துக்குச் சென்று "சிங்கா, துஷ்டநிக்ரகம் செய்து எனது ஆழிப்பழுதாகி விட்டது! அதைப் பழுது பார்த்து விரைவில் தருவாயாக!" என்கிறான். அயனோ 'தலை எழுத்தை அனைவருக்கும் எழுதி எழுதி என் எழுத்தாணி தேய்ந்துவிட்டது. அதைத் திரட்டித் தா!" என்கிறான். முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகனோ, 'இதோ, மலையில் அசுரன் மறைந்திருக்கிறான். இது தருணம் தவறினால் மறுசமயம் வாய்ப்பதரிது. விரைவில் வேல் செய்து தா!" என்கிறான். சிவனோ 'என் கரத்தில் மழு இல்லாமல் இருந்தால் என் தலைமைப் பதவியே இல்லாமல் போய்விடும்! எனக்கு விரைந்து மழுவைத் திரட்டித் தந்துவிடு!" என்கிறான். இவ்வாறு மும்மூர்த்திகளும் முருகனும் வாசல் தேடிவந்து காத்து நிற்கும் வேலைத்திறன் உடையவன் அந்த வண்டூர்ச் சிங்கன்


ஃ ஃ ஃ

முருகனும் விநாயகரும் ஒருநாள் சண்டையிட்டுக்கொண்டார்கள். இறுதியில் கண்ணைக் கசக்கிக் கொண்டு விநாயகர், தந்தை பரமசிவனிடம் சென்று 'அப்பா! தம்பி முருகன் என் காதை மிகவும் அழுத்தமாகக் கிள்ளிவிட்டான். அதன் வலி தாங்க முடியவில்லை!" என்று தன் பெரிய காதைக் காட்டினார். காதைப் பார்த்த உலக முதல்வர், முருகனைப் பார்த்து 'இவ்வாறு அண்ணன் காதைத் திருகலாமா?" என்று கேட்டார்.

"அண்ணன் மட்டும் என் கண்ணை 'ஆறு... ஏழு...' என்று எண்ணலாமா?" என்றார் முருகன். மறுபடியும் தந்தையார் விநாயகரைப் பார்த்து "நீ அவ்வாறு கண்களை எண்ணி விகடம் செய்யலாமா? என்று வினவினார். விநாயகரோ "தம்பி மட்டும் என் தும்பிக்கையைப் பிடித்து முழம் போட்டு அளக்கலாமோ?" என்றார். இந்த முடிவில்லாத குற்றச்சாட்டிற்குக் குற்றவாளியைக் கண்டு கொள்ளத் தந்தையாரால் முடியவில்லை. பெற்றவளை அழைத்தார்:—

அரனவன் இடத்திலே ஐங்கரன் வந்துதான்
 "ஐய! என் செவியை மிகவும்
 அறுமுகன் கிள்ளினான்!"
 என்றே சிணுங்கிடவும்
 அத்தன்வே லவனை நோக்கி
விரைவுடன் வினவவே,
 "அண்ணன்என் சென்னியில்
 விளங்குகண் எண்ணினான்!" என
 வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து,
 "நீ அப்படி
 விகடம்ஏன் செய்தாய்?" என
"மருவும்என் கைநீள முழம்அளந் தான்!" என,
 மயிலவன் நகைத்து நிற்க,
 மலையரையன் உதவவரும் உமையவளை
 நோக்கி "நின்
 மைந்தரைப் பாராய்!" என
கருதரிய கடலாடை உலகுபல அண்டம்
 கருப்பமாய்ப் பெற்ற கன்னி
 கணபதியை அருகழைத்து
 அகமகிழ்வு கொண்டனள்
 களிப்புடன் உமை காக்கவே!

'உன் அருமைப் பிள்ளைகளின் அற்புதச் சண்டையை நீயே பார்!" என்றார் பரமசிவனார். இதைக் கற்பனைக் கண்கொண்டு பார்த்த சிவனடியார், இந்தப் பிள்ளைச் சண்டையைப் பெரிய பாட்டாகப் பாடிவிட்டார்.


கற்பின் செல்வி
கண்ணகி
கதை:
படம்: பாலு
3
பிரமாதம் மாதவி பிரமாதம்! உனது ஆட்டம் நன்றாக இருந்தது. இன்று முதல் நீ 'தலைக்கோலி' மாதவி என அழைக்கப் படுவாய். இந்தா, 1008 பொற்காசுகள் மதிப்புடைய இந்தப் பச்சை மாலையை பரிசாகப் பெற்றுக்கொள். நாட்டிய உலகில் நீ மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்
மாதவியின் தாய் சித்ராபதி— மறுநாள் கூனியிடம்
இந்த பச்சை மாலையை 1008 பொற்காசுகளுக்கு விற்றுவா. மாலையை வாங்குபவரையும் வீட்டிற்கு அழைத்துவா
மாதவிக்கு அரசனால் பரிசளிக்கப்பட்ட மாலை இது. இதனை 1008 பொற்காசுகள் கொடுத்து வாங்குபவர் இங்கு யாரும் உண்டா?
கோவலன் மாலையை வாங்கிக்கொண்டான்
மாதவியைப் பார்க்க நல்ல அருமையான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது
தொடரும்..

இலக்கிய அரங்கம்

டாக்டர் இரா. தண்டாயுதம்

மு. தமிழ்ச் செல்வன்,
கோலசிலாங்கூர்

கே: சைவத் திருமுறைகள் பன்னிரண்டு என்கிறார்களே, அவை யாவை? தேவாரம் யார் பாடிய பாடல்களின் தொகுப்பு?

ப: திருமுறைகள் பன்னிரண்டில் ஞானசம்பந்தர் பாடியதிருப்பதிகங்கள்முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பெற்றுள்ளன. அப்பர் பாடிய திருப்பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறும் திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளன. சுந்தரர் பாடிய திருப்பதிகங்கள் ஏழாம் திருமுறையாகவகுக்கப்பெற்றுள்ளன. மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் திருச்சிற்றம்பலக் கோவையாரும் எட்டாந் திருமுறையாக வகுக்கப் பெற்றுள்ளன. திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடிய திருவிசைப் பாக்களும் திருப்பல்லாண்டும் ஒன்பதாம் திருமுறையில் அடங்கியுள்ளன. திருமூலர் பாடிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகப் போற்றப்படுகிறது. காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமாள் நாயனார் பாடிய பிரபந்தங்கள் பதினோராம் திருமுறையாகவும், சேக்கிழாரின் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவும் வகுக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் முதலேழு திருமுறைகளுக்கும் தேவாரம் என்ற பெயரும் உண்டு.

இரா வேலப்பன்,
அலோர்ஸ்டார்

கே: அகிலன், ஞானபீடப் பரிசை தம்முடைய எந்த நாவலுக்காகப் பெற்றார்?

ப. "சித்திரப்பாவை" என்ற நாவலுக்காகவே அகிலன் இந்தியாவின் தலைசிறந்த இப்பரிசினைப் பெற்றார்.

மா. கலையரசன், பினாங்கு

கே: பாரதிதாசன் தம்முடைய கவிதைகளால் பாரதியாரை விஞ்சிவிட்டதாக என்னுடைய நண்பர் கூறுகிறார். தங்கள் கருத்தென்ன?

ப: இருவரும் நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலாக்கள். ஒருவர் மென்மையாகத் தட்டித் துயிலெழுப்பப் பார்த்தார். மற்றவரிடம் கடுமை சற்று அதிகம். பாரதி அடிமை விலங்கொடித்தார். அவருக்குத் தாசன் நமக்கு நாமே இட்டுக்கொண்ட விலங்குகளை ஒடித்தார். கவிதையைப் பொறுத்தமட்டில் ஒருவரது முல்லை என்றால், மற்றவரது மல்லிகை. இவற்றில் எது தாழ்ந்ததென்பது?

க. சுப்பிரமணியம்,
கோலாலம்பூர்

கே. இரட்டைக் காப்பியம் என்பவை யாவை? தமிழில் பெருங்காப்பியம் சிறுகாப்பியம் என்ற பாகுபாடு உண்டா?

ப: சிலப்பதிகாரமும் மணிமேகலையுமே இரட்டைக் காப்பியங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. கதைத் தொடர்பால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.

பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்ற பாகுபாடு தமிழிலும் உண்டு. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்தும் பெருங்காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. சூளாமணி, உதயணகுமார காவியம், யசோதா காவியம், நீலகேசி, நாககுமார காவியம் ஆகிய ஐந்தும் சிறுகாவியங்கள்.

வே. நாராயணசாமி,
கோலாலம்பூர்

கே: தொல்காப்பியத்திற்கு முன்னால் தமிழிலக்கிய நூல்கள் இருந்தனவா?

ப: இலக்கியம் தோன்றி நெடுநாட்கள் கடந்த பின்பு இலக்கணம் தோன்றுவது மரபு. எள் இல்லையேல் எண்ணெய் இல்லை; இலக்கியம் இன்றேல் இலக்கணம் இல்லை. இம்முறையில் நோக்கும்போது, தொல்காப்பியம் ஒரு முழுமையான இலக்கணம். இத்தகைய ஓர் இலக்கண நூல் தோன்ற இலக்கியம் எந்த அளவிற்குச் சிறந்திருக்க வேண்டும் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். நாம் செய்த தீவினை, அவை நமக்குக் கிடைக்கவில்லை. சங்ககாலத் தொகை நூல்களில் காணப்படும் பல பாடல்கள் தொல்காப்பியத்திற்கு முந்தியவை எனப் பல அறிஞர்கள் கருதுகிறார்கள்.

மா. பரமசிவம், ஜோகூர்பாரு

கே: தமிழ் இலக்கணத்தை நன்கு புரிந்துகொள்ளத் துணை செய்யும் நூல் ஒன்றைக் கூறுங்களேன்.

ப: பிழையின்றி எழுதுவதற்கு அ. கி. பரந்தாமனாரின் "நல்ல தமிழ் எழுத வேண்டுமா?" என்னும் நூல் பயன்படும். இத்துடன் நின்றுவிட்டால் போதாது. நல்ல தமிழில் பல்வேறு துறைகளில் எழுதப்பட்ட நூல்களையும் நிறையப் படிக்கவேண்டும். 'செந்தமிழும் நாப்பழக்கம்" என்பதுபோல, நிறையப் படிக்கும் பழக்கம் பிழையின்றி எழுதத் துணை செய்யும்.

சு. நடராஜா, ஈப்போ

கே: வேதநாயகம் பிள்ளை, வேத நாயக சாஸ்திரிகள் வேறு வேறானவர்களா?

ப: ஆம், வேறு வேறானவர்களே. வேதநாயகம் பிள்ளை 'பிரதாப முதலியார் சரித்திரம்" முதலிய நூல்களை எழுதியவர். வேதநாயகம் சாஸ்திரிகள் 'பெத்லகேம் குறவஞ்சி"'சென்னைப் பட்டணப் பிரவேசம்' என்ற நொண்டி நாடகம் முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

தேவை

மா. இராமையா

காலை நான்கு மணிக்குப் பிடித்த கனத்த மழை ஆறு மணி வரை ஓயவில்லை. வேலைக்குப் போக எழுந்தவர்கள் மீண்டும் போர்வைக்குள் சுருண்டுகொண்டனர்.

தலைமாட்டில் வைத்திருந்த அலாரம் ஒலித்ததும் எழுந்துகொண்ட அஞ்சுகம் தன் கணவர் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு உறங்குவதைப் பார்த்துத் தானும்படுத்துக்கொண்டாள்.

நல்ல குளிர்! போர்வையின் கதகதப்பு இன்பமாக இருந்தது. இருந்தாலும் வழக்கமாக ஐந்து மணிக்கு எழுந்து பழக்கப்பட்டுப் போன அஞ்சுகத்துக்கு உறக்கம் வரவில்லை. போர்வைக்குள் வெறுமெனே படுத்திருந்தாள்.

மழை ஆறு மணிக்குப் பிறகுதான் ஓய்ந்தது.

அஞ்சுகம்படுக்கையைவிட்டு எழுந்து வந்து வெளியில் பார்த்தாள். ஆள் நடமாட்டமே இன்றி அந்த "லயங்காடு" வெறிச்சோடிக் கிடந்தது. ஆனாலும் எல்லாரும் எழுந்துகொண்டு விட்டதற்கான அறிகுறிகள் தென்பட்டன. பக்கத்து வீட்டில் என்னவோ பொரிக்கும் வாசம் வந்து அவள் மூக்கை அடைத்தது.

"புள்ளே அஞ்சுகம்... சீனக் கடைக்குப் போய் ரெண்டு கட்டு மீ வாங்கி வந்து பிரட்டு" என்று படுக்கையில் யில் இருந்தவாறே குரல் கொடுத்தார் மண்டோர் மாரியப்பன்.

அந்தக் குளிருக்கு ஏதாவது உறைப்பாகச் சாப்பிட்டால் நன்றாக இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது.

முன்னெச்சரிக்கையாக கையில் குடையை எடுத்துக்கொண்டு சீனக் கடைக்குச் சென்ற அஞ்சுகம் இரண்டு கட்டு மீயும் காய்ந்த ஊடானும் கிச்சாப்பும் வாங்கி வந்து மீ பிரட்டினாள். அதன் மணம் மாரியப்பனைப் படுக்கையில் இருக்கவிடவில்லை.

"என்ன புள்ளே... ராத்திரி பெஞ்ச மழைக்கு ஆற்றிலே வெள்ளம் கரை புரண்டு ஓடுமில்லே" என்றார் மாரியப்பன்.

"ஆமாம் தே... பூமியும் நல்லா அலற நனைஞ்சிருக்கும். வெற்றிலைக் கொடிக்காலை இறக்கிப் போட இதுதான் நல்ல நேரம்" பிரட்டின மீயைத் தட்டில் போட்டுக் கொண்டு வந்து அவர் முன்னே வைத்தாள் அஞ்சுகம்.

"சரி, நீயும் கொஞ்சம் மீயைச் சாப்பிட்டுக்க. ரெண்டு பேரும் போயிட்டு வருவோம்" என்றார் மாரியப்பன்.

அவர் தட்டில் மீந்திருந்த மீயை அவசர அவசரமாக அள்ளி வாயில் போட்டுக்கொண்டிருந்த போது வெளியிலிருந்து குரல் கேட்டது.

"அண்ணே... மண்டோர் அண்ணே..."

"விடிஞ்சதும் வியாததுமா காலையிலேயே கடன் கேட்க வந்துவிட்டான்" என்று வாய்க்குள் முனகிக் கொண்டே வெளியில் வந்தார் மாரியப்பன்.

அவர் கீழே வேலை செய்யும் செல்லமுத்து பல்லெல்லாம் வெளியில் தெரிய நின்றிருந்தார்.

"ஓ... நீங்களா... நான் யாரோன்னு பார்த்தேன். வாங்க, வாங்க உள்ளே வந்து உட்காருங்க" என்றார் மண்டோர் மாரியப்பன்.

செல்லமுத்து தயங்கித் தயங்கி ஐங்கடியில் கிடந்த வாங்கில் அமர்ந்தார்.

மாரியப்பனிடம் அவருக்கு நிரம்ப மதிப்புண்டு. காரணம் அவர்தான் அந்தத் தோட்டத்தில் பெரிய கங்காணி. கணவன் மனைவி இரண்டு பேர் தான் என்பதால் கையில் "கொஞ்சம்" வக்கும் இருந்தது. "தட்டுக் கெட்டுப்" போகும் போது எல்லாரும் அவரிடம் தான் கைமாற்றுகப் பணம் வாங்கிச் செல்வது வழக்கம்.

இரண்டு பேருடைய சம்பாத்தியத்தைப் பங்கு போட அவர்களுக்கு குழந்தை குட்டிகள் இல்லை. இந்த நிலையிலும் அவர்கள் உழைப்பதற்கு சளைக்கவில்லை. அவர்களுக்கு தோட்டத்தை அடுத்து ஓடும் ஆற்றோரம் கொல்லை ஒன்றிருந்தது. அதில் ஏராளமான வாழை மரங்களும், கத்தரிச் செடிகளும் ஐம்பதுக்கும் அதிகமான வெற்றிலைக் கொடிக்கால்களும் இருந்தன.

மழைத் திட்டி ஏற்படும்போது கணவனும் மனைவியும் கொல்லைக்குப் போய்விடுவார்கள் என்பதால் காலையிலேயே அவரைத் தேடிக்கொண்டு வந்துவிட்டார் செல்லமுத்து.

"என்னங்க செல்லமுத்து .. என்ன விசயம்? காலையிலேயே இந்தப் பக்கம் .." என்றிழுத்தார் மாரியப்பன். கடன் கேட்கத்தான் வந்திருக்கிறார் என்பது அவர் எண்ணம்.

"இல்லேண்ணே...அன்னிக்குச்சொன்னேனே, பையன் விசயமா..." என்று வார்த்தைகளை மென்று குதப்பித் தள்ளினார் செல்லமுத்து.

"ஓ... அதுவா, இன்னிக்கு வேலையும் இல்லே போய்ப் பார்க்கலாமே" என்றார் மாரியப்பன்.

"அதுக்குத்தானே வந்தேன்" என்றார் செல்லமுத்து.

"புள்ளே அஞ்சுகம்...நானும் செல்லமுத்துவும் பட்டணம் வரை போயிட்டு வர்றோம். கொல்லைக்கு நாளை பின்னே போயிக்கலாம்" உள்ளே சென்று உடை மாற்றிக்கொண்டு வந்தார் மாரியப்பன்.

"திரும்பி வரும்போது நல்ல வஞ்சனை மீனு ஒரு கட்டி வாங்கி வாங்க" என்றாள் அஞ்சுகம்.

இருவரும் சீனர் கடைக்கருகில் வந்து டாக்சிக்காகக் காத்திருந்தனர். மழைத் திட்டியாதலால் இன்னும் சிலரும் பட்டணம் போகக் காத்திருந்தனர்.

தோட்டத்து வாடகைக்கார் மாரியப்பன்—செல்லமுத்தோடு இன்னும் இருவரையும் ஏற்றிக்கொண்டு மலாக்காவை நோக்கிப் புறப்பட்டது.

செல்லமுத்துவின் மனத்தில் மகிழ்ச்சி கவிழ்ந்திருந்தது. எம்.சி.இ. படித்து விட்டு வீட்டோடு இருக்கும் தன் மகனுக்கு மாரியப்பன் மூலம் தான் பார்க்கப்போகும் கவுன்சிலர் செல்வமணி மூலம் நல்ல உத்தியோகம் கிடைத்து விடும் என்ற நம்பிக்கைதான் அதற்குக் காரணம்.

கவுன்சிலர் செல்வமணி மாரியப்பனுக்கு நிரம்பவும் வேண்டியவர். போன தேர்தலின்போது யாங் பெர்ஹோர்மாட் செல்வமணி எத்தனை முறை மாரியப்பன் வீட்டுக்கு வந்துவிட்டார். அவர் மாரியப்பனைத் தேடிக்கொண்டு வரும் போதெல்லாம் அவர் வீட்டில் சாப்பிடாமல் போகமாட்டார். ஒரு பெரிய மனிதர் —அதிலும் கவுன்சிலராகப் போகிறவர் சாதாரண தோட்டத்து மண்டோர் வீட்டிற்கு வருவதும் சரளமாகப் பழகுவதும், சமமாக இருந்து உண்பதும், பிறருக்குப் பொறுமையாகக்கூட இருந்தது.

அவர் போட்டிக்கு நின்ற தொகுதியில் அந்தத் தோட்டத்து மக்களின் ஓட்டு மொத்தமான வாக்குகள் தாம் வெற்றியை நிர்ணயிக்கக் கூடியவையாக இருந்தன, அந்த வாக்குகள் அனைத்தையும் சிதறாமல் கொண்டு வந்து சேர்க்கும் திறமையும் செல்வாக்கும் அவரிடம்தான் இருந்தன. அவர் சொன்னால் சொன்னதுதான். யாரும் தட்டிப் பேசமாட்டார்கள்.

மாரியப்பனுக்கு அந்தத் தோட்டத்திலிருக்கும் செல்வாக்கை நன்கு புரிந்து கொண்ட செல்வமணி அவருடன் ஒட்டி உராய்ந்து பழகியதில் வியப்பில்லை தான்.

மாரியப்பனும் அடிக்கடி அவர் வீட்டுக்கு சென்று வருவார். தேர்தல் வந்தது மாரியப்பனுக்கா அல்லது செல்வமணிக்கா என்று சந்தேகப்படுமளவிற்கு அவர் சுறுசுறுப்பாக இயங்கினார். அவருடைய முயற்சி வீண் போகவில்லை. செல்வமணி வெற்றி வாகை சூடினார். வாக்குகள் எண்ணப்பெற்று வெற்றியை அறிவித்ததும் செல்வமணி ஓடிவந்து மாரியப்பனைத்தான் முதலில் கட்டிப் பிடித்துக் கொண்டார்.

கார் ஓரிடத்தில் குலுங்கிய போது செல்லமுத்து தன் நினைவுக்கு வந்தார்.

"ஏங்க செல்லமுத்து... பையனுக்குத் தோட்டத்திலே வெளிகாட்டுக் கிராணி வேலை வாங்க முயற்சி பண்ணிருக்கலாமே" என்றார் மாரியப்பன்.

"அவன் தோட்டமே பிடிக்கலேங்கிறான். வாழ்க்கையிலே முன்னேறணும்னு பட்டணத்துக்குத்தான் போகணும்னு சொல்றான்" என்றார் செல்லமுத்து.

"ஆமாம்... பையன் சொல்றதும் சரிதான் செல்லமுத்து. நாம் பரம்பரையா தோட்டத்திலே இருந்து என்ன முன்னேற்றத்தைக் கண்டோம்? நாலு பெரிய மனிதர்களோடு பழகுற வாய்ப்பு இருக்கா? இல்லே நம்ப புள்ளைங்க படிச்ச படிப்பை அபிவிருத்தி செய்துக்கத்தான் வழியிருக்கா... விடிஞ்சா முழிச்சா இந்தக் கித்தா மரத்தைத் தான் பார்த்துக்கிட்டு இருக்கவேண்டியிருக்கு. கவர்மெண்டு வேலை அது இது எங்கிறதெல்லாம் பட்டணத்திலேதான்" என்று தான் கண்டதையும் கேட்டதையும் சொல்லி வைத்தார் மாரியப்பன்.

"என் மகனும் இப்போ பட்டணத்திலே ஏதாவது கவர்மெண்டு வேலை செய்யிணும்தான் ஆசைப்படுறான். அதுக்கு நீங்கதான் வழி செய்யணும்" என்றார் செல்லமுத்து.

இவர்கள் இருவரும் பேசிக் கொண்டதை மற்ற இருவரும் செவிமெடுத்துக் கொண்டே வந்தனர். காரோட்டி மலாய்க்காரர். அவருக்குத் தமிழ் தெரியாது.



"நம்ப கவுன்சிலர் இருக்கிறாரே. அவருக்கு மேலே இருந்து கீழே வரைக்கும் எல்லாரையும் தெரியுமாம். அவர் மனம் வச்சா எதுவும் நடக்குமாம்" என்று "மாம்" போட்டார் மாரியப்பன்.

"எதுக்கு நீங்க ஒரு வார்த்தை சொன்னீங்கன்னா அவர் கேட்பாரு"

"ஆகட்டும் செல்லமுத்து... நான் சொல்லாமலா. எப்படியும் உங்க மகனு-க்கு ஒரு கவர்மெண்டு வேலையே வாங்கித் தரச் சொல்றேன்" முத்தாய்ப்பு வைத்துப் பேசினார் மாரியப்பன்.

கார் மலாக்கா பட்டணத்து எல்லைக்குள் நுழைந்தது.

காரை நேரே கவுன்சிலர் செல்வமணியின் வீட்டிற்கு விடச்சொன்னார் மாரியப்பன். அவருடைய பெருமையைக் காட்டிக் கொள்ளவேண்டாமா?

கார் செல்வமணியின் வீட்டின் முன் நின்றது. செல்லமுத்து டாக்சிக்காரனுக்கு வாடகையைக் கொடுத்தார். கார் புறப்பட்டுவிட்டது.

இருவரும் இரும்பு கேட்டின் அருகிற் சென்றனர். கேட்டு பூட்டியிருந்தது. செல்வமணியின் கார் காரேஜில் இருந்ததால் அவர் வீட்டில்தான் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர். போர்டிகோவில் புதிதாக வேறு ஒரு காரும் நின்றிருந்தது.

இருவர் இரும்புக் கேட்டுக்கு அருகே நிற்பதைக் கண்டுவிட்டு வேலைக்காரன் ஓடோடி வந்தான்.

"அய்யாகிட்டே மாரியப்பன் வந்திருக்கிறேன்னு போயி சொல்லு" என்று வேலைக்காரனிடம் அதிகாரமாகச் சொன்னார் மாரியப்பன். வேலைக்காரனுக்கும் அவரை முன்பே தெரியும்.

திரும்பிச் சென்ற வேலைக்காரன் ஐந்து நிமிடத்திற்குப் பிறகு மீண்டும் அங்கு வந்தான்.

"கோலாலம்பூரிலே இருந்து பிரமுகர்கள் வந்திருப்பதாலே உங்க ரெண்டு பேரையும் போயி ஆபீசிலே காத்துக்கிட்டு இருக்கச் சொன்னாரு" என்றான் வேலைக்காரன். அவ்வளவுதான், அவன் அவர்கள் பதிலுக்குகூடக் காத்திராமல் போய்விட்டான்.

மாரியப்பன் மனதில் என்னவோ நறுக்கென்று பாய்வது போன்றிருந்தது. செல்லமுத்து அவர் முகத்தைப் பார்த்தார். அங்கே எந்தச் சலனமும் இல்லை. மாரியப்பன் தன்னைச் சமாளித்துக் கொண்டார்.

'துணை மந்திரிங்க யாராவது வந்திருப்பாங்க. நாம் இங்கே போய்த் தொல்லை கொடுக்கக்கூடாது. வாங்க ஆபீசுக்குப் போவோம்" இருவரும் நடந்தனர்.

செல்வமணியின் அலுவலகம் பட்டணத்தின் மையத்தில் இருந்தது. அவருடைய விட்டிற்கும் அதற்கும் ஏறத்தாழ மூன்று மீட்டர் தூரம் இருக்கலாம். அந்த விடும் ஓர் ஒதுக்குப்புறமாக இருந்ததால் போக்குவரத்து வசதிகள் குறைவாக இருந்தன.

இருவரும் நடந்தே செல்வமணியின் அலுவலகத்தை வந்தடைந்தனர்,

அவரைச் சந்திப்பதற்காக இன்னும் சிலர் அங்கே காத்திருந்தனர். ஐந்தோடு ஆறாக அவர்களும் அங்கே கிடந்த பெஞ்சில் அமர்ந்து கொண்டனர்.

அவர் வருவதற்கு ஏறக்குறைய இரண்டு மணி நேரமாயிற்று.

பன்னிரண்டு மணியளவில் அவருடைய கார் அலுவலகத்தின் முன் வந்து நின்றது. செல்வமணி மட்டும் காரை விட்டு இறங்கி வந்தார். கோட்டும் சூட்டும் போட்ட ஒருவர் காரிலேயே இருந்தார்.

அங்கு அமர்ந்திருந்தவர்களிடையே ஒருவித பரபரப்பு! நீண்ட நெடு மூச்சு விட்டவர்களும் உண்டு. இரண்டு மணி நேரம் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பது அவ்வளவு இலகுவா என்ன?

காரை விட்டிறங்கி நேரே தன் அறைக்குச் சென்ற கவுன்சிலர் செல்வமணி தன்னுடைய 'ஜேம்ஸ் பாண்ட்" பேக்கைத் தூக்கிக் கொண்டு மீண்டும் காருக்குப் போய்க்கொண்டிருந்த போது தான் வந்திருக்கிறேன் என்பதைக் காட்டிக் கொள்ள எழுந்து நின்று கரம் குவித்தார் மாரியப்பன். செல்வமணி திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. நேரே காருக்குச் சென்றுவிட்டார்.

எல்லாரும் திகைத்துப் போய்விட்டார்கள்.

அங்கு வந்த அலுவலகப் பையன் 'அய்யாவுக்கு இன்னிக்கு ஓய்வே இல்லையாம். இன்னொரு நாளைக்கு வரச்சொன்னார்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.

"வாங்க மண்டோர் போகலாம்" என்று செல்லமுத்து அவரை உசுப்பிய பிறகுதான் மாரியப்பனுக்குச் சுயநினைவு வந்தது.

அவருடைய தேவைக்கு இன்னும் ஐந்தாண்டுகள் இருப்பதை அவர் மறந்து தான் போயிருந்தார். தேவையின் பொருளும் அப்போதுதான் அவருக்குப் புரிந்தது. ✱

நல்ல பிள்ளை பிறக்காதது ஏன்?

அந்தக் காலத்தில் கர்ப்பிணிகள் ஓய்வு நேரத்தில் நல்ல பாடங்களைப் படித்து வந்தார்கள். கோவில் குளத்திற்குத் தவறாமல் சென்று வந்தார்கள். வீரம் பொருந்திய கதைகள்; கற்பினைக் காத்த கதைகள்; சோம்பல் ஒழித்த கதைகள் என்று பல அறிவூட்டும் கதைகளைக் கேட்டும், சொல்லியும் வந்தார்கள். அதனால்தான் நல்ல பல அறிஞர்களையும், கவிஞர்களையும், பக்திச் செம்மல்களையும் நாம் கண்டோம்.

இன்று அப்படியல்லவே! கர்ப்பிணிகள் சினிமாக்காரர்களையே நினைத்துக் கொண்டிருப்பதோடு தொலைக்காட்சியில் குத்துச் சண்டை, கத்திச் சண்டை, துப்பாக்கிச் சண்டை, கொலை கொள்ளை சம்பந்தப்பட்ட கதைகள் ஆகியவற்றை ரசிப்பதிலேயே முழுக்கவனம் செலுத்துகின்றனர். சில வேளைகளில் பக்கத்து விட்டுச்சண்டைவேறு! இந்த லட்சணத்தில் நல்லபிள்ளை எங்கே பிறப்பான்.

சுவாமி பூமானந்த தீர்த்தர உரையிலிருந்து கேட்டவர்:
கௌரிமனோகரி



தொலைக்காட்சி

28-4-77 வியாழன் மாலை 5.30க்கு இந்திப்படம்: ''ஜூரே கா குலாம்''

5-5-77 வியாழன் மாலை 5.30க்குத் தமிழ்ப் படம்: சுந்தரராஜன், ரவிச் சந்திரன், மனோகர், சகுந்தலா நடித்த மாடர்ன் தியேட்டர்சின் ''ஜஸ்டிஸ் விஸ்வநாதன்''. இசையமைப்பாளர் வேதா இறுதியாக இசையமைத்த படம் இது.

8-5-77 ஞாயிறு மாலை 4.00க்கு இந்திப் படம்: ''சரிப் டாக்கு''

வானொலி

நாடகம்

(சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2-00க்கு ஒலிபரப்பாகும்)

30-4-77 பத்தாங் பெர்ஜுந்தை சுப்பிரமணியம் சக்ரவர்த்தி எழுதிய ''இருள் விலகுகிறது''

7-5-77 கிள்ளான் ராஜரத்தினம் எழுதிய ''அன்பத்தின் பிடியில்''

தொடர் நாடகம்

[திங்கட்கிழமை தோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகும்]

தலைநகர் எஸ். வைரக்கண்ணு எழுதும் ''உன்னை நான் காண்பேனா?''

2-5-77 ''கனவுகளே ஆயிரம் கனவுகளே'']ஐந்தாம் பகுதி]

9-5-77 ''கடவுள் தந்த இரு மலர்கள் [ஆறும் பகுதி]

மனச் சுழல்

[ஞாயிறுதோறும் காலை மணி 10.30க்கு ஒலிபரப்பாகும்]

1-5-77 தலைநகர் ஏ. பத்துமலை எழுதிய ''சட்டத்தின் பிடியில்''

8-5-77 தலைநகர் மெ. அறிவானந்தன் எழுதிய ''ஓநாய்''. பல லட்சம் வெள்ளி பெறுமானமுள்ள ஓநாய்ச் சிலையொன்றை அடைய பலர் முயலுகின்றனர். முயன்றவர் வர்களின் முடிவு பயங்கரமாக முடிகிறது.

ஒலிச்சித்திரம்

[சனிக்கிழமை தோறும் மாலை மணி 6-30க்கு ஒலிப்பரப்பாகும்)

30-4-77, 7-5-77 ஆகிய நாட்களில் இரு பகுதிகளாகக் கமலஹாசன், ஜெய் சித்ரா, நடித்த ''குமார விஜயம்'' ஒலியேறும்.



காதலுக்கு முன் ஒரு மோதல் நடப்பது தமிழ்ப்படங்களில் ஒரு முறை. முத்துராமனும் ஜெயலலிதாவும் மோதிக்கொள்வது "கணவன் - மனைவி"க்காக!
(பாத்திமா பிலிம்ஸ் வெளியீடு)

திரை ஒலி

]திங்கட்கிழமைதோறும் இரவு மணி 10-00க்கு ஒலிபரப்பாகும்]

2-5-77 ''மகராசி வாழ்க'' படத்திலிருந்து காட்சி விளக்கங்களோடு தொகுக்கப்பட்ட பாடல்கள் ஒலியேறும். இசை: சங்கர்-கணேஷ்.

9-5-77 ''கலங்கரை விளக்கம்'' படப் பாடல்கள் ஒலியேறும். இசை விஸ்வநாதன்-ராமமூர்த்தி

சிறப்பு நாடகம்

விசாக தினத்தை முன்னிட்டு 2-5-77ல் சந்திரா சண்முகம் எழுதிய ''பகவான் காட்டியபாதை'' ஒலியேறுகிறது. இதில் எம். எஸ். சுவாமிநாதனின் சிறப்பான நடிப்பை ரசிக்கலாம். தயாரிப்பு எல். ராமன்.

அறிவிப்பாளர் விருப்பம்

[ஞாயிறுதோறும் மாலை மணி 6-31க்கு ஒலிபரப்பாகும்]

1-5-77ல் ''திருமதி கமலா தேசிகன்'' தனக்கு விருப்பமான நிகழ்ச்சி ஒன்றினைப் படைப்பார்.

8-5-77ல் ''குமாரி நாச்சியா''வின் விருப்ப நிகழ்ச்சியினை நேயர்கள் கேட்கலாம்.

இதர நிகழ்ச்சிகள்

1-5-77 காலை ஒன்பது மணிக்குத் தொழிலாளர் தின சிறப்பு நிகழ்ச்சியாக ஒலியேறுகிறது. ''இளைஞர் உலகம்''. அதில் ''தான் தோன்றித் தனமாகச் சமுதாயத்தைவிட்டுத் தனித்து வாழும் இளைஞர்களைச் சமுதாயத்துடன் எவ்வாறு இணைப்பது? என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்றும் இடம் பெறுகிறது.

1-5-77 காலை 10-00 மணிக்கு ஒலியேறும் ''பூச்சரம்'' நிகழ்ச்சியில் நடிகை மஞ்சுளாவுடன் நடத்திய சந்திப்பு இடம்பெறும்.

கண்ணோட்டம்

வெள்ளிக்கிழமைதோறும் மாலை மணி 6-05க்கு ஒலிபரப்பாகும் ''சமுதாய விதி'' எனும் நிகழ்ச்சி, புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டிருக்கிறது. அதில் கடந்த 8-4-77ல் இடம் பெற்ற ''மாடி விட்டு முத்துவின் குடும்பம்'' மிக நன்று. முத்து காணும் கனவு "அற்புதமாக இருந்தது. அன்னக்கிளி உன்னைத் தேடுது" என்ற பாடலும் உரையாடல்களும் கேட்பது வானொலி நிகழ்ச்சியா அல்லது சினிமா ''சவுண்ட் ட்ராக்கா'' என்ற பிரமிப்பை எனக்கு ஏற்படுத்தியது.

—எஸ்கதிர்வேலு — கம்பார்

நையாண்டிமேளம்

ஒற்றைக்கொம்பன்



'ஆவன்னா'

"என்ன ஓய்! எங்கோ கிளம்பி விட்டீர் போலிருக்கிறதே! அதிகாலையிலேயே அப்படி என்ன அவசரம்?"- கட்டையான குரலொன்று என்னைத் தடுத்து நிறுத்தியது.

ஒற்றையடிப் பாதையின் ஓரத்தில் கிளைகள் முறிந்துபோன முருங்கை மரத்தின் அடியில் சுகமாகப் படுத்துக்கொண்டு. அசைபோட்டபடி என்னைப் பார்த்தது ஒற்றைக் கொம்பன்.

"பட்டணததில் ஒருவரைப் பார்க்கவேண்டும்; மிகவும் முக்கியமான வேலை!" என்று மறுமொழி சொல்லிவிட்டு நடக்க எத்தனித்தேன்.

"அப்படி என்ன ஓய் அவசரமான வேலை? ஓய்வு, ஒழிச்சல் இல்லாமல் உழைத்துக் கடைசிக் காலத்தில் எதை வாரிக் கட்டிக்கொண்டு போகப் போகிறீர்!" என்று இடக்காகக் கேட்டது அந்த நோஞ்சான் ஆடு.

ஒற்றைக்கொம்பனைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்; அதன் பழக்கமே இதுதான்.

கட்டிக் கணக்கில் இறைச்சி வாங்கினால் தன் பெரிய குடும்பத்துக்குக் கட்டிவராது என்று போன தீபாவளிக்கு முந்தின தீபாவளி ரொக்கத்தைக் கொடுத்து அதை ஓட்டிக்கொண்டு வந்தார் மளிகைக்கடை பரமசிவம். தீபாவளிக்கு முதல்நாள். அதன் கழுத்தில் கத்தி ஏறப்போகும் நேரம் பார்த்துப் பரமசிவத்தின் மூத்த பெண்ணும் மாப்பிள்ளையும் வந்து சேர்ந்தார்கள். அவர்களோடு பெரிய வாழையிலைப் பொட்டலத்தில் நிறைய இறைச்சியும் வந்து சேர்ந்தது. ஒற்றைக்கொம்பன் உயிர் தப்பியது.

அடுத்த தீபாவளிக்கு ஆகட்டும் என்று. தன்னிட்மிருந்த இரண்டு, மூன்று ஆடுகளோடு அதை விட்டுவிட்டார் பரமசிவம். அதற்குக் கவலை விட்டுப் போயிற்று. வேளாவேளைக்குக் கிடைத்ததைத் தின்று, ஊரைச் சுற்றிக்கொண்டு திரிந்தது அது. எல்லாரையும் எடுத்தெறிந்து பேசும். வாயடி அடிப்பதில் சளைப்பதில்லை. ஏற்கனவே ஒரு. கொம்பு ஒடிந்துபோய் இருந்தது; மீதமிருந்த கொம்பும் மழுங்கிக் கிடந்தது. அந்த ஒற்றைக் கொம்பை ஆட்டிக்கொண்டு தன் இனத்தோடேயே வலுச்சண்டை, வம்புச் சண்டை என்று போவதை அது வழக்கமாக்கிக்கொண்டது. கொஞ்சங்கூடப் பொறுப்புணர்ச்சி இல்லை. குடும்பத்தைக் கவனிப்பதில்லை. போதாக்குறைக்குக் குடி வேறு! மட்டத்திலும் படுமட்டமான சரக்கைக் கண்மண் தெரியாமல் குடித்துவிட்டுக் கண்டபடி உளறித் திரிவதும் கண்டகண்ட இடங்களில் விழுந்து கிடப்பதும் சர்வ சாதாரணமாகிவிட்டது. ஊருக்குள் அதற்கு மிகவும்கெட்ட பெயர்; கெட்ட் பெயர் என்பதைவிடக் கேவலமான பெயர் என்பதுதான் சரியாகப் பொருந்தும். இவற்றையெல்லாம் ஒற்றைக்கொம்பன் உணர்ந்து திருந்தவேண்டுமே என்பதற்காகப் பலர் பல மாதிரி எடுத்துச் சொன்னார்கள்; ஆனால் அது திருந்தியபாடில்லை.

போன தீபாவளிக்கு அதன் கதை தீர்ந்துபோகும் என்றுதான் எல்லாரும் நினைத்தார்கள். ஆனால் தீபாவளிக்கு ஒரு வாரம் இருக்கையில் பரமசிவத்தின் பாட்டி போய்ச் சேர்ந்தாள். குடும்பத்தில் தீபாவளிக் கொண்டாட்டம் தடைப்பட்டது; அது மீண்டும் தப்பித்துக் கொண்டது.

"நான் கேட்டது காதில் விழவில்லையா! ஆடு திருடின கள்ளன் மாதிரி பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு நிற்கிறீரே!" என்று உரத்த குரலில் மறுபடியும் கேட்டது ஒற்றைக்கொம்பன்.

"உனக்கு என்ன, இதுவும் கேட்பாய், இன்னமும் கேட்பாய்! என் பிரச்சினைகள் எனக்கல்லவா தெரியும்!" என்றேன்.

"என்ன ஓய், பெரிய பிரச்சினையைக் கண்டுவிட்டீர்! எனக்கு இல்லாத பிரச்சினையா?"

"உனக்கு அப்படி என்ன பிரச்சினை?"

"கேளும், சொல்கிறேன்! குடும்பத்தில் நான் ஒன்றையும் கவனிப்பதில்லையாம்! தினசரி இதே பாட்டு! எப்போதும் நச்சரித்துக் கொண்டிருந்தால் எவனால் தாங்க முடியும்! நேற்றுப் பாரும் ஓய்! சாயந்தரம் வீட்டுக்கு வந்ததும் வராததுமாகப் பழைய பாட்டைப் பாட ஆரம்பித்துவிட்டாள் பெண்டாட்டி; பிள்ளைகளின் முணுமுணுப்பு வேறு! வழக்கமான சரக்கை நேற்றுக் கொஞ்சம் அதிகமாகவே போட்டிருந்தேன்; எப்போதும் கொடுக்கும் பூசையைவிட இரண்டு மடங்கு அதிகமாகவே கொடுத்தேன். எல்லாப் பிரச்சினைகளும் அப்படியே அடங்கிவிட்டன. இப்படிச் சமாளிப்பதை விட்டுவிட்டு நீர் என்னவோ அலட்டிக்கொள்கிறீரே!"

"உன் வழி எனக்கு ஒத்து வராது கொம்பா!"

"மூக்கு இருக்கும்வரை சளி இருக்கும் என்பதுபோல் உயிர் இருக்கும்வரை பிரச்சினைகளும் இருக்கும். அதற்காக நம்மை நாமே ஏன் வருத்திக்கொள்ள வேண்டும்? ஆவது ஆகட்டும் என்று விட்டுவிட்டு, என்னைப் போல் கவலையில்லாமல் இருக்கப் பழகிக்கொள்ளும் ஓய்!"

"இது சரியில்லை அப்பா. அறவே பொறுப்பில்லாமல் நடந்து கொள்கிறாயே! கண்டதைக் குடித்துக் கண்டபடி நடந்து. குடும்பத்தைக் கவனிக்காமல் இருக்கலாமா! இப்படியே இருந்தால் உன் உடம்பு எதற்கு ஆகும்? உன் குடும்பம்தான் என்ன ஆகும்?"

"அதையெல்லாம் பரமசிவம் பார்த்துக்கொள்வார் ஓய்! மரம் நட்டவன் தண்ணீர் ஊற்றாமலா போய்விடுவான்?" என்று அலட்சியமாகச் சொன்னது ஒற்றைக் கொம்பன்.

"சரி, சரி, இந்தப் பரமசிவமும் பார்த்துக்கொள்வார்; அந்தப் பரமசிவனும் பார்த்துக்கொள்வான்! நீ உன் பாட்டுக்கு வெறுமனே கையைக் கட்டிக்கொண்டு சும்மா இரு!" என்று பேச்சை முடித்துக்கொண்டு என் வேலையைப் பார்க்கக் கிளம்பினேன். ■

அடுத்த இதழில்
'மாலதி'
எழுதும்
தொடர்கதை

கனவுகள் பலகோடி

குறையோ இல்லையா?

குறைகூறும் மடல்களையும் இப்பகுதியில் வெளியிடுவீர்கள் என நம்புகிறேன்.
—தாரா எழிலழகன், சுங்கைவே

பயனுள்ள துணையமைச்சர்

ருக்குன் தெத்தாங்காவைப் பற்றித் துணை அமைச்சர் கூறிய விளக்கங்கள் பயனுள்ளவை.
—'ஆர்வி' ஜெயா, சுங்கை

சுதந்திரமாக எழுதுக

சொந்தப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து சுதந்திரமாக எழுதும் எழுத்துக்குத் தனி வலிமை உண்டு. —கலைச்சிற்பியன், பினாங்கு

தெளிவு! தெளிவு!

தமிழர் திருநாளின் அடிப்படைக்கொள்கைகள், நோக்கங்கள் எவ்வாறு இருக்கவேண்டும் எனத் தெள்ளத் தெளிவாக ஆசிரியர் விளக்கியுள்ளார். —இனியவன், கிள்ளான்

கொள்கையற்றோர்

பல பிரச்சினைகளையும் தாண்டிப் "புதிய சமுதாயம்" வெளிவந்துவிட்டது. கொள்கையற்றவர்கள் மனம் குமுறட்டும்.
—அ. முனுசாமி, போண்டோக் தஞ்சோங்

அகிலன் அகிலன்தான்

இதழுக்குப் பன்மடங்கு சுவை சேர்க்கிறது அகிலனின் தொடர்கதை.
—சி. மணியம், ரிஞ்சிங் தோட்டம்

காலத்தை வெல்லும்

நல்ல எண்ணமும் கொள்கை உறுதியும் கொண்ட நெஞ்சில் பிறக்கும் கருத்துக்கள் காலத்தால் வெல்ல முடியாத வலிமையைப் பெற்றுவிடும். —பரிதி, புக்கிட் ரோத்தான்

...1...

இதழ்கள் முதல்தரமாக விளங்குகின்றன.
—எம். எஸ். அப்துல் காதர் சுங்கைப்பட்டாணி

அறிமுகம்

எங்கள் தோட்ட மக்களுக்குப் "புதிய சமுதாயம்" இதழைப் பற்றிச் சொல்லி இருக்கிறேன்.
—என். குமரன் நாயர், புக்கிட் சிலாரோங் தோட்டம்

என்னைத் தூங்கவிடுங்கள்

மொக்கன் உண்மையில் என்னதான் ஆனான், உடனடியாக தெரிவியுங்கள்! தூங்கிப் பல இரவுகளாயிற்று. —வே. இராமு, ஈப்போ

நெய்க்கு அழுவானேன்!

கையில் வெண்ணெய் இருக்க, நெய்க்கு அலைந்தாற்போலக் கண்டபடி அலைந்தால் 'பிள்ளை வரம்' கிடைத்துவிடுமா என்ன?
—து. பாஸ்கரன், ஜொகூர்பாரு

கண்ணும் கருத்துமாக

இதழ் நல்ல கட்டுக்கோப்புடனும் அழகாகவும் அமைந்துள்ளது. எல்லாப் பக்கங்களையும் விடாது படித்து மகிழ்ந்தேன். ஆனால் மிகச் சிறிய எழுத்தில் போட்டுவிட்டீர்கள். படித்து முடிப்பதற்குள் கண்ணுக்கு நோவு உண்டாய் விட்டது. கருத்துச் சிறப்பால் அதனை நான் உணரவில்லை.
—சுப. திண்ணப்பன், அண்ணாமலை நகர்

சவால்

முதல் இரண்டு இதழ்களும் தமிழகப் பத்திரிகைகளுக்குச் சவால்விடும் வகையில் மிகவும் அருமையாக அமைந்துள்ளன.
—சி. கே. இராதாகிருஷ்ணன், சென்னை

அனுபவத்தின் பிரதிபலிப்பு

தங்கள் பத்திரிகைத்துறை அனுபவத்தின் பிரதிபலிப்பாக விளங்கும் "புதிய சமுதாயம்" இலக்கிய உலகுக்குச் சிறந்த முறையில் சேவை செய்ய வாழ்த்துகிறேன்.
—சி. ராஜப்பா, சென்னை

நம்புகிறேன்

மலேசியாவில் தரமான இலக்கிய ஏடு இல்லையே என்ற குறையைப் போக்குவதோடு புதிய சமுதாயம் உருவாவதற்கும் "புதிய சமுதாயம்" உழைக்கும் எனும் நம்பிக்கை எனக்குண்டு.
—மா. இராமையா, தங்காக்

அன்னை அருள் தருவாள்

மலேசியத் தமிழ்ச் சமுதாயத்திற்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக உங்களின் "புதிய சமுதாயம்" நீடு நின்று நிலைபெற்று வாழ அன்னை அபிராமியின் திருவருளை வேண்டுகின்றேன்.
—வீர. இரா. பெரி. பெரியகருப்பன் செட்டியார், சிங்கப்பூர்

இனிய அரவணைப்பு

சிங்கை— மலேசியத் தமிழ்ப்பெருமக்களின் இனிய அரவணைப்பு "புதிய சமுதாயத்"திற்கு என்றும் இருக்கும்.
—வலயன்வயல் எம். முத்து, சிங்கப்பூர்

தொடரும்

பழம் போக்கிலிருந்து புதியதொரு சமுதாயமாகத் தமிழர்கள் மாறத் தாங்கள் இதுகாறும் ஆற்றிய தொண்டு இனி "புதிய சமுதாயம்" மூலம் தொடரும் எனச் சமுதாயம் எதிர்பார்க்கிறது.
—நாரண. திருவிடச்செல்வன், கூலிம்

முன்னேற...

தமிழர் சமுதாயம் எதிர்காலத்தில் பொருளாதார ஏற்றங்காணவும் மற்ற துறைகளில் முன்னேற்றங் காணவும் ஆக்ககரமான படைப்புக்களைத் தொடர்ந்து எதிர்பார்க்கிறேன்.
—வே. ஏசையா, பினாங்கு

சிந்தனைமேடை

'கதிர்'

மலேசிய மருத்துவ சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஏ. ஏ. சந்தோஷம் வேலை ஓய்வுபெறும் வயதை 55லிருந்து 65க்கு உயர்த்தவேண்டுமென்று கோரிக்கை விட்டுள்ளார்.

இக்கோரிக்கையில் அர்த்தம் இருக்கிறது. ஆலோசிக்க வேண்டிய கருத்தாகும். தற்காலத்தில் 55 வயது ஒரு வயதாக இருக்கவில்லை. 55 வயது முடிந்துவிட்டது என்று வேலையினின்று நிறுத்தப்பட்ட பின்னும் உழைக்கும் பலத்தோடு பலர் இருக்கின்றனர்.

இடைவிடாது உழைத்த அவர்கள் மேற்கொண்டு உழைக்க ஆர்வப்படும் போது அவர்களுக்கு ஏற்ற வேலைகள் கிடைப்பது சிரமமாக உள்ளது.

வேலை செய்யும் வரை ஓரளவு குடும்பப் பிரச்னைகளைச் சமாளிக்க முடிந்த அவர்கள் வேலை முடிந்ததும் கடன்காரர்களாகவும், பயன்பட முடியாதவர்களாகவும் விடப்படுகின்றனர்கள்.

அதன் பிறகு அவர்கள் அடைகிற சிரமங்கள் அளப்பரியதாகும். அவர்களில் பலரின் வாழ்க்கை அதன் பிறகு சூன்யமாகிவிடுவதையும் காணுகின்றோம். அவர்களுக்குக் கிடைக்கிற ஓய்வு கால ஊதியமும் தற்போதுள்ள விலைவாசி நிலையில் போதுமானதாக இல்லை. பெரிய சம்பளக்காரர்கள் ஓரளவு சமாளிக்க முடியும். ஆனால் சாதாரண வேலைக்காரர்களின் ஓய்வு கால ஊதியம் ஒரு மனிதர் தேவைக்கே போதாதபோது குடும்பத்துக்கு அவரால் என்ன ஆக முடியும்?

மேலும் இப்போதெல்லாம் வயது 55 ஆன பின்னும் அவர்களின் திறமை, அனுபவம் கருதி தொடர்ந்து 'தற்காலிக ஊழியர்களாக' வைத்துக் கொள்ள அரசாங்கமும், தனியார் நிறுவனங்களும் விரும்புகின்றன. அதிலேயும் "ஆள்பார்த்து" செய்யப்படுவதும் உண்டு. உள்ளபடியே அனுபவசாலிகளைவேலையினின்று இழந்து விடுவதால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கோ, அலுவலகத்துக்கோ பெரிய இழப்பு ஏற்படுகின்றது. புதியவர்கள் படித்தவர்களாக பட்டம் பெற்றவர்களாக இருப்பினும் அனுபவத்தோடு உள்ள வேலைக்காரர்களுக்கு நிகராக அவர்கள் இருப்பதில்லை.

வேலை ஓய்வு பெறுவதைப் பேராசிரியர் சந்தோஷம் அவர்களின் நோக்கப்படி 55 வயதிலிருந்து 65 வரை ஆக்குவது சிறப்பு. அது சாத்தியப்படாவிட்டாலும் 60 வயது வரையாவது ஆக்குவது சாத்தியமாகும்.

இதனால் ஓர் ஊழியரின் வெறுமை போக்கப்படுகின்றது. அவருக்கு வாழ்க்கையின் மீது தொடர்ந்து நம்பிக்கை உண்டாகிறது. அவர் சிரம தசையிலிருந்து மீட்கப்படுகின்றார். மேலும் அவரின் அனுபவமும் திறமையும் தொடர்ந்து பயன்படுகின்றது. எனவே இதனை அரசு ஆய்வு செய்வது நலம். அதனோடு வேலை ஓய்வுபெற்ற ஊழியர்களின் வாழ்க்கை நிலை குறித்து ஆய்வு நடத்துவதும் பயன்தரக்கூடியதாகும். ●

"ஆட்டுக்கு வால் அளந்துதான் வைத்திருக்கிறது" என்ற பழமொழிக்கு கி. வ. ஜகந்நாதன் கீழ்வருமாறு விளக்கம் அளித்துள்ளார். "இறைவன் அவனவனுக்கு ஏற்றபடி கருவிகளை அமைப்பான் என்ற கருத்தில் வழங்குவது இப்பழமொழி. ஆடும் மாடும் ஒரே

ஆட்டுக்கு....

இனமாக இருப்பவை. மாட்டுக்கு வால் நீளம், ஆட்டுக்குக் குட்டை. பலவேலிகளில் புகுந்து மேயும் இயல்புடைய ஆட்டுக்கு நீள்மாக இருந்தால் அது எங்கேனும் மாட்டிக் கொள்ளுமாதலால் இயற்கையில் அதன் வால் சிறியதாக அமைந்திருக்கிறது."



"என்னப்பா, இன்னும் எத்தனை வருஷத்துக்கு" எல்" போர்டு"

"என் மனைவியோட உடம்பு குறையுற வரைக்கும்!"

ஏழ்பிறவி

கண்ணதாசன்

உடைந்துபோன ஒரு மண்பானையின் கழுத்து பூமியில் கிடந்தது.

வழிப்போக்கன் ஒருவன் அதைக் கவனிக்காமல் மிதிக்கப் போனான்.

"மிதிக்காதே, மிதிக்காதே! நான் ஒரு பானையின் கழுத்து!" என்று சத்தம் போட்டது அது.

வழிப்போக்கன் சிரித்தான்!

"இனி உனக்கென்ன வாழ்வு? உன்னை மிதித்தாலென்ன? நீ இப்பொழுது பானையல்ல; உடைந்து போன அதன் கழுத்து!"

கழுத்து இதைக் கேட்டுச் சிரித்தது.

"முன்பு நான் பானை; இப்போது கழுத்து; நாளை மீண்டும் களிமண்; பிறகு ஒரு புதிய பானை. நீ...?"

வழிப்போக்கன் யோசித்தான். அதைத் தொட்டுக் கும்பிட்டு விட்டுத் தன் வழியே போனான்.

கலையுலக வினா-விடை

பரிதாமணாளன்

ஒ. எம். சுல்தான், ஈப்போ

கே: எம். ஜி. ஆர். நடித்த "நவரத்தினம்" என்ன கதை?

ப: எம். ஜி. ஆர். படங்களைக் கதைக்காகப் பார்த்தால் ரசிக்க முடியாது. ஆபத்தில் சிக்கியவர்களுக்குத் தக்க நேரத்தில் சென்று உதவுவதுதான் எம். ஜி. ஆரின் படக்கதை. நவரத்தினத்தில் நவரத்தினங்களானஒன்பது பெண்களுடன் வலம் வருகிருர்.

அ. கணேசன், தெலுக்கான்சன்

கே: சென்னையில் எம் ஜி. ஆர்., சிவாஜி படங்கள் தற்போது நன்கு ஓடுகின்றனவா?

ப: புதிய படங்கள் தியேட்டரை விட்டுத் தான் வேகமாக ஓடுகின்றன. ஆனல் பழைய படங்கள் நல்ல வசூலைத் தருகின்றன. எம் .ஜி. ஆரும் சிவாஜியும் சேர்ந்து நடித்த "கூண்டுக்கிளி" சென்னையில் நல்ல வெற்றி கண்டுள்ளது.

கே. சுகுமாரன், பத்தாங்பெர்சுந்தை

கே: "காலங்களில் அவள் வசந்தம்" எப்படி?

ப: இனிய பாடல்களும் நல்ல கருத்தும் கொண்ட படம் "காலங்களில் அவள் வசந்தம்"

அஞ்சு ராமச்சந்திரன், பத்தாங்காலி தோட்டம்

கே: லதாவின் முதல் தமிழ்ப்படம் எது?

ப. "உலகம் சுற்றும் வாலிபன்" மூலம் நடிகை லதா பிரபலமானுலும் இதற்கு முன் நடிகை சாவித்திரி தயாரித்த "பிராப்தம்" தமிழ்ப் படத்தில் நடித்துள்ளார்.

தாரா எழிலழகன், சுங்கைவே, கோலாலம்பூர்

கே: அடிக்கடி சினிமா கலைஞர்கள் இங்கு வருகிருர்களே, அவர்களாக அறிவித்துவிட்டு வருகிருர்களா? இங்குள்ளவர்கள் ஏற்பாடு செய்து வரவழைக்கிருர்களா?

ப: இங்குள்ளவர்கள்தான் ஏற்பாடு செய்து வரவழைக்கிருர்கள்.

எஸ். எஸ். வேலன், கிள்ளான்

கே: அண்ணு! தமிழகத்திலிருந்து இங்கு நிகழ்ச்சிகளை நடத்தவரும் தமிழகக் கலைஞர்கள் மலேசிய மக்களை அதிகமாகப் புகழ்வதன் நோக்கம் என்ன?

ப: மலேசிய மக்களின் ரசிகத் தன்மை உயர்ந்து காணப்படுவதால் அவர்கள் புகழ்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை.

இரா. இராமராவ், தலைநகர்

கே: யார் நடிக்கும் படங்களுக்கு இப்பொழுது கிராக்கி அதிகம்?

ப: எம்.ஜி.ஆர். படங்களுக்குத் தான் எப்போதும் கிராக்கி இருந்து வருகிறது.

ஏ. கமலாதேவி, பினங்கு

கே: கமலஹாசன் நாடகங்களில் நடித்திருக்கிருரா?

ப: டி, கே. எஸ். நாடகக் குழுவில் கமலஹாசன் பாடி, நடித்து வந்திருக்கிருர்.

எஸ். தேவி, பூலோகசாப், சிகாமட்

கே: சிவகுமார், விஜயகுமார் இவர்களில் இப்போது அதிகப் படங்களில் நடித்து வருவது யார்?

ப: விஜயகுமார்தான் இப்போது அதிகப் படங்களில் நடித்து வருகிருர்.

எம். குணசேகரன், பாரிட் புந்தார்


கே: மக்கள் திலகத்தின் அடுத்த நடிப்பை எந்தப் படத்தில் காணலாம்?

ப: "நவரத்தினத்"தில் கண்டு களிக்கலாம்.

தன்னைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டதற்காக வீட்டை விட்டே வெளியேறும் நிலைமைக்கு ஆளான தன் அன்புக் காதலன் சந்திரசேகரனை எப்பாடு பட்டேனும் தன் மாமனர் எதிரே செல்வாக்குள்ள மனிதராக உயர்த்த வேண்டுமென்கிற வைராக்கியம் கொண்டிருக்கிருள் பிரியா.

சந்திரசேகரனுக்கோ......... பிரியாவைத் திருமணம் செய்துகொண்டு தனித்து வாழத் தொடங்கியதிலிருந்து ஒரே இடையூறுகள்! தந்தையுடன் எதிர்த்துக்கொண்டு வந்து தான் விரும்பியவளை மணமுடித்துக்கொண்ட காரணத்தால் பலவகைகளிலும் அவனுக்குச் சோதனைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிருர் சந்திரசேகரனின் அப்பா! ஆனல் பிரியாவோ... தன் மாமனருடன் தான் விட்ட சவாலை நிறைவேற்றி கணவரை உயர்ந்த மனிதனுகத்துடிக்கிருள்...... இப்படியாகச் செல்கின்றது மெரினு மூவீஸ் "எல்லாம் அவளே" படக்கதை.

சந்திரசேகரனுக மு. க. முத்து, பிரியாவாக சந்திரகலா. அமிர்தம் டைரக்ட் செய்கிருர்.



துணையமைச்சர் பத்மாவுடன் சந்திப்பு

மாண்புமிகு கு. பத்மநாபன் அவர்கள் தொழிலாளர், மனித ஆற்றல் துறையின் துணையமைச்சராக நியமனம் பெற்றது நாட்றிந்த செய்தி; ஆனாலும் அது பழைய செய்தியாயிற்றே! எனவே இளைய சமுதாயத்தின் பிரதிநிதியாக விளங்கும் அவரிடமிருந்து புதிய செய்திகளைப் பெற்றுச் சமுதாயத்திற்கு வழங்கப் "புதிய சமுதாயம்" விரும்பியது.

அரசாங்க அதிகாரிகள், பிரச்சினைகளைக் களைய முறையிட வந்தவர்கள், வாழ்த்துக் கூற வந்தவர்கள், பரிந்துரை பெற வந்தவர்கள் - இப்படிப் பலதரப்பட்டவர்களால் வரவேற்பறை நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. கட்டுக்கட்டாகக் கடிதங்களும், தந்திகளும் வந்து குவிந்தவண்ணம் இருந்தன. போதாக்குறைக்குத் தொலைபேசிக் கருவிகள் வேறு நிமிடத்திற்கு இருமுறை ''கிணுகிணு"த்துக்கொண்டிருந்தன. நண்பகல் உணவுகொள்ளவும் நேரமின்றி "சோயாப் பருப்புப் பாலை" மட்டும் பருகிவிட்டுச் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தார் துணையமைச்சர். இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில் பேட்டியாவது, கிடைப்பதாவது என்று மனந்தளரும் நிலையும் ஏற்பட்டது, நெடுநேரம் காத்திருந்தபின்னர், வந்திருந்தோர் எண்ணிக்கை சற்றுக் குறைந்தது. ''புதிய சமுதாயத்தை"த் துணையமைச்சர் மறந்துவிடவில்லை என்பது தெளிவாயிற்று; எதிர்பார்த்த பேட்டி கிடைத்தது. பேட்டி துவங்குவதற்கு முன்பாக, "புதிய சமுதாயத்தின்" வாழ்த்துகளைத் துணையமைச்சர் புன்முறுவலோடு ஏற்றுக்கொண்டார்.

கே: மக்களுக்கு அரசாங்கம் செய்துதரக் கடமைப்பட்ட அடிப்படை வசதிகளான நீர், மின்சாரம் போன்றவை தோட்டத் தொழிலாளர்களுக்குச் சரிவரக் கிடைப்பதில்லை. இதுபற்றி வினவினால், தோட்டங்கள் தனியார் உடைமைகள் என்று பதில் வருகிறது. தோட்டத்தில் வாழும் மக்களும், இந்நாட்டின் குடிமக்கள்தாமே!

ப: தோட்டங்கள் தனியார் உடைமை என்பது உண்மைதான். ஆயினும், அடிப்படை வசதிகளும் வளர்ச்சித் திட்டங்களும் தோட்டத்தில் வாழும் மக்களையும் எட்டவேண்டும் என்றுதான் அரசு விரும்புகிறது. மூன்றாவது மலேசியத் திட்டத்தில் இது குறித்துத் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் எந்த வழியில் செயலாக்குவது என்பதுதான் பிரச்சினையாக உள்ளது.

நீர் மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதில் அரசும் தோட்ட நிர்வாகமும் இணைந்து செயல்பட வேண்டும்; பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளவேண்டும். அண்மைக் காலமாக, இப்பிரச்சினையில் தோட்ட முதலாளிகளுக்கு அரசாங்கம் அழுத்தம் கொடுத்து வருகிறது. தேசிய மின்சார வாரியத்தின் மின்வசதி, தோட்டங்களை ஒட்டிச்செல்லும் இடங்களில் மின்சாரத் தொடர்பைப் பெற்றுத் தோட்டங்களுக்குத் தர முதலாளிகள் இணங்கியுள்ளனர்.

அரசாங்கத்தின் வளர்ச்சித்திட்டங்கள் தோட்டங்களை முழுமையாக எட்டவில்லை என்பது உண்மையே; ஆயினும் நிலைமை படிப்படியாக மாறி வருகிறது என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். எடுத்துக்காட்டாக ஒன்று சொல்கிறேன் கேளுங்கள்! நான் படித்த காலத்தில், இடைநிலைப் பள்ளிக்குச் செல்ல 25 மைல் பயணம் செய்ய வேண்டிய நிலையில் இருந்தேன். ஆனால் இன்று பல தோட்டங்களுக்கு அருகிலேயே இடைநிலைப்பள்ளிகள் அமைந்துள்ளன; இது நல்ல ஒரு மாற்றமல்லவா?

நடமாடும் மருந்தகங்கள்

கே: தோட்டங்களின் மருத்துவ வசதியும் சுகாதார நிலைமையும் இத்துறைகளில் நாடு கண்டுள்ள வளர்ச்சியோடு ஒப்பிட முடியாத நிலையில் உள்ளன. அரசு ஏதேனும் செய்யவேண்டியது அவசியமல்லவா?

ப: தோட்டங்களில் மருத்துவ, சுகாதார வசதிகளை அரசாங்கம் நேரடியாக அமைப்பதில்லை. ஆயினும் "நடமாடும் மருந்தகங்கள்" இன்று பல தோட்டங்களுக்குச் சென்று சேவையாற்றி வருகின்றன. இப்பிரச்சினையைப் பொறுத்தவரை இதுவரை செய்யப்பட்டுள்ளவற்றில் நமக்கு முழுமையான திருப்தி இல்லையெனினும், நிச்சயமாக வளர்ச்சிப்பாதையில் சென்றுகொண்டிருக்கிறோம் என்று உறுதியாகக் கூறுவேன். தேர்ச்சி பெற்ற மருத்துவர் பற்றாக்குறை இருப்பதால், உடனடியாகத்திட்டங்களை விரிவுபடுத்த அரசாங்கத்தால் இயலவில்லை. போதுமான வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று தோட்ட முதலாளிகளுக்கு அரசாங்கம் நெருக்குதல் கொடுத்து



துணையமைச்சரின் குடும்பம்

நடுப்பையன் பிரசாத், திருமதி பிரேமா பத்மநாபன், கடைக்குட்டி பிரமோக், மூத்தவன் பிராவிண்ட், துணையமைச்சர் பத்மநாபன்.

வருகிறது. ஆயினும் அரசாங்கத்தைப் போலவே அவர்களும் தேர்ச்சிபெற்றோர் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றனர் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

கே: நாட்டின் வளர்ச்சித் திட்டங்களில் தோட்ட மக்களுக்கு எத்தகைய பங்கு கிடைத்திருக்கிறது என்று தாங்கள் கருதுகிறீர்கள்?

ப: வளர்ச்சித்திட்டங்களில் தோட்ட மக்களுக்கு நிச்சயமாகப் பங்கு இருக்கவேண்டும் என்றுதான் அரசாங்கம் விரும்புகிறது. தோட்டங்களுக்கு வெளியே பல வேலை வாய்ப்புக்களும், நில மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற அபிவிருத்தித் திட்டங்களும் உள்ளன. கொள்கையளவில் இந்தியர்களுக்குப் பல சலுகைகள் ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளன. அவற்றை முழுமையாகப் பயன் படுத்திக் கொள்ள நாம் முன்வரவேண்டும்.

மத்திய அரசு, மாநில அரசு, தோட்ட நிர்வாகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக இப்பொழுது செயல்பட்டுவரும் வீட்டுடைமைத் திட்டத்தைப்பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். இத்திட்டத்துக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து இந்த ஆண்டு நான் கவனித்து வருகிறேன். நான்கு ஐந்து இடங்களில் இவ்வாண்டு வீடுகள் கட்டப் படுகின்றன.

மாற்றங்கள் நிச்சயமாக நடக்கின்றன; அதில் ஐயமே இல்லை. ஆனால் இன்னும் தீவிரமாக்க வேண்டும்; அவ்வளவுதான்.

வேலை இல்லாதவர்கள்


கே: இந்நாட்டின் மக்கள் தொகையில் மூன்றாவதாக இருக்கும் நாம், வேலையில்லாதோர் எண்ணிக்கையில் மட்டும் முதலிடத்தைப் பெறுகிறோம் என்று புள்ளிவிவரம் காட்டுகிறது. இந்த நிலை ஏன் வந்தது? காரணம் கூறுவீர்களா?

ப: 1965, 1966, 1967-ஆம் ஆண்டுவாக்கில் வேலையில்லாதோர் எண்ணிக்கை மூன்று இனங்களிடையேயும் சமமாகத்தான் (ஏறத்தாழ ஆறு விழுக்காடு) இருந்தது. ஆனால் 1975-ஆம் ஆண்டில் இந்தியர்கள் 12.2 விழுக்காடு, சீனர்கள் 7.7 விழுக்காடு, மலாய்க்காரர்கள் 6.5 விழுக்காடு என்று மாறி விட்டது. இம்மாற்றம் திடீரென்று ஏற்பட்டதல்ல. ஒரு சில காரணங்களால் படிப்படியாக உண்டானது.

தோட்டத்துண்டாடல், வேலை பெர்மிட் போன்றவை இந்தியர்களின் வேலை வாய்ப்புகளைப் பெரிதும் பாதித்தன. போதுமான கல்வித்தகுதியோடோ, கல்வித் தகுதியில்லாமலோ தகுந்த முன்னேற்பாடின்றி, செய்யும் வேலையையும் விட்டுவிட்டுத் தோட்டங்களிலிருந்து பட்டணங்களுக்கு வேலை தேடிவரும் இளைஞர்களின் எண்ணிக்கை பெருகியதும் ஒரு காரணம்.

ஒரு குறிப்பிட்ட தொழிலோடு ஒரு குறிப்பிட்ட இனத்தைத் தொடர்பு படுத்தும் வழக்கத்தை மாற்றுவதும் புதிய பொருளாதாரக் கொள்கையின் ஒரு நோக்கமாக இருக்கிறது. இதனால் சமுதாயத்தின் அமைப்புக்கூறுகளையே மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒரு தோட்டத்தில் வேலை செய்யும் இந்தியர்களின் எண்ணிக்கை, எழுபது விழுக்காட்டுக்கும் அதிகமாக இருந்தால், அங்கு உருவாகும் புதிய வேலை வாய்ப்புகள் பிற இனச் சகோதரர்களுக்குத் தரப்பட்டன. அதே வேளையில், பட்டணங்களிலும் இந்தியர்களின் வேலை வாய்ப்புகள் பாதிக்கப்பட்டன.

இப்படிப்பட்ட பல காரணங்களின் கூட்டு விளைவாகவே நம்மிடையே வேலையில்லாதோர் எண்ணிக்கை உயர்ந்தது.



கவிதை ஊற்று

'லதா'

பாரதி தாசன் பேரைப்
பகர்ந்திடக் கேட்ட போதில்
காரணம் கேட்க அஞ்சித்
தமிழ்ப்பகை கடுகி ஓடும்!
ஓரமாய் ஒதுங்கிப் போகும்
உண்மையும் நிமிர்ந்து நிற்கும்!
சாரதி ஆனான் "தாசன்"
சடுதியில் தமிழ்த்தேர் ஓட!

மாதராய் அடிமை போக்கி
மலிந்திடும் பேதம் நீக்கி
ஓதலின் ஆற்றல் காட்டி
உயர்ந்திட நிதமும் பாடி
காதலின் அழகு தீட்டிக்
கவிதைகள் குவித்துச் சென்றான்!
ஆதலால் தமிழுக் கன்னோன்
ஆணிவே ராகி நின்றான்!

மாய்ந்திடும் தமிழ்ச் சாதி
மறுபிறப் பெடுப்ப தற்கே
பாய்ந்திடும் வெள்ள மானான்!
பறந்தது தொழும்பர் கூட்டம்!
காய்ந்திடும் பயிருக் கெல்லாம்
கவின்பெறு மேக மானான்!
ஓய்ந்திடாக் கவிதை ஊற்றால்
உயர்த்தியே உயர்ந்தான் பாவேந்தா!

[29.4.1891 புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள்]

கே: இந்த நிலையை மாற்றியமைக்க வழிவகைகள் என்ன?

ப: இன்று நம் நாட்டில் வேலை வாய்ப்புகளைப் பொறுத்தவரை யாருக்கும் கதவடைப்பு இருப்பதாகச் சொல்ல முடியாது; அரசாங்கத்துறையிலும் இல்லை; தனியார் துறையிலும் இல்லை.

வேலை வாய்ப்புகள் உள்ளன; ஆனால் நாம் தான் அவற்றைத் தேடிப் பெறவேண்டும். கல்வி, பயிற்சி, அனுபவம் போன்றவற்றைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்; வாழும் சூழ்நிலையையும் மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும். ஆனால், வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் நிலையில் நம்மில் பெரும்பாலோர் இன்று இல்லை என்பதை வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன்.

கூடிய பொறுப்பு

கே: அரசாங்க அதிகாரியாகவும் நாடாளுமன்றச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளீர்கள். இப்போது துணையமைச்சராகப் பொறுப்பு ஏற்றிருக்கிறீர்கள். இம்மூன்று பொறுப்புகளிடையே என்ன வேறுபாடுகளைக் காண்கிறீர்கள்?

ப: பொறுப்புகளில் வேறுபாடுகள் அதிகம் இருப்பதாகக் கூற இயலாது. ஆனால் செயல்படும் முறைகளில் வேறுபாடுகள் உள்ளன. வேறுபாடுகள் உண்டோ இல்லையோ, பொறுப்புகள் கூடிவிட்டன என்பது உண்மை.

கே: அரசியலில் ஈடுபடும் ஆர்வம் தங்களுக்கு எப்போது, எப்படி ஏற்பட்டது?

ப: நேரடியாக அரசியலில் ஈடுபட்டது, கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளாகத்தான் என்றாலும், நீண்ட காலமாகவே எனக்கு அரசியலில் பிடிப்பும் ஆர்வமும் இருந்து வந்துள்ளன. அரசியல் ஈடுபாடு மூலமாகத்தான் நம் சமுதாயம் உயரமுடியும் என்று உறுதியாக நம்புபவன் நான்.

1960-ஆம் ஆண்டுவாக்கில் தொழிலாளர் அமைச்சில் அதிகாரியாக இருந்தபோது, துன் வீ.தி. சம்பந்தன், டான்ஸ்ரீ வெ. மாணிக்கவாசகம் ஆகியோரின் தொடர்பு எனக்குக் கிட்டியது. சமுதாயத் தொடர்பு. அரசியல் ஈடுபாடும் கொள்ள அவர்களின்தொடர்பும் எனக்கு உதவியது. ஆயினும் நேரடியாக நான் அரசியலில் ஈடுபட முக்கிய காரணமாக இருந்தவர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் அவர்கள்தாம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கே: ம.இ.கா.வின் எதிர்காலமும் ம.இ.கா.வின் வழி இந்தியர்களின் எதிர்காலமும் எப்படி இருக்கும்என்று கூறுவீர்களா?

ப: ம. இ. கா.வின் எதிர்காலம் இந்தியர்களைப் பொறுத்திருக்கிறது. இந்தியர்களின் எதிர்காலம் ம. இ. கா.வைப் பொறுத்திருக்கிறது. ம. இ. கா.வின் மூலம்தான் நம் சமுதாயம் இந்நாட்டில் வளர்ச்சி பெற முடியும், முன்னேற்றம் காண முடியும் என்று நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். இதில் மாறுபட்ட கருத்துக்கு இடமே இல்லை.

கே: "புதிய சமுதாயம்" வெளிவருவதற்கு முன்பே அன்பு கூர்ந்து வாழ்த்துத் தெரிவித்திருந்தீர்கள். இப்போது ஒரு வாசகர் என்னும் முறையில் தங்கள் கருத்துகளைத் தெரிந்து கொள்ளலாமா?

ப: வெளிவந்துள்ள இரண்டு இதழ்களையும் படித்தேன். ஓரிரு குறைகளைக் கண்டேன் என்றாலும் மொத்தத்தில் மனநிறைவு தருவனவாக அமைந்துள்ளன. நீண்ட அனுபவம் வாய்ந்த திரு. முருகு சுப்பிரமணியன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "புதிய சமுதாயம்" இதழ் இந்நாட்டில் ஒரு நிலையான இடம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

துணையமைச்சரின் ஆவல்

கே: "புதிய சமுதாயம்" வழி நம் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ப: சமுதாயம் வளரவேண்டும். புதிய சமுதாயமாக, மாறுபட்ட சமுதாயமாக மலேசிய இந்திய சமுதாயம் இருக்க வேண்டும். உயரவேண்டும் என்னும் குறிக்கோள் உள்ளத்தில் உறுதியாகப் பதிய வேண்டும்; உறுதி தீவிரப்படவேண்டும். இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தத் தலைவர்களால் மட்டும் முடியாது. சமுதாயம் முழுதும் ஒருசேர முயலவேண்டும்; இதை நாம் ஒரு சவாலாகவே ஏற்றுக் கொண்டு செயல்படவேண்டும்.

ஒளிபடைத்த கண்ணும், உறுதி கொண்ட நெஞ்சும், களி படைத்த மொழியும், தெளிவு பெற்ற மதியும்கொண்டு தலைவர்கள் காட்டும் நேர்வழியில் எழுந்து நடக்க நம் சமுதாயம் ஆயத்தமாகும் என்று நம்புவோமாக! ●

—நகைச்சுவைப்பித்தன்–மனோகரன்

சோதனைக்காலம்

"என் சமூகத்தினர் பதினைந்து செயல்களில் ஈடுபட்டுவிட்டால் அதன்பின் சோதனை ஏற்பட்டுவிடும்" என்றுஅண்ணல் நபி[ஸல்]அவர்கள் கூறினார்கள்.

"நாயகமே! அவை எவை?" என்று கேட்டதற்கு அவர்கள், [1] யுத்தத்தில் கிடைத்த பொருள் (அதாவது பொதுப் பொருள்) சொந்தப் பொருளாகி (பங்கீட்டிற்கு இல்லாமலாகிவிடுவது) [2] அமானிதப் பொருள் கொள்ளையடித்த பொருளாகி விடுவது [3] ஜகாத்து விடுக்கப் பட்டுவிட்டது என்று எண்ணிக் கொண்டு விடுவது. [4] கணவன் தன் மனைவிக்கு அடங்கி நடப்பது. [5] தன் நண்பனுக்கு நன்மை புரிந்து தன் தாய்க்கு தீங்கு செய்வது; தன் தந்தைக்கும் அநீதம் செய்வது [6] பள்ளிவாயில்களில் இரைச்சல் போடுவது [7] மக்களின் தலைவன் அவர்களில் கெட்டவனாக இருப்பது [8] மனிதனை -அவன் தீயமைக்குப் பயந்து கண்ணியப் படுத்துவது [9] மதுவுண்ணல் [10] [ஆண்கள்] பட்டு அணிதல் [11] பாடகிகள் ஏற்படுதல் [12] மேளதாளம் வாசிப்பது [13] இந்தச் சமூகத்தினரில் பிந்தியவர்கள் முந்தியவர்களைச் சபிப்பது [14, 15] ஆகியவை 5ல் அடங்கிவிட்டது]

இத்தகைய சமயத்தில் சிவப்பு நிறமான புயல் பூமியில் அடிப்பதும் பூமி செருகிவிடுவதும் தோற்றம் மாறுபட்டு விடுவதும் கல்மாரி பொழிவதும் ஆகிய இந்த அடையாளங்களை எதிர்பாருங்கள் என்று கூறினர்.

—அல்ஹதீஸ்

புதிய சமுதாயத்தில் இடம்பெறும் கதை, கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.